# செம்மணி

நிலம் 2 துகள் 89 வள்ளுவர் ஆண்டு 2052, 02 - 08 சித்திரை 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-



## ஆட்சியாளர்களை எதிர்த்து நாடே அணி திரள்கிறது!

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் இல்லத்தின் அருகில் வன்முறைப் போராட்டத்தில் ஈடுபட்டடார்கள், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்கிற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 45 பேருக்கும் ஆதரவாக நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை 300 சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் முற்பட்டார்கள்.

அரச தலைவர் இல்லத்தின் அருகே போராட்டத்தில் ஈடுபட்டவர்களை முன்னதாக சிறப்பு அதிரடிப் படையினரும் காவல்துறையினரும் இணைந்து கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியும் நீர்த்தாரைப் பிரயோகம் செய்தும் கலைத்தனர். அத்தியாவசியப் பொருள்கள் சந்தையில் இல்லாமை, பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்றவற்றைக் கண்டித்து, அரச தலைவர் கோட்டாபயவைப் பதவி விலகுமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. எனினும் அடிப்படைவாதக் கும்பலே இதில் பங்கெடுத்துக்கொண்டதாக அரச தலைவர் செயலகம் தனது அறிக்கை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியிருந்தது.

வன்முறையில் ஈடுபட்டார்கள் என்கிற குற்றச்சாட்டில் போராட்டக்காரர்கள் 45 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் மீரிகான காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்காக தாங்கள் முற்படுகிறார்கள் என்று தெரிவித்து 300க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் காவல் நிலையம் முன்பாகக் கூடினர்.

கைதானவர்களுக்கு இலவசமாக சட்ட உதவிகளை வழங்குவதற்குத் தாம் வந்திருக்கிறார்கள் என்று அவர்கள் கூறினர். அவர்கள் முன்பாகவே சந்தேகநபர்களை காவல்துறையினர் வாகனத் பக்கம் 02

## அமைச்சரவையைக் கலைத்து காபந்து ஆட்சியே வேண்டும்

### ராஜபக்சக்களின் முன்னாள் சகாக்கள் வலியுறுத்து

தற்போதைய அமைச்சரவையைக் கலைத்துவிட்டு அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநித்துவத்தை உள்ளடக்கிய காபந்து ஆட்சியை உடன் நிறுவவேண்டும் ஆட்சியாளர்களில் அதிருப்தியடைந்திருக்கும் ஆட்சிப் பங்காளிகளான 11 கட்சிகளின் தலைவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவிடம் அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. அமைச்சரவையைக் கலைத்துவிட்டு நாட்டின் நலன் கருதி நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் உள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய காபந்து ஆட்சி ஒன்றை உருவாக்கவேண்டும் என்றும் பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

ராஜபக்ச ஆட்சியாளர்கள் மீது கடும் அதிருப்தியுடைய பக்கம் 02

## அரசுடன் விரைவில் பேச்சை தொடக்குகிறது ஐ.எம்.எவ்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் இருந்து அதனை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் இன்னும் ஒரிரு நாட்களில் ஆட்சித் தரப்பினருடன் பேச்சு நடத்த உள்ளதாக பன்னாட்டு நாணய நிதியம் அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உதவியைக் கொழும்பு நாடியிருப்பதை அடுத்து இன்னும் ஒரிரு நாட்களில் பேச்சுக்கள் தொடங்கும் என்று பன்னாட்டு நாணய நிதிய பேச்சாளர் கிரே ரைஸ் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அடுத்த மாதம் அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனுக்கு வருகை தரும்போது நாணய நிதியத்தின் உதவித் திட்டங்கள் தொடர்பில் நேரிலும் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுடன் பேச்சு நடத்துவதற்காக அமைச்சர் இந்தப் பயிற்சியை மேற்கொள்கிறார்.

"இலங்கை அதிகாரிகள் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவுடனான பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்" பக்கம் 02

## 2ஆவது நாளாகவும் கொழும்பில் இரவுநேர ஊரடங்கு உத்தரவு

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் வீட்டருகே வியாழக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடிய வன்முறையில் ஈடுபட்டதை அடுத்து இரண்டாவது நாளாக வெள்ளிக்கிழ நள்ளிரவு முதல் சனிக்கிழமை காலை 6 மணி வரையும் மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

மேல் மாகாணம் முழுவதிலும் இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று காவல்துறைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அரச தலைவர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க காவல் பக்கம் 02

## ஆட்சியாளர்களின் கருத்துக்கு தலைவர்கள் கடும் கண்டனம்

அரச தலைவரின் இல்லம் அமைந்துள்ள மீரிகானவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்ட 54 பேரையும் தீவிரவாதிகள் போன்று கருத்துத் தெரிவிப்பதை நிறுத்தவேண்டும் என்றும் ஆட்சியாளர்களுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீரிகான சம்பவத்தை அடுத்து, அங்கு வன்முறையில் ஈடுபட்டவர்கள் அடிப்படைவாதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்றும் எதிர்கட்சியினருடன் தொடர்புடையவர்கள் என்றும் அரச தலைவர் செயலகம் தெரிவித்திருந்தது. ஆட்சியாளர்களின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாததால்தான் மீரிகான சம்பவ் வெடித்தது. இது இனவாத வன்முறையும் அல்ல பயங்கரவாதச் சம்பவமும் அல்ல என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

தற்போதைய அரசியல் கட்டமைப்பின் வீழ்ச்சியே இதற்கெல்லாம் காரணம் என்று தெரிவித்தார். ஆட்சியாளர்கள் இனவாதக் கருத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும், அதேவேளை யார் இந்த வன்முறைகளுக்குக் காரணம் என்பதையும் அரசு வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக எவரையும் காயப்படுத்தக்கூடாது-மக்களிற்கு அமைதியாகவும் சுதந்திரமாகவும் போராட உரிமையுண்டு, பொது மக்களின் ஆர்ப்பாட்டங்களில் அரசியல் கட்சிகள் பங்கெடுக்க கூடாது.

ஆனால் அரசியல் கட்சிகள் தங்கள் கூட்டங்களையும்,ஆர்ப்பாட்டங்களையும் பக்கம் 02



## "எழுந்திரு சிறிலங்கா" சனத் அழைப்பு

இலங்கையின் முன்னாள் கிரிகெட் வீரரான சனத் ஜயசூரிய, நாட்டு மக்கள் அனைவரும் ஒரே மக்களாக சிறந்த நாட்டை உருவாக்க ஒன்றிணையவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

சமூக ஊடகங்களில் அவர் பகிர்ந்திருக்கும் பதிவில் மக்களை மதம், சாதி, இனம், மதம் அல்லது கட்சியின் நிறம் என்பவற்றால் பிளவுண்டு நிற்கவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த பல மாதங்களாகவே இலங்கையர்களான நாம் பல்வேறு துன்பங்களையும் அனுபவித்து வருகின்றோம். எல்லாவற்றுக்கும் எல்லோருக்கும் பக்கம் 02



## சிமெந்து விலை மீள அதிகரிப்பு

சிமெந்து விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக விற்பனை முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, 50 கிலோகிராம் சிமெந்து பொதியொன்றின் விலை 500 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

1,850 ரூபாவாக காணப்பட்ட 50 கிலோகிராம் சிமெந்து பொதியின் விலை புதிய விலை 2, 350 ரூபாவாக அதிகரித்துள்ளது.

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்


# போராட்டத் தலைமையையும் தெற்குக்கு விட்டுக்கொடுக்கும் தமிழ் அரசியல் தலைவர்கள்

நாட்டில் டீசல் இல்லை, மின்சாரம் இல்லை, எரிவாயு இல்லை, பால் மா இல்லை, பொருள் வாங்கப் பணம் இல்லை, பணம் இருந்தாலும் பொருள் இல்லை என்ற நிலையில் தெற்கில் மக்கள் தமது பொறுமையின் எல்லையைக் கடக்கத் தொடங்கிவிட்டார்கள். அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் வீட்டருகே நடந்த ஆர்ப்பாட்டமும் வன்முறைகளும் கைதுகளும் இவற்றையே வெளிப்படுத்துகின்றன.

போராட்டக்காரர்கள் அடிப்படைவாதக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களுக்கு அரச தலைவர் செயலகம் தீவிரவாதப் பட்டம் சூட்டினாலும் அரசுக்கு எதிரான மக்களின் கோபம் கிளர்ச்சியாக மாறுகின்றது என்பதை அல்லது அதற்கான எரிபற்று நிலையை மக்கள் அடைந்துவிட்டார்கள் என்பதை அரசுத் தலைவர்கள் உணராமலில்லை. கொழும்பு பதற்றமடைந்ததும் அங்கு இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதும் தலைவர்கள் நிலமையைச் சரிவர உணர்ந்தே இருக்கிறார்கள் என்பதற்கு அடையாம்.

இப்படி நாடே அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துகொண்டும் கிளர்ந்தெழத் தயாராகிக்கொண்டும் இருக்கையில் வழக்கமாக ஆட்சியாளர்களுக்கு எதிராக அதுவும் ராஜபக்ச ஆட்சிக்கு எதிராகக் ஓங்கிக் குரல் கொடுக்கக்கூடிய போராட்டக்காரர்களான தமிழர்கள் அமைதியாக இருக்கிறார்கள். தெற்கில் சிங்கள பௌத்த மக்கள் எவ்வளவு துன்பத்தையும் துயரத்தையும் அனுபவிக்கிறார்களோ அதேயளவு துன்பத்தையும் துயரத்தையும் இன்னும் சொல்லப்போனால் போர்ப் பாதிப்பிலிருந்து மெல்ல மெல்ல இப்போதுதான் மீண்டுவர முயற்சிக்கும் தமிழ் மக்கள் சிங்கள மக்களைவிட இன்னும் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவிக்கும் நிலையிலும் எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் ஈடுபடவில்லை. அதற்கான அறிகுறிகளும் இல்லை.

அத்தகைய தூண்டலை வழங்கவேண்டிய தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் அதுபற்றி மூச்சுக்கூட விடவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. அரச தலைவருடன் இப்போதுதான் பேச்சுக்களைத் தொடங்கியிருக்கும் நிலையில் அவருக்கும் அவரது ஆட்சிக்கும் எதிரான போராட்டங்களை நடத்துவது பிழையான சமிக்ஞைகளை வழங்கக்கூடும் என்று கருதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் அத்தகைய போராட்டங்களில் இருந்து தன்னைத் தூர விலக்கி நிறுத்திக்கொண்டிருக்கின்றது என்றால், கூட்டமைப்பின் எதிராளிகளான ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும்கூட மக்கள் போராட்டத்திற்குத் தயாராகவும் இல்லை. மக்களைத் தயார்ப்படுத்தவும் இல்லை.

இந்த நிலையில்தான் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஒரு போராட்டம் இன்றைய ஆட்சியாளர்களுக்கு எதிராக நடத்தப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. டசின் கணக்கான மக்கள் அதில் கலந்துகொண்டனர். ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னணிப் பெண் அரசியல்வாதியான கிருணிகா உள்ளிட்ட சிலர் இந்தப் போராட்டத்தை வழி நடத்தினார்கள். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள், அவர்கள் யாழ்ப்பாணத்து மக்களல்லர் என்று தமிழ் அரசியல் கட்சிகள் காரணம் கூறினாலும்கூட தமிழர்களின் போராட்டத்துக்கான தலைமையையும் தெற்கைச் சேர்ந்த கட்சிகளிடமே கையளிக்கும் கைங்கர்யத்தைத்தான் தமிழ் அரசியல் கட்சிகள் செய்துவருகின்றன என்பதை இந்தப் போராட்டம் உணர்த்தி நிற்கின்றது.

**2020** பொதுத் தேர்தலில் ஏற்கனவே தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கிடையிலான பிணக்குகளின் வாயிலாக தெற்கைச் சேர்ந்த அரசியல் கட்சிகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு நாடாளுமன்றப் பிரதிநித்துவம் கிட்டுவதற்கு வழியை ஏற்படுத்திக்கொடுத்தன. அதிலும் மாவட்டத்தின் அதிகூடிய விருப்பு வாக்குகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் அங்கஜன் ராமநாதன் வென்றெடுக்கக்கூடியதாகத் தமிழ்க் கட்சிகள் நடந்துகொண்டன. ஏற்கனவே ராஜபக்சக்களின் தீவிர ஆதரவாளரான டக்ளஸ் தேவானந்தா ஒரு உறுதியான வாக்கு வங்கியை ஏற்படுத்திக்கொள்ள வழிவிட்ட தமிழ்த் தலைமைகள் கடந்த பொதுத் தேர்தலின் மூலம் தெற்கைச் சேர்ந்த கட்சிகளும் வடக்கில் உறுதியாகக் காலூன்றுவதற்கு வழிவிட்டன.

இப்போது தமிழர்களின் அழியாச் சொத்தாக இருக்கக்கூடிய போராட்டக் குணத்திற்குத் தலைமைதாங்குவதற்கான வசதி வாய்ப்பையும் வெளியையும் அவை வழங்கியிருக்கின்றன. அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கியிருக்கவேண்டிய தமிழ்த் தலைமைகள், அதிலும் தமிழ்த் தேசியம் பேசும் தமிழ்த் தலைமைகள் விட்டுக்கொடுத்த இடைவெளியே தெற்கு அரசியல் கட்சிகள் போராட்டக் களத்திற்குள்ளும் புகுந்து தலைமைதாங்குவதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கிறது.

நிலமையையின் விபரீதத்தை உணர்ந்து இனியாவது களத்திற்கு வருவார்களா தமிழ்த் தலைவர்கள்?

## ஆட்சியாளர்களை...

தில் ஏற்றி நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்போது சட்டத்தரணிகள் பலத்த கரகோசம் செய்து அவர்களுக்கு உற்சாகமூட்டினர்.

அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தீவிரவாத முத்திரை குத்தி அவர்களைக் கைது செய்து மக்கள் போராட்டங்களை அடக்கப் பார்க்கின்றார்கள் ஆட்சியாளர்கள் என்று சட்டத்தரணிகள் குற்றஞ்சாட்டினார்கள்.

இதற்கிடையில் ஆட்சியாளர்களுக்கு எதிராக கொழும்பின் பல பகுதிகளிலும் வெள்ளிக்கிழமை போராட்டங்கள் இடம்பெற்றது.

பேருவளையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் போராட்டக்காரர்கள் சமையல் எரிவாயு, வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் மின் தடை என்பவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள். இதேபோன்றதொரு போராட்டம் இரத்மலானைப் பகுதியிலும் இடம்பெற்றது.

தாமரைத் தடாகம் அரங்குக்கு முன்பாகத் திரண்ட ஒரு தொகுதி மக்கள் ஆட்சியாளர்கள் மீதான அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இந்தப் போராட்டங்களை அடுத்து காவல்துறையினரும் படையினரும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டம் ஒன்றுக்காக வீதிக்கு இறங்குமாறும் பெரும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. இன, மத, சாதி, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்குவோம் என்று அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## அமைச்சரவையைக்...

டைந்திருக்கும் பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் அண்மைக் காலமாக ஆட்சியாளர்களுக்கு எதிரான காட்டமான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இதன் எதிர்வினையாக அமைச்சர்களாக இருந்தவர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்பன்பில ஆகியோர் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த இருவரின் கட்சிகளையும் உள்ளடக்கியதே இந்தப் 11 கட்சிகளின் அணி. தற்போதைய ஆட்சியின் மீது மக்களுக்கு நம்பிக்கை போய்விட்டது என்பதை வியாழக்கிழமை இரவு நடந்த மக்கள் போராட்டங்கள் உணர்த்துகின்றன என்று விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

## எழுந்திரு...

ஒரு பொறுமை எல்லை இருக்கின்றது. நாம் அந்த எல்லைய அடைந்துவிட்டோம். நேற்றைய (வியாழக்கிழமை) மக்கள் போராட்டம் அப்பாவிப் பொதுமக்களின் துன்பத்தினாலும் அவர்கள் நியாயமற்று அடக்கப்பட்டதனாலும் உருவானது. நாம் அனைவரும் ஒரே மக்களாக எமக்காக எமது பிள்ளைகளுக்காக, வரப்போகிற எமது சந்ததிக்காக எழுந்து நிற்போம் - என்று சனத் தனது அழைப்பில் தெரிவித்துள் ளார்.

எழுந்திரு சிறிலங்கா என்கிற கார்ஷ்டாக் இட்டுள்ள அவர், இது எங்களைப் பற்றியது அவர்களைப் பற்றியதல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அரசுடன்...

என்றார் ரைஸ். "அது தொடர்பான பேச்சுக்களை இலங்கை அதிகாரிகளுடன் அடுத்துவரும் நாட்களில் தொடங்க முடியும் என்று எதிர்பார்க்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ள உலக பொருளாதாரப் பார்வையில் இலங்கை தொடர்பான விவரங்களும் வெளியிடப்படும் என்றார் அவர்.

## ஆட்சியாளர்களின்...

நடத்துவதற்கான உரிமையுண்டு.

தாமதமாகிவிட்டபோதிலும் நாடாளுமன்றத்திற்கும்கடப்பாடு உள்ளது, பொதுமக்களிற்கு தீர்வை வழங்கூடிய தீர்வுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்,

இந்த நெருக்கடிக்கு வன்முறைகள்இன்றி தீர்வு காணப்படும் என எதிர்பார்க்கின்றேன் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மிரிஹானவில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தீவிரவாதிகள் குழுவொன்று கலந்து கொண்டது என்பது எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என ஐக்கிய மக்கள் சக்தி இன்று ஜனாதிபதி ஊடகப் பிரிவிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பில் செய்தியாளர்களை வெள்ளிக்கிழமை சந்தித்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இந்தக் கேள்வியை எழுப்பினார்.

சம்பவம் நடந்து இரண்டு மணி நேரத்திற்குள் அதில் தொடர்புபட்டவர்கள் அடிப்படைவாதத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்பது அரச தலைவர் செயலகத்திற்கு எப்படித் தெரிந்தது? இவ்வளவு குறுகிய நேரத்திற்குள் தீவிரவாதிகள் என்பவர்களை அரசால் எப்படிக் கண்டறிய முடிந்தது?

ஆர்ப்பாட்டத்தின் காட்சிகளை கூர்ந்து அவதானிக்கும்போதும் அரச தலைவரின் செயலக அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி ஆர்ப்பாட்டக்காரர்கள் கையில் கூர்மையான பொருட்களையோ அல்லது தடிகளையோ ஏந்தியிருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஆட்சியாளர்களால் தீவிரவாதிகள் என்று கூறப்படுவோர் உண்மையில் ராஜபக்ச தீவிரவாதிகள் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை திட்டமிடப்பட்டுள்ள போராட்டத்தை நாசப்படுத்தும் முயற்சிகளே இவை என அவர் மேலும் தெரிவித்தார்.

## 2ஆவது...

துறையினர் தமது பலத்தைப் பயன்படுத்தத் தொடங்கியதை அடுத்து பொறுமையிழந்த ஆர்ப் பாட்டக்காரர்கள் வன்முறை யில் ஈடுபடத் தொடங்கினர்.

இதையடுத்து வியாழக் கிழமை நள்ளிரவே ஊர டங்கு உத்தரவு பிறப்பிடிக் கப்பட்டிருந்தது. மீரிகான சம்பத்தில் தொடர்பு பட்ட **45** பேர் கைது செய்யப் பட்டுத் தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றனர்.



# இந்திய அமைச்சரின் பயணமும் பின்னணியும்!

**அலிசாகிர்**

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சில நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து திரும்பியிருந்தார். அவரது பயணத்தில் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்தது குறித்தும் அரசியல் தலைவர்களுடன் அவர் நடத்திய பேச்சுக்கள் குறித்துமே இங்குள்ள தினசரிகள் அதிகம் கரிசனைப்பட்டன. குறிப்பாக அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்புக் குறித்து இந்திய அமைச்சருடன் கலந்துரையாடப்பட்டமை முக்கிய செய்திகளாகியிருந்தன.

இந்த அமளியில் இந்த அமைச்சரின் வருகையுடன் இரு நாடுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட வேறு பல ஒப்பந்தங்கள் குறித்தும் தமிழ்ப் பத்திரிகை உலகம் கண்டும் காணாமலும் கடந்துபோய்விட்டது. ஆனால் அவை எதிர்காலத்தில் இலங்கைத் தீவிலும் தமிழர் வாழ்விலும் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தவல்லன.

இந்திய அமைச்சரின் பயணத்தின்போது ஆறு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. அவற்றை இங்கு சுருக்கமாகக் குறிப்பிட்டால்,

1. இந்திய அரசின் நன்கொடை உதவித் திட்டத்தின் கீழ் இலங்கையில் தனியான டிஜிட்டல் அடையாள முறைமையை அமல்படுத்துதல்.

2. கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை.

3. யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள அனலை தீவு, நெடுந்தீவு, நைனா தீவு ஆகிய மூன்று தீவுகளிலும் கலப்பு மின்சக்தித் திட்டங்களை அமல்படுத்துதல்.

4. இலங்கையில் மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை நல்குதல்.

5. காலி மாவட்டத்திலுள்ள இருநூறு பாடசாலைகளில் பிரத்யேகமான கல்வி மென்பொருளுடன் கூடிய ஸ்மார்ட் அட்டைகளோடு நவீன கணினி ஆய்வுக்கூடங்களின் கட்டுமானத்திற்கு உதவுதல்.

6. வெளிநாட்டுச் சேவைக்கான சுஷ்மா ஸ்வராஜ் நிலையம் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச ராஜதந்திரப் பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை.

இவற்றுள் இரண்டாவதான கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையமானது, இந்திய அரசின் ஆறு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியோடு இலங்கையில் நிறுவப்படவுள்ளது. இது மிக முக்கியமானதொரு ஒப்பந்தம். இலங்கை நிலப்பரப்பு சீன - அமெரிக்க - இந்தியா என்கிற முத்தரப்பு அதிகாரப் போட்டிக்கு மத்தியில் எப்படித் அபகரிக்கப்படப் போகின்றது என்பதை வெட்டவெளிச்சமாக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்திய உளவு விமானங்கள் இலங்கை வானத்தைப் பயன்படுத்தும். இலங்கை தன்னுடைய கடல் மற்றும் வான் பாதுகாப்பை இந்தியாவுடன் நேரடியாகப் பகிர்ந்து கொள்வதாக இதனைக் கருதலாம். அதாவது

**தனது பகுதியின் ஒரு பகுதியாக எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசவையும் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். இந்தியாவின் நகர்வுகளுக்கு அவரது கட்சியின் எதிர்ப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் இந்தச் சந்திப்பு அமைந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம்**

இலங்கையில் இந்தியாவின் அகலக் கால் பதிக்கப்படும் ஒரு தளமாக இது இருக்கும். கடற்பரப்பில் பாதிப்புக்குள்ளாகும் கப்பல்களின் பாதுகாப்பை சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைய உறுதிப்படுத்தவும், இப்பிராந்தியத்துக்குள் பாதிப்புக்குள்ளாகும் கப்பல்கள் தொடர்பான தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்கும் இந்த நிலையம் மிகவும் அவசியம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த உளவுப் பணித் தகவல்கள் இந்தியாவிற்கு பகிரப்படமாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இந்தியப் பெருங்கடல் பரப்பை இந்தியா தெற்கில் கண்காணிப்பதற்கான மையமாக இலங்கையை இந்த ஒப்பந்தத்தின் மூலம் தன்னுள் ஈர்த்துக்கொண்டுள்ளது.

இந்தியாவின் இந்த நகர்விற்குச் சீனா இனி எப்படி எதிர்வினையாற்றும் என்பதைப் பொறுத்தே இதன் நீடித்த வளர்ச்சிப்போக்கு இருக்கப் போகின்றது. துறைமுக நகரத்தைச் சீனா உருவாக்கியபோது அது சீனாவின் உளவுத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்கிற அச்சம் இந்தியத் தரப்பில் இருந்தும் வெளிப்படுத்தப் பட்டமையை மறந்துவிடமுடியாது. இப்போது இந்தியாவின் நகர்வுகளும் உளவு பார்ப்பதை மையமாகக் கொண்டதாகவே இருக்கின்றது என்பது வெளிப்படையாகி இருக்கின்றது.

இந்த உடன்படிக்கையை கடந்த ஆட்சிக் காலத்தில் செய்திருந்தால், தற்போது இலங்கையை ஆளுபவர்கள் இந்தியப் பயணத்தையும் இந்த உடன்படிக்கைகளையும் எதிர்த்து பட்டினிப் போராட்டத்தில் குதித்திருப்பார்கள். பௌத்தப் பிக்குகள்கூடத் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்திருப்பார்கள்.

இந்த உடன்படிக்கைகளால் இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கு எவ்விதமான ஆபத்தும் ஏற்படாது என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு உறுதியளித்திருக்கிறது. என்றாலும், இந்த உடன்படிக்கையால் இலங்கையைப் பேராபத்து சூழும் என்று தேசவாதிகள் மீண்டும் மீண்டும் குரல் கொடுக்கிறார்கள். இருந்தாலும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு இந்தியாவை விட்டால் வேறு வழியில்லை என்கிற நிலையில் அது கேட்பதெல்லாவற்றுக்கும் தலையாட்டவேண்டிய நிலையே இப்போதுள்ளது. வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் இந்தியா தனது பாதுகாப்பு மற்றும் புவிசார் அரசியல் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியிருக்கிறது.

தனது பகுதியின் ஒரு பகுதியாக எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாசவையும் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். இந்தியாவின் நகர்வுகளுக்கு அவரது கட்சியின் எதிர்ப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் இந்தச் சந்திப்பு அமைந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

இந்தப் பின்னணியில் இந்திய அமைச்சரின் பயணம் தமிழர்களின் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கான நகர்வுகளை நோக்கியதல்ல என்பதும் அது இந்தியாவின் பிராந்திய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டது மட்டுமே என்பதும் வெளிப்படையானது.

# நுண்ஞெகிழி - நம்மை நெருங்கும் பேராபத்து!

கு.க.சன்

கோடை வெயில் இப்போதே கொளுத்தத் தொடங்கிவிட்டது. தாகம் தீர்க்க எந்தத் தயக்கமும் இல்லாமல் போத்தல் தண்ணீரை லீற்றர் கணக்கில் வாங்கிக் குடிக்கிறோம். அந்தத் தண்ணீரில் நுண் ஞெகிழி கலந்திருக்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

நம் கண்ணுக்குத் தெரியாமல், தண்ணீர் வழியாக வயிற்றுக்குள் செல்லும் 'மைக்ரோபிளாஸ்டிக்' (MICRO PLASTIC) எனும் நுண்ணிய ஞெகிழித் துகள்கள் உடலுக்கு நஞ்சாவது குறித்து சூழலியலாளர்கள் எச்சரித்துக் கால்நூற்றாண்டு கடந்துவிட்டது. ஆனால், அந்த ஆபத்தை அறியாமல் இருப்பவர்கள்தான் நம்மிடம் அதிகம்.

இந்தச் சூழலில், ஞெகிழித் துகள்கள் ஆபத்தை 100% உறுதிசெய்யும் விதமாக, நெதர்லாந்தில் நடைபெற்ற ஆய்வின் முடிவு ஒன்று தற்போது மருத்துவத் துறையில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. அதைத் தெரிந்துகொள்வதற்கு முன்பு, நுண்ஞெகிழித் தொடர்பில் சில அரிய செய்திகளை அறிவோம்.

அளவில் 5 மி.மீ.க்கும் குறைவாக உள்ள ஞெகிழித் துகள்களை 'நுண்ஞெகிழி' என்கிறோம். பொதுவாக, ஞெகிழிப் பொருட்கள் சிதையும்போது உருவாகும் நுண் துகள்தான் இந்த 'வில்லன்'கள். காலையில் எழுந்ததும் பல் துலக்கப் பயன்படுத்தும் பற்பசை, பல்துலக்கி, முகம் கழுவ உதவும் 'ஃபேஸ்வாஷ்' தொடங்கி, ஆடைகள், உணவுக் கலம், தண்ணீர் போத்தல், பைகள் என நம் அன்றாடப் பயன்பாடு பலவற்றிலும் ஞெகிழிப் பயன்பாடு உள்ளது. சாதாரணமாக நாம் பயன்படுத்தி விட்டுத் தூக்கி எறியும் ஞெகிழிப் பொருட்கள் உடைந்தும் சிதைந்தும் நிலத்திலும் நீரிலும் கலந்து விடுகின்றன.

அந்த நிலத்தில் விளையும் காய்கறிகளையும் பழங்களையும் சாப்பிடும்போது அவை நம் உடலுக்குள் புகுந்துவிடுகின்றன. ஞெகிழிக் கலத்தில் உள்ள நீரையோ ஞெகிழி கலந்த நீரையோ பருகும்போதும் இதே பிரச்சினை ஏற்படுகிறது. ஞெகிழிக் கழிவுகள் வருடந்தோறும் டன் கணக்கில் கடல்நீரில் கொட்டப்படுகின்றன. இவற்றை உணவாகக் கொள்ளும் மீன்கள் உள்ளிட்ட கடல் வாழ் உயிரிகளால் உணவுச் சங்கிலி மூலம் நுண் ஞெகிழி நம்மை வந்தடைகிறது.

ஞெகிழிப் பொருட்கள் எரிக்கப்படுவதால் விளையும் நச்சுப்புகை காற்றில் கலக்கும்போது, நாம் சுவாசிக்கும் காற்று மாசடைகிறது. அந்தக் காற்றின் வழியாக நுண்ஞெகிழித் துகள்கள் நம்மை வந்தடைகின்றன. இந்த வழிகள் மட்டுமல்லாமல், நாம் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் மற்றும் பொதி செய்யப் பயன்படும் பொருட்கள் வழியாக நுண்ஞெகிழி நம் உடலில் சேர்வதும் உண்டு.

கால் நூற்றாண்டுக்கு முன்பு வரை நுண்ஞெகிழித் துகள்களால் உயிரிப் பன்மைக்கு ஆபத்து இல்லை என்றே அறிவியல் உலகம் நம்பிக்கொண்டிருந்தது. 2008இல் மார்க்கஸ் எரிக்ஸனும் மார்க் பிரவுனியும் தனித்தனியாக மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகள் இந்த நம்பிக்கையைக் குலைத்துப்போட்டன. வடக்கு பசிபிக் கடலில் இருந்த மீனின் உடலுக்குள் 18 வகை நுண் ஞெகிழிகள் இருந்ததைப் படம்பிடித்தார் எரிக்ஸன். இது பெரும் அதிர்வலையை உருவாக்கியது. அதைத் தொடர்ந்து நுண்ஞெகிழித் துகள்களால் உருவாகும் ஆபத்துகளை உணரத் தீவிரமாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

'நுண்ஞெகிழிகளைக் கடல்வாழ் உயிரினங்கள் இரையாக நினைத்து உட்கொள்கின்றன. இதனால் அவற்றின் உடல் உறுப்புகள் சிதைவடைகின்றன. சுவாசப் பிரச்சினை, உணவுச் சங்கிலி பாதிப்பு என அவை எதிர்கொள்ளும் இன்னல்கள் ஏராளம். இவற்றோடு அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. பல லட்சக்கணக்கான கடல்வாழ் உயிரிகள் அழிகின்றன' என்கின்றனர் கடல் ஆராய்ச்சியாளர்கள்.

அங்கெல்லாம் மட்டுமல்ல நக்கு மிக நெருக்கமாக இருக்கும் தமிழ்நாட்டுத் தலைநகரமான சென்னையில்கூட மீன்களில் இந்த நுண்ஞெகிழி கண்டறியப்பட்டிருக்கிறது. பட்டினப்பாக்கத்தில் விற்கப்பட்ட 7 மீன் வகைகளில் ஞெகிழித் துகள்கள் கலந்திருப்பதாகத் இந்திய தேசியக் கடலோர ஆராய்ச்சி மையம் நடத்திய ஓர் ஆய்வில் தெரிய வந்தது.

இந்தத் தகவல்களைத் தொடர்ந்து மனிதர்களின் உடலுக்குள்ளும் நுண்ஞெகிழிகள் புகுந்துள்ளன எனும் தகவல் அடுத்த அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இவற்றில் 2018இல் ஆஸ்திரேலியாவில் வியன்னா பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வு முக்கியமானது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து 3 ஆண்கள், 5 பெண்கள் என 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டனர். ஒரு வாரம் அவர்கள் எடுத்துக்கொண்ட கடல் உணவு வகைகள், ஞெகிழி உறையில் கொண்டு வரப்பட்ட உணவு வகைகள், ஞெகிழி போத்தல் தண்ணீர் ஆகியவை குறிப்பெடுக்கப்பட்டன. ஒவ்வொரு நாளும் அவர்களின் கழிவுகள் சோதிக்கப்பட்டன. ஆய்வின் முடிவில் மனிதக் கழிவுகளில் நுண்ஞெகிழிகள் இருப்பது கண்டறியப்பட்டன. இதைத் தொடர்ந்து, இத்தாலியில் 8 கர்ப்பிணிகளிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பனிக்குடச் சவ்விலும் நஞ்சுக்கொடியின் அருகிலும் சிசுவின் மலத்திலும் நுண்ஞெகிழிகள் இருக்கின்றன என்று வந்த தகவல் மருத்துவத் துறையினரைத் திடுக்கிட வைத்துள்ளது.

சமீபத்தில் நெதர்லாந்தில் 22 தன்னார்வலர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 17 பேரின் குருதி அணுக்களில் நுண்ஞெகிழிகள் காணப்பட்டன. இவர்களிடம் காணப்பட்ட முக்கிய நுண்ஞெகிழிகள், தண்ணீர் போத்தலில் பயன்படுத்தப்படும் பாலிஎத்திலின் டெரிப்தலேட் (PET), பொதிசெய் பொருட்களில் பயன்படுத்தப்படும் பாலிஸ்டிரின் (POLYSTYRENE), காவு பைகளில் (கரிபாக்ஸ்) பயன்படுத்தப்படும் பாலிஎத்திலின் (POLYETHYLENE). 2040இல் இந்த நுகர்பொருட்களின் உற்பத்தி 2 மடங்காக அதிகரிக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் அறிவித்திருக்கும் சூழலில், இந்த ஆய்வின் முடிவுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

நுண்ஞெகிழிகள் குருதியின் வழியாக உடலுக்குள் பயணம் செய்யலாம் என்றுதான் இதுவரை அறியப்பட்டது. இப்போது முதல் முறையாக நுண்ஞெகிழிகள் குருதி அணுக்களையே பாதிக்கும் எனும் தகவல் வெளிவந்திருக்கிறது. இதை அவ்வளவு எளிதாகக் கடந்துவிடமுடியாது. காரணம், இந்தத் துகள்கள் குருதி அணுக்களைச் சிதைப்பதில் தொடங்கி, உடலுக்குள் ஆக்ஸிஜன் விநியோகத்துக்குத் தடை போடுவது, குடல், எலும்பு, நரம்பு, சிறுநீரகம் எனப் பல்வேறு உடல் உறுப்புகளில் பதியமாகி அந்த உறுப்புகளையும் சிதைப்பது எனப் பேராபத்துகளை ஏற்படுத்துவதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. மலட்டுத்தன்மை, ஹார்மோன் பாதிப்புகள், புற்றுநோய் உள்ளிட்ட ஆபத்துகளையும் இவை ஏற்படுத்தலாம் என்ற அளவில் பேசப்படுகிறது. போகப்போக இந்த ஆய்வுகளை விரிவுபடுத்தும்போது மேற்சொன்ன ஆபத்துகள் உறுதிசெய்யப்படலாம். தற்போதைய காரணம் தெரியாத இறப்புகளுக்கு இவைகூடக் காரணமாக இருக்கலாம்.

ஞெகிழிப் பயன்பாடு இல்லாத உலகை இப்போது நினைத்துப் பார்ப்பது சிரமம்தான். என்றாலும், பொதுமக்களுக்கு நுண்ஞெகிழிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மேற்கத்திய நாடுகள் பலவகை முன்னெடுப்புகளை எடுத்துள்ளன. இலங்கையில் நுண்ஞெகிழி தொடர்பான ஆய்வுகள் குறைவு என்பதால், இதன் பாதிப்புகள் நம் கண்களுக்குத் தெரியாமல் கண்ணாமூச்சி காண்பிக்கின்றன. தற்போது, திடக்கழிவுகளாக நம் முன்னால் காட்சியளிக்கும் ஞெகிழியை அகற்றவே திணறிக்கொண்டிருக்கிறோம். இந்நிலையில் நுண்ஞெகிழியைப் பற்றிய யார் கவலைப்படப் போகிறார்கள்?

நுகர்பொருட்கள் மூலம் மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் புதிது புதிதாகப் பாதிப்புகள் ஏற்படும்போது, அவை குறித்த விளைவுகளை மக்களுக்கு உரிய நேரத்தில் தெரியப்படுத்த வேண்டியது அரசின் கடமை. அந்த விளைவுகளை உடனடியாக மக்கள் எதிர்கொள்வதற்கும் காலப்போக்கில் அவற்றை நிரந்தரமாகத் தவிர்ப்பதற்கும் தேவையான வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி, பொது ஆரோக்கியம் காப்பதற்கு மத்திய, மாகாண ஆட்சிகள் முனைப்புடன் செயல்படவேண்டும். தேவைப்பட்டால், ஞெகிழிப் பொருட்கள் பயன்பாடு குறித்த பழைய சட்டங்களை நீக்கிவிட்டு, புதிய சட்டங்களை இயற்றி, அவற்றை மிகுந்த கண்டிப்புடன் நடைமுறைப்படுத்த அரசு இயந்திரம் தயாராக வேண்டும்.

ஞெகிழிப் பயன்பாட்டை அறவே நிறுத்தும் வரை திடக்கழிவு மேலாண்மையில் இன்னும் அதிக கவனம் செலுத்தி, அதன் பயன்பாட்டைக் குறைக்கவும், ஞெகிழிக் கழிவுகளை அகற்றவும் அரசுகள் வழிகாட்ட வேண்டும். உபயோகிப்பது உடையானாலும், உபகரணம் ஆனாலும், மீண்டும் பயன்படுத்தக்கூடிய, முழுதாக மறுசுழற்சி செய்யக்கூடிய ஞெகிழிப் பொருட்களையே பயன்படுத்தவேண்டும் என்பதில் மக்களும் அரசுகளும் அக்கறை காட்ட வேண்டும். இல்லாவிட்டால், கண்ணுக்குத் தெரியும் ஞெகிழிப் பொருட்களால் ஏற்படும் ஆபத்துகளைவிட கண்ணுக்குத் தெரியாத நுண்ஞெகிழிகளால் ஏற்படும் ஆபத்துகள் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அரசுகளும் பொதுமக்களும் விழித்துக் கொள்ள வேண்டிய நேரம் இது!



# தமிழ்த் தலைவர்கள் பயன்படுத்தப்படுகிறார்களா?

**நியூட்டன்**

பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரம்பெற்றதன் பின்பான இலங்கை அரசியலில் 70 வருடங்களில் பல்வேறுபட்ட அரசியல் பரிமாணங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

2019 வரை சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இருபெரும் கட்சிகளும் மாறி மாறிப் பதவிக்கு வந்தன. சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் தலைவர்களைத் தாம் ஆட்சியமைப்பதற்கான குறைநிரப்புத் தேவைக்காக இந்தக் கட்சிகள் பயன்படுத்திக் கொண்டன. ஆனால் 2019 பொதுத் தேர்தல் அந்த நிலையை மாற்றித் தனிச்சிங்களப் பெரும்பான்மையுடன் அரச தலைவர் கோட்டாபயவைத் தெரிவு செய்தது என்பது இலங்கை அரசியலில் ஒரு புதிய தொடக்கமாகும்.

இரண்டு முக்கிய கட்சிகளில் இருந்து மூன்றாவது சக்தியாகப் பொது மக்கள் பெரமுன என்ற கட்சியும் தாமரை மொட்டுச் சின்னமும் திடீரெனப் பிரபலமாகி 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரியளவான வெற்றியைத் தனதாக்கியது. அதுவரை உடரட்ட (உயர்நில) பாரம்பரியத்தைக் கொண்டிருந்த சிங்கள மக்களின் தலைமைத்துவம் பாதரட்ட (தாழ்நிலம்) வம்சம் ஒன்றின் கையில் போய்ச் சேர்ந்தது.

இதன் தொடக்கம் 2005 அதிபர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வென்றதுடன் தொடங்கியது. சிங்கள மன்னர் காலத்தில் றுகுணுரட்ட என்றிருந்த அதிகார வர்க்கம் 2005இல் தான் முழு இலங்கையையும் ஆட்சி செய்யும் வாய்ப்பைப் பெற்றது.

மறுபுறத்தில் இலங்கையின் முதலாவது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 2020 தேர்தலில் அதன் யானைச் சின்னத்தை வைத்து நாடாளுமன்ற ஆசனங்களில் ஒன்றைக் கூடப் பெறமுடியாத அளவுக்குப் படு தோல்வி கண்டது. நாடு முழுதும் இந்தக் கட்சிக்குக் கிடைத்த வாக்குகளை வைத்து அதன் தலைவரான ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் சென்றது என்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட மிகப் பெரிய அவமானமாகும். ஏற்கனவே தேர்தல்களில் ஐ.தே.கவின் கொழும்பு வேட்பாளர்களின் பட்டியலை ரணில் தயாரிக்கும்போது வேட்பாளர்கள் தமது விருப்பு வாக்குகளில் ஒன்றைத் தனக்குப் போட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தி வெற்றி பெற்றார். அவர் மக்களிடம் செல்லாது வாக்குப்பெறுவது தனது கட்சி வேட்பாளர்களான முகவர்கள் ஊடாகவே. இந்தத் தோல்வியும் இலங்கை வரலாற்றில் அதற்கு முன்னர் பார்க்கப்பட்டிருக்காத ஒன்று.

2020 தேர்தலில் தமது பங்கில்லாமல் கோட்டாபய ராஜபக்சவால் ஆட்சியமைக்க முடியாது என்றே தமிழ், முஸ்லிம் கட்சிகள் நம்பியிருந்தன. சிறுபான்மையினருக்கு அப்படித்தான் சிந்திக்கத் தெரிந்திருந்தது. கோட்டாபயவின் 2 வருட ஆட்சியில் கொரோனாத் தொற்றுப் பெரிய பிரச்சினையாகியது. அடுத்து டொலர் பிரச்சினையால் இரசாயன உர இறக்குமதி பாதிக்கப்பட்டது. ஏற்றுமதி வருமானம் மிகப் பெரிய வீழ்ச்சியை அடைந்தது.

இலங்கையின் அயலுறவுக் கொள்கைகூட என்றுமில்லாதவாறு மாறியிருக்கிறது. இந்தியாவும் சீனாவும் இலங்கை விடயத்தில் எதையும் கொடுக்கத் தயாராக இருக்கும் நிலையில் இந்த நாடுகளையும் கையாண்டுகொண்டு அமெரிக்க, ஐரோப்பிய உறவுகளையும் பேணிக்கொள்வது என்றுமில்லாத மாற்றமாகும்.



### தமிழர் தரப்பு எதிர்பார்ப்பு

தமிழர் தரப்பு அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவையே நம்பியிருந்தது. ஆனால் டில்லியும் கொழும்பும் புவிசார் விடயத்திலும் முதலீட்டு விடயத்திலும் மிக நீண்டகால வர்த்தக, பாதுகாப்புத் திட்டங்களை வகுத்து முன்னேறி வருவதால் தமிழரை வைத்தோ அகதிகளை வைத்தோ அரசியல் நடத்தவேண்டிய தேவை இந்தியாவுக்கு இல்லாமல் போயிருக்கிறது.

வடக்குக் கிழக்கு அரசியல் விடயத்தில் இந்தியா, "உங்கள் பிரச்சினைகளை இலங்கை அரசுடனேயே கதைத்துத் தீர்க்க வேண்டும். அதற்கு முன்னதாகக் கோட்டாபய அரசுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள்" என நேரடியாகக் கூறியுள்ள நிலையில் தமிழ்க் கட்சிகளிடம் அதற்கான ஒரு பொது அணுகுமுறையோ வேலைத்திட்டமோ பொறிமுறையோ இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. சிங்களவருடனான நல்லிணக்கத்தில் விக்னேஸ்வரன், சுமந்திரன் குடும்பங்கள் சிங்களக் குடும்பங்களில் ஏற்படுத்திக்கொண்டுள்ள திருமண உறவைத் தவிர வேறு எதையும் சாதிக்க முடியவில்லை.


**சிங்களவருடனான நல்லிணக்கத்தில் விக்னேஸ்வரன், சுமந்திரன் குடும்பங்கள் சிங்களக் குடும்பங்களில் ஏற்படுத்திக்கொண்டுள்ள திருமண உறவைத் தவிர வேறு எதையும் சாதிக்க முடியவில்லை.**

கோட்டாபய அரசை வீழ்த்த நினைப்பவர்கள் தமிழ்த் தலைவர்களைத் தமக்கு ஏற்றவாறு அணி திரட்ட முனைவது தெரிகிறது. செல்வம் அடைக்கலநாதனும் ரவூப் ஹக்கீமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியலிலிருந்து ஓரம்கட்ட முனைகிறார்கள் என்று செய்திகள் அடிபடுகின்றன. ரெலோ தனிக்கட்சியாக மாறிவிட நினைக்கும் விதமாகத் தனது காய் நகர்த்தல்களைச் செய்து வருகிறது. கூட்டமைப்பைத் தற்போது எதிர்க்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரனும் செல்வம் அடைக்கலநாதனும் சீனக் கொமினிஸ் கட்சியில் அங்கத்தவர்களாக இருந்தபோதிலும் இவ்விரு கட்சிகளுக்குமிடையில்கூட ஒற்றுமை இல்லை.

ரெலோ 2009 ஜூன் 19 வரை இலங்கைப் படைத்தரப்பில் ஊதியம் பெற்றுக்கொண்டு புலிகளை அழிப்பதற்குக் கோட்டபாயவுடன் இணைந்து செயற்பட்டது. புளொட்டும் அவ்வாறே செயற்பட்டது. ஆனால் அரச தலைவருடனான பேச்சுக்களின்போது சித்தார்த்தன் தமிழ் மக்களின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். இதுவும் விசித்திரம்தான்.

### கொழும்பு மையத் தலைவர்கள்

பொதுவாகவே வடக்குக் கிழக்குத் தமிழ்த் தலைவர்கள். "சிங்களவன் கெட்டவன்" என்று தமது மக்களுக்குக்கூறி வாக்குப் பெற்று வென்றபின் தமது நிரந்தரத் தொழில் நிமித்தம் கொழும்பிலேயே வாழ்ந்து கொண்டு பகுதி நேர ஏற்பாடாகவே நாடாளுமன்றத்தைக் கவனிக்கின்றனர். தமது சொந்தத் தொழில் ரீதியான தேவைகளுக்கு வடக்குக் கிழக்குக்கு வரும்போது அரசியல் விடயங்களைக் கவனிப்பதுபோல மேடை நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் காட்டமான அறிக்கைகளையும் இடித்துரைப்பு, அடித்துக்கூறினார் போன்ற சொற்பதங்களுடன் விடுகின்றனர். தமிழ் மக்களின் பிரச்சினை அபிவிருத்தி என்ற கோணத்திலேயே அனைத்துத் தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களை அணுகிவருகிறார்கள். பின்னர் தாம் அடுத்த தடவை நாடாளுமன்றம் செல்வது எப்படி என்ற விடயத்தில் கவனம் செலுத்துகிறார்களே தவிர தமிழ் மக்களின் விடயங்களில் அல்ல.



# பைடனுக்குப் புடின் பயப்பிடப்போவதில்லை

**வி.அருணாசலம்**

1980களில் ஒரு தடவை சோவியத் ஒன்றியத்திற்கு அமெரிக்க மிரட்டல் ஒன்றை விடுத்தது. அப்போது சோவியத் ஒன்றியத்திற்கு தலைவராக இருந்தவர் மிகைல் ஹர்பச்சோ. அவர் அமெரிக்காவின் மிரட்டலுக்கு இவ்வாறு பதிலளித்தார், "வோஷிங்டனில் இருந்து மொஸ்கோ எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம்தான் மொஸ்கோவிலிருந்து வோஷிங்டன் என்பதை அமெரிக்கா முதலில் புரிந்துகொள்ளவேண்டும்" என்பதே அவரது கூற்று. இந்தக் கூற்றானது அமெரிக்காவுக்கு எந்தவகையிலும் ரஷ்யா சளைத்ததல்ல என்பதையே பிரதிபலித்தது. ரஷ்யாவின் மனநிலை இவ்வாறு இருக்கிறபோதும் 1991இல் ரஷ்யா பல கூறுகளாகப் பிரிவதற்கு அமெரிக்காவே காரணம் என்பது பெரும்பான்மை ரஷ்யர்களுக்குத் தெரிந்த விடயம்.

தற்போது ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பு என்பது குறித்த இரு நாடுகளுக்கிடையிலான போராகச் சித்திரிக்கப்பட்டாலும் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பலப் பரீட்சையாகவே காணப்படுகிறது. நேட்டோ நாடுகள் அதாவது ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு அயல் நாடுகளாக இருந்தாலும், தமக்கு அருகில், ஐரோப்பாக் கண்டத்தில் இந்தப் போர் நடந்தாலும் தமது முழுவீச்சான செயற்பாடுகளை ரஷ்யாவுக்கு எதிராகப் பிரயோகிப்பதில் பின்னிற்கின்றன. அது கூறும் செய்தி என்னவென்றால் இந்தப் போர் மறைமுகமாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நடக்கிறது என்பதுதான்.

**புடினின் திறமையும் பலமும்**

அமெரிக்காவின் தற்போதைய தலைவர் பைடனோ ஏனைய நேட்டோ அணித் தலைவர்களோ புடினுக்கு நிகரானவர்களாக இல்லை. நீண்டகாலத் திட்டமிடலின் அடிப்படையிலும் படைத்துறை வியூகங்களின் அடிப்படையிலும் ரஷ்ய மக்களின் வெஞ்சினத்துடனும் இந்தப்போர் நடக்கிறது. புடினின் அடுத்த நகர்வு எவ்வாறு இருக்கும் என்பதை ஊகிக்க முடியாது என்று படைத்துறை ஆய்வாளர்களில் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

உக்ரைன் மக்கள் மீது இலக்கு வைத்துத் தாக்காது கேந்திர முக்கியத்துவமான பகுதிகளைக் கைப்பற்றுவதிலேயே ரஷ்யப் படைகள் கவனம் செலுத்துவது தெரிகிறது. சில பகுதிகளில் ரஷ்யப் படைகள் பின்வாங்குவதாகக் கூறப்பட்டாலும் அது தோல்வியால் ஏற்பட்ட பின்வாங்குதல் அல்ல என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

**பொருளாதாரத் தடை**

அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நிலையில் மசகு எண்ணெய் ஏற்றுமதியில் அமெரிக்க டொலரின் வலிமையைக் குறைப்பதற்காக ரஷ்யாவுடன் நட்புறவைக் கொண்டிராத நாடுகள் மசகு எண்ணெய்யைப் பெறுவதாயின் ரஷ்ய நாணயமான ரூபிளில் பணம் செலுத்த வேண்டும் எனவும் இந்தியா தனது ரூபாயிலேயே செலுத்த முடியும் என்றும் புடின் குறிப்பிட்டுள்ளார்.

> அமெரிக்க டொலரின் பெறுமதியைக் குறைப்பதற்காக அல்லது ஐரோப்பாவில் அதைச் செயலிழக்கச் செய்வதற்காகவே முன்னாள் சோவியத் ஒன்றியத் தலைவர் மிக்கைல் கர்பச்சோவ் யூரோ என்ற ஐரோப்பாவுக்கான ஒரு தனித்துவமான நாணயத்தை அறிமுகப்படுத்தியிருந்தார்

அமெரிக்க டொலரின் பெறுமதியைக் குறைப்பதற்காக அல்லது ஐரோப்பாவில் அதைச் செயலிழக்கச் செய்வதற்காகவே முன்னாள் சோவியத் ஒன்றியத் தலைவர் மிக்கைல் கர்பச்சோவ் யூரோ என்ற ஐரோப்பாவுக்கான ஒரு தனித்துவமான நாணயத்தை அறிமுகப்படுத்தியிருந்தார். அது எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு அமெரிக்க டொலரின் தனியுரிமையை இல்லாது செய்யவில்லை.

**ஆசியாவுக்கான புதிய நாணயம்**

தற்போது நடக்கும் ரஷ்ய-உக்ரைன் மோதல் படைப் பலப் பரீட்சையையும் தாண்டிப் பொருளாதாரப் போட்டியாக மாறவிருக்கும் சூழலில் ஆசியாவின் பெரிய சனத்தொகையைக் கொண்ட இந்தியாவும் சீனாவும் தமது நிலைப்பாட்டை ரஷ்யாவின் பக்கம் வைத்திருக்கவேண்டிய தேவை உள்ளது. அண்மையில் ரஷ்ய அயலுறவு அமைச்சர் சேஜி லவ்ரொவ் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் பயணம் மேற்கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது.

மூல வளப் பயன்பாடு, சந்தை வாய்ப்புகள், தொழில்நுட்பப் பரிமாற்றம் எனப் பல விடயங்கள் இந்த 3 நாடுகளின் கைகளில் குவிந்திருப்பதால் அமெரிக்க டொலருக்கு எதிரான அல்லது போட்டியான ஒரு நாணயத்தை இந்த மூன்று நாடுகளும் இணைந்து அறிமுகப்படுத்த வாய்ப்புண்டு. அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தங்கியிராமல் இந்த மூன்று நாடுகளும் தமக்குள் தங்கி நிற்கும் புதிய பொருளாதாரத் தளமொன்று திறக்கப்பட வாய்ப்புண்டு.

தற்போதைய சூழலில் நடந்துவரும் போரை யார் நிறுத்துவது என்பதைவிட ஏன் நிறுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக ரஷ்யாவே உள்ளது. தனது மூலோபாய நகர்வில் எத்தனை வீதம் அடையப்பட்டதன் பின் போரை நிறுத்துவது என்ற முடிவும் புடினிடமே உண்டு.

அமெரிக்கா வெருட்டுகிறது என்பதற்காக புடின் வெருண்டோடத் தயாரில்லை என்பதையே போருக்கு அப்பாலுள்ள விடயங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...? 12



## அப்பிள் பேசிகளில் ஒளிப்படத்தின் தரம்...!

அப்பிள் நிறுவனத்தின் கைபேசிகள், தாயாரிப்புகளுக்கு எப்போதுமே அதிக மவுசு இருக்கிறது. சந்தையில் தமக்கென்றொரு தனியான வர்த்தக நாமத்தை எப்போதுமே கொண்டிருக்கின்ற அப்பிள் தயாரிப்புகள் பன்னாட்டு ரீதியில் பிரபலமானவை. அவற்றின் விலை என்பது அனைவராலும் அவற்றை அனுபவித்துவிட முடியாத அளவுக்கு எப்போதுமே சந்தைத் தரத்தைப் பேணும் வகையில் இருக்கிறது. சாதாரணர் பலரது ஆசையாகவும் கனவாகவும் இருந்தாலும் அப்பிள் நிறுவனத்தின் புதிய தயாரிப்புகளுக்காகக் காத்துக்கிடப்பவர்கள் பலர். விலை அதிகமாக இருந்தாலும் அதற்கென்ற தனித்தன்மை மாத்திரமன்றித் தரத்திலும் அப்பிள் தயாரிப்புகள் தமது பெயரைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பதும் அதற்குக் காரணம். அப்பிள் தயாரிப்புகளைப் பயன்படுத்துவோரைக் கண்டால் அந்தப் பாவனையாளருக்கும் ஒருவித மதிப்புக் கிடைக்குமளவுக்கு உள்ளூரில் நில்மை இருக்கிறது.

நிகழ்வுகள், கொண்டாட்டங்களின்போது அப்பிள் கைபேசியை வைத்திருப்பவரை அந்த நிகழ்வின் படப்பிடிப்பாளர் தரத்தில் வைத்து நோக்குகின்ற சந்தர்ப்பங்களையும் அதிகம் காணலாம். "அவன் அப்பிள் போன் வைச்சிருக்கிறான். அதிலை எடுத்தால் படம் கிளியராய் இருக்கும்..." என்கிற அளவுக்கு வரவேற்பு இருக்கிறது. அப்பிள் வகை கைபேசிகளில் ஒளிப்படத்தின் தரம் அதிகமாக இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

பல கைபேசி நிறுவனங்களுக்கு மத்தியில் அடுத்தடுத்துத் தொடர்ந்து தனது தயாரிப்புகளை மேம்படுத்தல்களுடன் சந்தைக்கு விடுகின்ற அப்பிள் நிறுவனம் அந்தக் கைபேசிகளின் கமராக்களின் துல்லியத் தன்மையை அதிகரித்தே வருகிறது. "மெகா பிக்கசல்" எனப்படுகின்ற துல்லியத்தை அளவிடும் முறைமையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி - அதிகரித்துச் சந்தைக்கு விடுகிறது. அப்பிள் பேசிகளின் திரையில் அதன் கமராத் தன்மையின் துல்லியத்தை நேரடியாகக் காண்பதைப்போல ஏனைய கைபேசிகளின் திரைகளில் காண்பதில் தரக் குறைவு இருக்கவே செய்கிறது.

அதாவது கைபேசியில் எடுத்துக்கொண்ட ஒளிப்படத்தை அந்தக் கைபேசியின் திரையில் பார்ப்பதற்கும் அதை ஒளிப்படமாக்கிப் பார்ப்பதற்கும் ஏனைய கைபேசிகளில் வேறுபாடுகளைக் காணமுடியும்.

ஆனால் அப்பிள் கைபேசிகளில் அவ்வாறு காணமுடியாது.

தமது கம ராப் படங்க ளைத் தமது திரையில் துல்லியமாகக் காட்டும் திறனைக் கொண்டிருந்தாலும் அவற்றை ஒளிப்படமாக்கிப் பார்க்கும் போது அந்தத் திரைகளின் போலித் தன்மை மற்றைய அலை பேசிகளின் கமொராக்களில் தெரிந்துவிடுகிறது. அது மட்டுமன்றி விலையைப் போலவே தொழில்நுட்பத் திறனிலும் அதற்கான நேர்த் தியிலும் அப்பிள் சற்று முன்னேற்றகரத்துடன் செயற்படுகிறது. உதாரணத்துக்கு அப்பிள் பேசிகளில் கமராக்களுடன் மஞ்சள் மற்றும் வெள்ளை நிற ஒளிப் பிறப்பாக்கிகளைக் காண முடியும். ஒளிப்படம் எடுக்கும் போது அந்த இரண்டு ஒளிகளும் ஒளியைப் பாய்ச்சுகின்றன. இதனால் சூரிய ஒளியில் கிடைக்கின்ற வர்ணங்கள் அதிலும் கிடைக்க வாய்ப்பேற்படுகிறது. தவிர வெள்ளொளியை மாத்திரம் கொண்டி ருக்கின்ற கைபேசிகளில் இந்தத் திறன் இருப்பதில்லை. ஒளிப்படமானது வெள்ளொளியை மாத்திரமே பதிவு செய்கிறது. இப்படிப்பட்ட பல மேம்பட்ட காரணங்களால்தான் அப்பின் பேசிகளின் ஒளிப்படத் தரம் அதிகமாக இருக்கிறது.

■

---

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## கழிவகற்றும் தொழிலாளர்களின் சுத்துமாத்து

சம்பந்தன் - நல்லூர்




யாழ்ப்பாண மாநகரசபையைச் சேர்ந்த கழிவகற்றும் ஊழியர்களுக்கு மாநகரசபை சார்பில் மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. ஆனாலும் கழிவகற்றலின் போது ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களிடமும் அவர்கள் பணம் அறவிடுகின்றனர். இந்த விவகாரம் யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான அனைத்துப் பகுதிகளிலும் நடக்கிறது. இது குறித்து மாநகர சபையின் உயர் தரப்பினர் கண்டுகொள்வதாக இல்லை. உழவு இயந்திரங்களில் வருகின்ற கழிவகற்றல் தொழிலாளர்கள் வீடுகளுக்கு முன்னால் வந்து நின்றுகொண்டு கதவுகளைத் தட்டி, "ஆற்றை குப்பை...? ஆரு குப்பை போட்டது...? காசு எங்கை...?" என்று வெளிப்படையாகவே கேட்டுக் கிட்டத்தட்ட ஓர் அடாவடித்தனம்போல பணத்தை அறவிடும் நிலை பல இடங்களில் இருக்கிறது.

பணத்தைக் கையில் வாங்கிய பின்னர்தான் குப்பையில் கையை வைக்கின்றனர். பணம் கொடுக்காவிடில் சினப்புடன் கொதித்தவர்களாகத் திட்டிக்கொண்டு அரைகுறையாகக் குப்பையை அள்ளிக்கொண்டும் சிலவேளை குப்பையைக் கண்டும் காணாமலும் விட்டுவிட்டும் அப்பால் போய்விடுகின்றனர். அதிலும் பணத்தைக் குறைவாகக் கொடுத்தால் "இவ்வளவு நிறையக் குப்பையைப் போட்டிருக்கிறியள்... உது காணாது" என்று பணம் அறவிடுகின்றனர். மாதாந்த ஊழியத்துக்கு வேலை செய்யும் அவர்கள் இவ்வாறு சுத்துமாத்துகளில் ஈடுபடுவதால் பலரும் பல அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்.

இது தொடர்பில் மாநகரசபை ஊழியர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார், "அது குப்பையைக் கிள்ளினதுக்காக ஒரு சந்தோசத்துக்காகக் குடுக்கிறது. குப்பை கிள்ளிச் சீவிக்கிறவை எண்ட தால இரக்கத்தோட குடுக்கிறது. மற்றும்படி ஒண்டுமில்லை" என்றார் சாதாரணமாக. ஆனால் குப்பையைப் பிணையாக வைத்து வீட்டுக்கு முன்னால் நின்று அந்த ஊழியர்கள் பணம் அறவிடும் நிலையோ இவரது கூற்றுக்கு நேர் எதிராகவே இருக்கிறது.

யாழ். நகர வீட்டுக்காரர்களைவிட யாழ். நகருக்குள் உணவகம் நடத்துபவர்களின் நிலை இதைவிடப் படுமோசம். இந்த ஊழியர்கள் உணவகக் கழிவுகளை எடுத்துச் செல்வதற்காகப் பணத்தை மாத்திரம் பெற்றுச்செல்லாமல் தேநீர், சிற்றுண்டிகளை உண்டுவிட்டுப் பணம்கொடுக் காமல் நழுவும் நிலையும் இருக்கிறது. இவர்களைப் பகைத்தால் உணவகக் கழிவுகளை அகற்றமுடியாமல் நாற்றமெடுக்கத் தொடங்கிவிடும் என்பதால் இவர்களைப் பகைக்காமல் அனுசரித்துச் செல்ல வேண்டிய நிலையிலேயே பல வர்த்தகர்கள் இருக்கிறார்கள். இவ்வாறாக யாழ். மாநகர சபைக் கழிவகற்றும் ஊழியர்களின் சுத்துமாத் துகள் இருக்கின்றன. மேற்கண்ட ஊழியர்களின் சுத்துமாத்துகளைத் தவிர்ப்பதற்கு அதுபோல பல நடவடிக்கைகளை மாநகரசபை நிர்வாகத்தினர் ஏற்படுத்தவேண்டும்.

# மது என்ன செய்யும்?



கணேசன்

இன்றைய தினம் உலகிலேயே மிக அதிகமாக மது குடிப்பவர்களில் தமிழர்களுக்கும் இடமிருக்கிறது! போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கு மாகாணத்தில் பயன்பாட்டில் கடவென உயர்ந்த ஒரே பொருள் மது பானம்தான். ஒவ்வொரு ஆண்டும் மடங்குகளாக இந்த அதிகரிப்பு இருந்தது. இவர்களில் 13 வயது சிறுவர்களும் அடக்கம். மதுவால் நோய்வாய்ப்பட்டு நேரடியாகவும், போதையில் ஏற்படும் விபத்து போன்றவற்றால் மறைமுகமாகவும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் தமிழர்கள் மத்தியில் கணிசமாக இருக்கின்றது. தமிழ்நாட்டில் இது ஆண்டுக்கு 5 லட்சம் எனப்படுகின்றது. இலங்கையின் வடக்கு - கிழக்கில் இது தொடர்பான தனிப் புள்ளிவிவரங்கள் இதுவரையில்லை. அணு ஆபத்து ஆட்களை மொத்தமாக அழிக்கும் என்றால், மது கொஞ்சம் கொஞ்சமாக!

ஆம், மது... மயக்கம்... சாவு... இது அன்றாடம் நிகழும் உண்மை! இந்த ஆபத்து எப்படி நேர்கிறது?

மதுவில் இருக்கும் 'ஆனந்தப் பொருளு'க்குப் பெயர் ஆல்கஹால்! ஆக்ஸிஜனைப் போல் ஆல்கஹாலும் குடிநோயாளிகளுக்கு அனுதினமும் அவசியம். என்ன காரணம்? போதை! இது எப்படி ஏற்படுகிறது? 'எண்டார்பின்' (ENDORPHIN) எனும் மகிழ்ச்சிப்படுத்தல் சமாச்சாரம் செய்யும் சதி.

**அது என்ன எண்டார்பின்?**

சுருக்கமாகச் சொன்னால், பெருமகிழ்ச்சியில் திளைக்கும் போது உங்கள் மூளையில் உருவாகும் ஒரு ரசாயனம்தான் எண்டார்பின். விளக்கம் தேவை என்றால், நீங்கள் நன்றிப் பெருக்கில் நண்பரைக் கட்டி அணைக்கும்போது, உங்கள் காதலை காதலி ஏற்றுக்கொள்ளும்போது, பிடித்த இணையுடன் உறவில் உச்சத்தை எட்டும் போது... இப்படி நீங்கள் பரவசப்படும்போது எல்லாம் உடலில் அமுதசுரபியாகச் சுரப்பது எண்டார்பின்.

மது அருந்தும்போது குருதியில் கலக்கும் ஆல்கஹால், மூளையில் எண் டார்பின் சுரப்பதைத் தூண்ட, உடல் காற்றில் பறப்பதுபோல் ஒரு போதை தலைக்குள் ஏறுகிறது. எண்டார்பின் கொடுக்கும் இந்த ஏக சுகத்தை மூளை, தனது அழிக்க முடியாத ஹார்டு டிஸ்கில் நிரந்தரமாகப் பதிவுசெய்து கொள்கிறது. நாளடைவில் உடலும் மூளையும் அந்த சுக போக அனுபவத்துக்குப் பழகிவிட, குறிப்பிட்ட நேரத்தில், அந்த சுகத்தைத் தேடி அலைகிறது. 'மணி ஆறாச்சு... 'சரக்கு' எங்கே?' என மூளைக் கேட்கிறது இப்படித்தான் பலரும் குடி போதை க்கு அடிமையாகின்றனர்.

மது குடித்ததும், ஆல்கஹால் நேராக சிறுமூளைக்குச் (CEREBELLUM) சென்று 'ஹலோ!' சொல்கிறது. வீட்டுக்கு விருந்தாளி வந்துவிட்டால் கொஞ்ச நேரம் அம்மாவை மறந்துவிடும் குழந்தை மாதிரி, இந்தப் புதிய நட்பில் மூளை எனும் எஜமானரின் கட்டுப்பாட்டில் இருந்து சிறுமூளை விலகிவிடுகிறது. மது குடிப்பவர்கள் கண்களில் போதைத் தெரிவதும், கால்கள் பின்னுவதும், வாய் குழறுவதும், லேசான மயக்கத்தில் திளைப்பதும் இதனால்தான்!

**கல்லீரல் கவனம்!**

ஒருவர் தொடர்ந்து 5 ஆண்டுகள் தினமும் 3 'பெக்' மது அருந்தினால், அவரது கல்லீரல் பாதிக்கப்படுவது உறுதி. ஆல்கஹால் என்பது முழுக்க முழுக்க மாவுச்சத்து நிரம்பிய அமிலம். அது உடலுக்குள் அதிகமானால், கல்லீரல் அதைக் கொழுப்பாக மாற்றி தன்னிடம் சேமித்துக்கொள்கிறது. அடுத்த 5 ஆண்டுகள் அவர் தொடர்ச்சியாக மது அருந்துகிறார் என்றால், கல்லீரல் செல்கள் பாதிக்கப்படும். ஈரம் மிகுந்த மரங்களில் கறையான்கள் யோசிக்காமல் கூடுகட்டுவதைப் போல், கெட்டுப்போன கல்லீரல் செல்களில் கொழுப்பு செல்கள் சுலபமாக குடியேறிவிடும். இதனால் கல்லீரல் லேசாக வீங்கத் தொடங்கும். இதன் பெயர் 'ஃபட்டி லிவர்' (FATTY LIVER). அதாவது கொழுப்புக் கல்லீரல். கல்லீரல் பாதிப்பின் முதற்கட்டம் இது; அறிகுறி எதுவும் வெளியில் தெரியாது.

ஒருவர் தொடர்ந்து 5 ஆண்டுகள் தினமும் 3 'பெக்' மது அருந்தினால், அவரது கல்லீரல் பாதிக்கப்படுவது உறுதி. ஆல்கஹால் என்பது முழுக்க முழுக்க மாவுச்சத்து நிரம்பிய அமிலம். அது உடலுக்குள் அதிகமானால், கல்லீரல் அதைக் கொழுப்பாக மாற்றி தன்னிடம் சேமித்துக் கொள்கிறது.

இதை நினைத்து 'வயிறுதான் சமர்த்தாக இருக்கிறதே' என்று குடிநோயா ளிகள் மகிழ்ச்சிப்பட முடியாது. இந்தக் கட்டத்தில் அவர்கள் சுதாரித்தால் ஆச்சு! இல்லாவிட்டால் அவர்களின் மொத்த ஆரோக்கியமும் போச்சு! ஆண்டுக்கு ஒருமுறை வயிற்றை ஸ்கேன்செய்து, கல்லீரல் பரிசோதனை செய்து (LFT), அதன் நிலைமையைப் புரிந்து, மதுவை மறந்து, தகுந்த மாத்திரை, மருந்துகள் மூலம் சரிபடுத்திக்கொள்ளவேண்டும். இல்லையேல், ஆறுமுகத்துக்கு ஆன கதிதான் ஆகும்!

ஆறுமுகத்துக்குக் மேசன் வேலை. மனைவி கீரை விற்பவர். விபத்தில் கணவனை இழந்த மகள் உடனிருப்பது வீட்டுக்குக் கூடுதல் சுமை. அந்தச் சோகத்தில் குடிக்கத் தொடங்கினார். காலையில் ஒரு குவார்ட்டர் குடித்தால்தான் கட்டுமானக் கரண்டியைக் கையில் எடுக்க முடியும். அப்படி ஒரு மெகா குடி!

ஆறுமுகம், தொடக்கத்தில் 'பசி இல்லை', 'சாப்பிட பிடிக்கவில்லை', 'வாந்தி வருகிறது', 'வயிறு வலிக்கிறது' என்றுதான் என்னிடம் வந்தார். அப்போதே 'மதுவைத் தொடாதே!' என எச்சரித்தேன். 'என்னால குடிக்காம இருக்க முடியயேல்ல' என்றார். அவருக்கு மஞ்சள் காமாலை வந்தது. ஆயுள்வேதத்தில் பச்சிலை மருந்து சாப்பிட்டார். 'இது குடியால் வந்த காமாலை. பச்சிலைச் சாற்றுக்குக் கட்டுப்படாது. குடிப்பதை நிறுத்தினால்தான் காமாலை அடங்கும்' என்றேன். அவர் புரிந்துகொள்ளவில்லை. குடிப்பதையும் விடவில்லை. ஆறு மாதத்துக்குள் ஆறு கிலோ எடை குறைந்தது. நெஞ்சு எலும்பெல்லாம் வெளியில் தெரிந்தது. 'எங்கிருந்து தான் வந்து சேர்ந்ததோ' என அவரே ஆச்சரியப்படும் அளவுக்கு வயிற்றில் நீர் கோத்து, பானை மாதிரி வீங்கிவிட்டது.

அவரால் வேலைக்குச் செல்ல முடியவில்லை. பணம் இல்லை. அரசு மருத்துவமனைக்குப் போனார். ஸ்கேன் ரிப்போர்ட் 'லிவர் சிரோசிஸ்' (LIVER CIRRHOSIS) என்றது. மாதாமாதம் அங்கே அட்மிட் ஆகி வயிற்றுக்குள்ளிருந்து சுமார் மூன்று லிட்டர் திரவத்தை ஊசி மூலம் எடுத்துக்கொண்டு வந்தார். அதிக பயனில்லை.

பாதைத் தெரியாதவருக்குப் பார்வையும் தெரியாமல்போனால் எப்படி இருக்கும்? ஆறுமுகத்துக்கு வயிற்றில் நீர் சேர்ந்தது போதாமல், கால்களிலும் நீர் சேர்ந்து யானைக்கால் போன்று வீங்கிவிட்டது. நடக்கும்போது எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியிலும் விண்விண்ணென்று வலி உயிர்போனது. அவர் படும் துன்பங்களைப் பார்த்து மகளும் மனைவியும் அழாத நாள் இல்லை. 'எப்போதுதான் விடியும்?' என்று ஏங்கித் தவித்தவர்களுக்கு சாவுதான் முடிவு சொன்னது. ஆம், ஓர் அந்திப்பொழுதில் ஆறுமுகம் குடம் குடமாக குருதி வாந்தி எடுத்துச் செத்துப்போனார்.

**மெல்லக் கொல்லும் விசம்!**

மது என்பது ரசித்துப் புசிக்கும் பழச்சாறு அல்ல, மெல்லக் கொல்லும் விசம்! எப்படி? இதை 'லிவர் சிரோசிஸ்' கட்டத்தில் இருந்து தொடர்வோம். கல்லீரல் பாதிப்பின் இரண்டாவது கட்டம் இது. 60 மி.லி. மதுவைச் செரித்து முடிக்க இயல்பான கல்லீரலுக்கு 1 மணி நேரம் ஆகும். லேசாக வீங்கிய கல்லீரலுக்கு 2 மணி நேரம் ஆகும். கொழுப்புக் கல்லீரல் கொண்ட ஒருவர், ஒரு நாளில் எட்டு 'லார்ஜ்' மது குடிக்கிறார் என்றால், என்ன ஆகும்? கணக்குப் போட்டுப் பாருங்கள். 16 மணி நேரம் ஆகும். இதற்கிடையில் பித்தநீர் சுரப்பது, என்சைம்கள் உற்பத்தி என ஏகப்பட்ட வேலைகளையும் அது பார்க்கவேண்டும். பாவம் கல்லீரல்! அதற்கெல்லாம் எங்கே நேரம் இருக்கிறது? அந்த 16 மணி நேரத்துக்குள் குடிநோயாளி அடுத்த ஆறு லார்ஜ்களை உள்ளே இறக்கிவிடுகிறாரே!

இப்படி அடுத்தடுத்து கல்லீரல் தாக்கப்படுவதால், முதலில் தர்ப்பூசணிபோல் காணப்பட்ட கல்லீரல் இப்போது முள் முள்ளாக இருக்கும் அன்னாசிபோல் மாறிவிடுகிறது. இதனால், கை இழந்தவர் கார் ஓட்ட முடியாத மாதிரி கல்லீரல் செயல் இழக்கிறது. இதைத்தான் 'லிவர் சிரோசிஸ்' - 'கல்லீரல் சுருக்கம்' - என்கிறோம். இதன் கொடுமைதான் காமாலை, வயிறு வீக்கம், துர்நாற்றம் எடுக்கும் நீர் கோத்தல், கால் வீக்கம் எல்லாமே! சிலருக்கு இது புற்றுநோயாகவும் மாறக்கூடும்.

இன்றைய நவீன மருத்துவத்தில் கல்லீரல் சுருக்கத்தை தொடக்கத்திலேயே கண்டறிந்து, கல்லீரலைக் காக்கும் வசதி வந்துவிட்டது. என்றாலும், மதுவை மறந்தால் மட்டுமே பல ஆண்டுகள் நிம்மதியாக வாழமுடியும். இல்லையேல் எந்த நிமிடமும் கல்லீரல் செயல் இழந்துவிடலாம். அப்போது 'கல்லீரல் மாற்று' (LIVER TRANSPLANTATION) ஒன்றுதான் தீர்வு. இது லேசுப்பட்ட சிகிச்சை அல்ல; சவால் மிகுந்தது. நினைத்த நேரத்தில் கல்லீரல் கிடைக்காது. அப்படியே கிடைத்தாலும் எல்லோருக்கும் இது பயன் கொடுக்கும் என்கிற உத்தரவாதமும் இல்லை.

# சிறைக்குள்... 50



தர்மராசா

சிறைக்குள் இருக்கும்போது விடுதலை ஒன்றை மையப்படுத்திய சிந்தனையே எம்மைக் காப்பாற்றும். வெளியேபோய் என்னென்ன செய்யலாம் என்று திட்டமிடுவது அதற்கொரு வழி. அந்தக் கற்பனையும் எதிர்பார்ப்பும் காத்திருப்பும் எப்போதும் எம்மை முனைப்பாக இருக்கத் தூண்டும். தர்க்க ரீதியான வளர்ச்சிக்கும் இந்த நம்பிக்கை உதவும்.

சட்டத்தரணிகளான ஸ்ரீகாந்தா, விநாயகமூர்த்தி ஆகியோர் தேர்தலில் போட்டியிடக் களமிறங்கினர். அவர்கள் கையிலெடுத்துப் பேசிய கைதிகளின் வழக்குகளில் சில தீர்ப்பு வழங்கப்படுகின்ற நிலையிலிருந்தன. ஆனால் அந்தச் சட்டத்தரணிகளின் வருகை இல்லாததால் அந்த வழக்குகளுக்கு நீண்ட மறு தவணைகள் போடப்பட்டன. விசாரணைக்காகக் காத்திருப்போரின் நிலை இன்னும் மோசமாக இருந்தது. "அவர்கள் காசுகளையும் வாங்கிக்கொண்டு இப்படிச் செய்துவிட்டார்களே..." என்று பல கைதிகள் கோபத்துடன் இருந்ததைக் காணமுடிந்தது.

பணம் கொடுத்துச் சட்டத்தரணிகளை வாதிட அமர்த்துகின்ற கைதிகளின் எண்ணிக்கை சிறைக்குள் அதிகமாக இருந்தது. ஆனால் இலவசமாகச் சட்ட உதவி வழங்குகின்ற அமைப்புகளுக்கூடாக விடுதலையாகிச் செல்பவர்களே அதிகமாக இருந்தார்கள்.

5.1.2001இல் பொதுத் தேர்தல் காலத்தில் கைதிகளின் எதிர்பார்ப்பு ஐக்கிய தேசியக் கட்சி வெல்லவேண்டும் என்பதாக இருந்தது. சிறைச்சாலை ஊழியர்கள் பலரும்கூட இதே கருத்தையே கொண்டிருந்தனர். 6.1.2001 அன்று காலை தேர்தல் முடிவுகளை வானொலியில் கேட்டு எழுதும் முயற்சியில் நானும் திரு மாஸ்ரரும் ஈடுபட்டிருந்தோம்.

திரு மாஸ்ரர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். மலையகத்தில் வைத்துக் கைதானவர். அரசியல் விடயங்களிலும் தேர்தல் நடைமுறைகளிலும் ஆழமான அறிவுள்ளவராக இருந்தார். ஒவ்வொரு தேர்தல் முடிவுகளையும் வைத்துப் புதிய கருத்தொன்றைச் சரியாகச் சொல்லும் அளவுக்கு அவருக்கு ஆற்றல் இருந்தது.

அப்போதைய அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்காவின் பொது மக்கள் ஐக்கிய முன்னணியைத் தமிழ் மக்கள் தோற்கடிக்கவேண்டும் என நினைத்ததைவிடச் சிங்கள மக்கள் நிராகரிப்பதில் தீவிர கவனம் செலுத்தியுள்ளதைத் தேர்தல் முடிவுகள் காட்டின.

சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைக்கும் போது தோல்வி தனது வாசல் படிக்கே வந்துவிட்டதை உணராமல் இருந்தார் என்பதையே அந்தத் தேர்தல் முடிவுகள் காட்டின.

கைதிகளைப் பொறுத்தவரை ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி வென்றது மகிழ்ச்சியான செய்தியாக இருந்தது. ரணிலின் பெரிய ஒளிப்படங்களைப் பத்திரிகைகளில் இருந்து வெட்டியெடுத்தும் ஸ்கொட் போய்வந்தவர்கள் கொண்டுவந்த படங்களையும் சிறைச் சுவர்களில் ஒட்டினார்கள். சிலரது அறைகளில் ரணில் தம்பதியரின் படம்கூட ஒட்டப்பட்டது.

6.1.2001இல் மட்டக்களப்புக்கு ஸ்கொட்போகும் வாய்ப்புண்டா எனச் சில்வர் ஸ்ரார் என்ற ஜெயிலரிடம் கேட்டேன். அவர் கூறினார் போகும் வழியில் எல்லா இடங்களிலும் தேர்தல் வன்முறைகள் இடம்பெறும் என்பதால் சாத்தியப்பாடுகள் குறைவு என்று. எதற்கும் முயற்சிப்போம் என்றார். உரிய நேரத்தில் வழக்குத் தவணைக்குப் போகாவிட்டால் மீண்டும் தேவையற்ற வகையில் வழக்குத் தவணையைப் பிற்போடுவார்கள் என்பதே எனது கவலையாக இருந்தது.

மட்டக்களப்பு ஸ்கொட்டைத் தீர்மானிப்பதில் மட்டக்களப்புக்குப் பொறுப்பான படை அதிகாரிக்கே முக்கிய பங்கிருந்தது. வாகனத் தொடரணிப் பாதுகாப்பில்லாமல் கைதிகளைக் கொண்டு செல்லும் அதிகாரம் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு இல்லாதிருப்பதால் மேல்நீதிமன்றம்கூட அதைக் கடும் உத்தரவாக அல்லது கைதியைக் கொண்டு வந்து மன்றில் முன்னிலைப்படுத்தித்தான் ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்தாத சூழல் ஒன்று காணப்பட்டது.

7.1.2001அன்று மாலையில் திடீரென மட்டக்களப்புக்கு ஸ்கொட்டுக்கு ஆயத்தமாகுமாறு எனது பெயரையும் அழைத்தார்கள். களுத்துறைச் சிறைக்குச் செல்ல உடனடியாகப் புறப்படுமாறு கூறினார்கள். என்னுடன் 9 பேர் அந்தப் பயணத்தில் இடம்பெற்றோம். அந்த ஸ்கொட்டுக்குச் சில்வா என்பவர் பொறுப்பாக வந்தார். களுத்துறையைச் சென்று சேரும்போது மாலை 5.30 மணிக்கு மேலாகிவிட்டது. களுத்துறை நிர்வாகம் மட்டக்களப்புச் செல்லும் தமது ஸ்கொட்டில் 10 பேரை ஏற்ற மறுத்தது. மட்டக்களப்பில் தங்கவைக்க இடமில்லை என்று காரணம் தெரிவித்தார்கள். களுத்துறையிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்வோரை மறுநாள் ஏற்றவிருப்பதாகச் சொல்லப்பட்டது. எங்களை மீண்டும் பூசாவுக்குக் கொண்டுபோக முடிவெடுக்கப்பட்டது.

சில்வா என்பவரிடம் எப்படியாவது எம்மை அனுப்பும்படி கேட்டுக்கொண்டோம். அதற்கு அவர் கூறினார் "பயப்பிட வேண்டாம் இவர்கள் கொண்டுபோக மறுத்தால் நான் பூசாச் சிறைச்சாலை அத்தியகட்சகருடன் கதைத்துக் காலையில் பூசாவிலிருந்து வெலிக்கந்தைக்குக் கொண்டுபோக ஒழுங்குசெய்வேன்" என்று. அவரது கருத்து மிகவும் ஆறுதல் அளிப்பதாக இருந்தது.

சில்வா ஜெயிலர் பூசா அத்தியகட்சகருடன் தொலைபேசியில் கதைத்துவிட்டு "கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள் பூசா அத்தியகட்சர் மட்டக்களப்புச் சிறைச்சாலை நிர்வாகத்துடன் கதைத்துவிட்டு முடிவுடிசொல்வார்" என்றார். (தொடரும்)

■

---

## மது என்ன...

**ஆபத்தாகும் குருதி வாந்தி**

கல்லீரல் பாதிப்பின் மூன்றாவது கட்டம் 'ஈசோபேஜியல் வேரிசஸ்' (ESOPHAGEAL VARICES). மூடைத் தூக்கும் தொழிலாளியின் கால்களைப் பாருங்கள். குட்டிப் பாம்பு படுத்திருப்பதுபோல் ரத்தக் குழாய்கள் நெளிநெளியாய் புடைத்துக்கொண்டிருக்கும். இது மாதிரிதான் குடிநோயாளியின் உணவுக் குழாயில் குருதிக் குழாய்கள் வீங்கி வெடிக்கக் காத்திருக்கும். இந்த 'எரிமலைகள்' எப்போதெல்லாம் வெடிக்கிறதோ அப்போதெல்லாம் லிட்டர் கணக்கில் குருதி வாந்தி எடுப்பார்கள். அந்த அதிர்ச்சியில் சாவடைபவர்கள் அதிகம். இதைக் குணப்படுத்துவது மிகக் கடினம்.

உச்சமாக இன்னொரு கட்டம் இருக்கிறது. அதற்கு 'ஹெப்பாடிக் என்கெபலோபதி' (HEPATIC ENCEPHALOPATHY) எனப் பெயர். புத்தி பேதலித்து, பித்துப்பிடித்த மாதிரி அலைய வைக்கும் நோய் இது. மது குடிப்பவர்களை சாவுப் பாதைக்கு அழைத்துச் செல்வதில் மிகவும் உறுதியாக இருப்பது இதுதான். மதுவின் பாதிப்பால் ஏற்பட்ட மஞ்சள் காமாலை மூளைக்குப் பரவுவதால் இந்தக் கொடுமை ஏற்படுகிறது. குடிநோயாளியைக் 'கோமா' வுக்குக் கொண்டுசென்று சாவுக்குழியில் தள்ளிவிடுகிறது.இதைத்தான் கிராமப்புறங்களில் 'பித்தம் தலைக்கு ஏறி செத்துப்போனான்!' எனும் சொலவடையில் சொல்கிறார்கள்!

**வயிற்றைக் கெடுக்கும் மது!**

மதுவில் இருக்கும் ஆல்கஹால் இரைப்பைச் சுவரை அரித்து அழற்சியை ஏற்படுத்தும். இதனால் பசி எடுக்காது; வயிற்றில் எரிச்சல் ஏற்படும்.

மது அளவுக்கு மீறும்போதும், வெறும் வயிற்றில் 'குடி'க்கும்போதும் உணவுக் குழாய்க்குள் புகுந்து, அங்கே புண் உண்டாக்கும். இதனால் குமட்டல், வாந்திவரும்.குடலில் உறிஞ்சும் தன்மையைக் குறைக்கும். இதனால், வைட்டமின், தாதுக் கள் போன்ற ஊட்டச் சத்துக்கள் குறையும்.கணையத்தைக் கடுமையாகப் பாதிக்கும். கணையம் வீங்கிவிடும். வயிற்று வலியும், வாந்தியும் கடுமையாகத் துன்புறுத்தும்.

# கட்டுரை எழுதுவது எப்படி?

ஜோர்டன் பீட்டர்சன்

தமிழில்: அப்துல் மஜித்



ஜோர்டன் பீட்டர்சன் (Jordan Peterson), கனடாவைச் சேர்ந்த உளவியல் நிபுணர், பேராசிரியர். இன்று உலக அளவில் அறிவுத்தளத்தில் புழங்குபவர்களில் மிகவும் பிரபலமானவர்களில் ஒருவர். தீவிர வலதுசாரி.

இணைய ஆளுமை என்கிற பதம் தற்போது புழக்கத்தில் இருக்கிறது. சமூக ஊடகங்கள் வழியாகப் பிரபல்யம் அடைபவர்களையும், அங்கு கவனிக்கப்படுபவர்களாக இருப்பவர்களையும் குறிப்பது அது. அப்படியாக, அறிவுத் தரப்பிலிருந்து சமூக ஊடகங்கள் வழியாகக் கவனத்தை ஈர்த்தவர் ஜார்டன் பீட்டர்சன். இதுவரையில் மூன்று புத்தகங்கள் - 'மேப்ஸ் ஆஃப் மீனிங்' (Maps of Meaning 1999), '12 ரூல்ஸ் ஃபார் லைஃப்' (12 Rules for Life 2018), 'பியாண்ட் ஆர்டர்' (Beyond Order 2021) - எழுதியிருக்கிறார். இவற்றில் '12 ரூல்ஸ் ஃபார் லைஃப்' புத்தகம் அவருக்கு பெரும் வாசகப் பரப்பை ஈட்டித் தந்தது. எனினும், அவர் முதன்மையாக அவரது புத்தகங்களின் வழியாக அல்லாமல், அவரது யூடியூப் உரைகள், பாட்காஸ்ட் (Podcast) வழியாகவே அறியப்படுபவர். பெரும்பாலும் அவரது உரைகள் நடத்தைசார் நெறிகளை மையப்படுத்தியவை.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கனடாவின் டொராண்டோவில் உள்ள மெரிடியன் ஹாலில் 3,000 பார்வையாளர்களுக்கு முன்னிலையில் ஜார்டன் பீட்டர்ஸனுக்கும் தத்துவவியலாளர் ஸ்லாவாய் ஜிஜெக்குக்கும் (Slavoj Zizek) நடந்த விவாதம் மிகவும் புகழ்பெற்ற ஒன்று. பீட்டர்சன் இடதுசாரிகளை, பின்நவீனத்துவாதிகளைக் கடுமையாக விமர்சிப்பவர். இந் நிலையில் பீட்டர்சனின் அணுகுமுறை 'போலி அறிவியல்' என்று ஜிஜெக் விமர்சித்தார். அதற்கு பீட்டர்சன் 'வாருங்கள் நேருக்கு நேர் விவாதிப்போம், எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும்' என்றரீதியில் சவால் விட்டார். அதையடுத்தான் மெரிடியன் ஹாலில் 'மகிழ்ச்சி. முதலாளித்துவம் எதிர் மார்க்ஸிஸம்' (Happiness: Capitalism vs Marxism) எனும் தலைப்பில் இருவருக்கிடையே விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டது. பார்வையாளர் கட்டணம் 300 டாலர். இன்றைய மதிப்பில் கிட்டத்தட்ட 8 ஆயிரம் ரூபாய்களுக்கும் மேல்.

பீட்டர்சன் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு கருத்துரையாற்றிவருகிறார். திரையரங்குகளில் கூட்டம் கூடுவதுபோல் அவருடைய உரை நிகழ்ச்சிகளுக்குப் பெருந்திரள் கூடுவது வழக்கம். அந்த அளவுக்கு பீட்டர்சனுக்கு மிகப் பெரும் ரசிகப் படை உண்டு. மிகக் கச்சிதமாகவும் மிக வலுவாகவும் (மூர்க்கமாக) தன் தரப்பை முன்வைக்கூடியவர். அரசியல் சரிநிலையைப் (Political Correctness) பொருட்படுத்தாது தான் மனதில் நினைப்பதைச் சொல்பவர். இதனால் எந்த அளவுக்கு இவருக்கு ரசிகர்கள் இருக்கிறார்களோ அந்த அளவுக்கு இவரைக் கடுமையாக விமர்சிப்பவர்களும் உண்டு.

பீட்டர்சன் கட்டுரை எழுதுவதற்கான வழிகாட்டி ஒன்றை (Essay Writing Guide) எழுதியிருக்கிறார். கட்டுரை என்றால் என்ன? கட்டுரை ஏன் எழுதப்படுகிறது? ஒரு கட்டுரையை எப்படி ஆரம்பிப்பது? அதை எப்படி வடிவமைப்பது? அதில் என்னவெல்லாம் இருக்க வேண்டும்? இப்படிக் கட்டுரை எழுதுவதற்கான அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கிய வழிகாட்டி அது. பீட்டர்சன் மீதான ஈர்ப்பு, விமர்சனம் ஆகியவற்றைத் தாண்டி அவரது இந்த வழிகாட்டி அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று. அந்த வழிகாட்டியின் சுருக்கத்தை 'அருஞ்சொல்' தன் வாசகர்களுக்காக இங்கே தருகிறது.

### ஏன் கட்டுரை எழுதுவது அவசியம்?

ஒன்றைப் பற்றித் தெளிவான புரிதலைப் பெற, ஒன்றைப் பற்றிய சிந்தனையை வெளிப்படுத்த, ஒன்று குறித்த கேள்விக்கு விடை காண எழுதப்படுவதுதான் கட்டுரை. தெளிவாகச் சிந்திப்பதற்கு எழுதுவதைத் தவிர வேறு சிறந்த வழியில்லை. ஒரு சிந்தனையை எழுதிவிட்ட பிறகு அதை நாம் வேறு கோணங்களில் அணுக முடியும். ஆனால், எழுதாமல் மனதில் மட்டும் யோசித்துக்கொண்டிருக்கும்போது அந்தச் சிந்தனையை மேம்படுத்துவது கடினமானது.

நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற, உங்கள் தரப்பைத் தெளிவாக முன்வைப்பது அவசியம். எவர் ஒருவர் அவரது தரப்பைச் சிறப்பாக ஒருங்கமைத்துத் தெளிவாக முன்வைக்கிறாரோ அவர் எப்போதும் வெற்றிபெறுவார். எழுதுவதன் மூலம் நீங்கள் உங்கள் சிந்திக்கும் திறனையும், அதை வெளிப்படுத்தும் திறனையும் வளர்த்துக்கொள்ள முடியும். அது உங்களைப் பலமிக்கவராக மாற்றும். சிந்தனை என்பது உலகத்தை மாற்றும் வல்லமைகொண்டது. குறிப்பாக, அது எழுத்தில் இருக்கும்போது. ரோமானியர்கள் கட்டடங்கள் கட்டினார்கள். இப்போது அவை மறைந்துவிட்டன. யூதர்கள் புத்தகங்கள் எழுதினார்கள். இப்போதும் அவை உள்ளன.

> **நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற, உங்கள் தரப்பைத் தெளிவாக முன்வைப்பது அவசியம். எவர் ஒருவர் அவரது தரப்பைச் சிறப்பாக ஒருங்கமைத்துத் தெளிவாக முன்வைக்கிறாரோ அவர் எப்போதும் வெற்றிபெறுவார். எழுதுவதன் மூலம் நீங்கள் உங்கள் சிந்திக்கும் திறனையும், அதை வெளிப்படுத்தும் திறனையும் வளர்த்துக்கொள்ள முடியும்.**

ஆக, சமூகத்தில் உங்கள் தரப்பு புறக்கணிக்கப்படாமலும், மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்றால் எழுதக் கற்றுக்கொள்ளுங்கள். அதன் வழியே சிந்திக்கவும், சிந்தனையைத் தெளிவாக வெளிப்படுத்தவும் முடியும். இல்லையேல், அதில் தேர்ந்தவர்கள் உங்களைப் பின்தள்ளிச் சென்றுவிடுவார்கள். உங்கள் வாழ்க்கை கடினமாதாகவே தொடரும். எப்போதும் நீங்கள் அதிகாரப் படிநிலையின் கீழ்நிலையில் இருக்க வேண்டியதாகிவிடும்.

வார்த்தைகளுக்கு இருக்கும் சக்தியைக் குறைத்து மதிப்பிட்டுவிடாதீர்கள். வார்த்தைகள் வழியாகத்தான் நாம் நாகரிகம் அடைந்துவந்துள்ளோம். வார்த்தைகள் இல்லாவிட்டால், இன்னும் நாம் மரங்களில்தான் வசித்துக்கொண்டிருப்போம். ஆக, நீங்கள் எழுதும்போது கலாசாரத்தின் முழுப் பலத்தையும் உங்கள் வார்த்தைகளில் பயன்படுத்துகிறீர்கள் என்பதை உணருங்கள்.

### எப்போது எழுதுவது?

மனிதர்களின் மூளை காலை நேரத்தில் சிறப்பாகச் வேலைசெய்யும். எனவே அதிகாலையில் எழுந்திருங்கள். ஏதாவது சாப்பிடுங்கள். முறையான தூக்கமும் உணவும் இருந்தால் நீங்கள் சிறப்பாகச் செயல்படுவீர்கள். ஒரு நாளில் 90 நிமிடம் முதல் 3 மணி நேரம் வரையில் எழுதத் தயாராகுங்கள். தினமும் எழுதுவீர்கள் என்றால் 15 நிமிடங்கள் எழுதுவதுகூட பயனளிக்கக்கூடியதுதான். ஓய்வு நேரம் கிடைக்கும்போது எழுதலாம் என்று காத்திருக்காதீர்கள். ஒருபோதும் உங்களுக்கு ஓய்வு நேரம் கிடைக்கப் போவதில்லை. இல்லாத ஒன்றை நம்பிக்கொண்டு உங்கள் வெற்றியை வீணடிக்காதீர்கள். சிறந்த எழுத்தாளர்கள் அநேகர் தினமும் எழுதக்கூடியவர்கள்.

எழுத அமரும்போது உங்கள் மனம் கவனம் குவிக்க மறுக்கும். இது இயல்பானது என்பதை முதலில் உணருங்கள். உங்கள் மூளையில் பழக்கமாகியுள்ள அன்றாட நடைமுறைகள் உங்களைத் திசை திருப்பும். பொறுமையைக் கைகொண்டு அந்தத் திசைத் திருப்பல்களை வெல்ல முடியும். எழுத அமரும் முதல் 15 நிமிடங்களுக்கு அந்தத் திசைத்திருப்பல் எண்ணங்களுக்கு செவிசாய்க்காமல் இருந்தால் அதன் பிறகு உங்கள் மனம் தானாகவே அமைதி

அடைந்துவிடும். எழுத அமரும்போது திசைதிருப்பும் எண்ணங்கள் வருவது இயல்பு என்பதையும், அந்த எண்ணங்களுக்கு ஒப்புக்கொடுக்காமல் இருந்தால் கொஞ்ச நேரத்தில் அவை தானாகவே மறைந்து, எழுதும் மனநிலை ஏற்பட்டுவிடும் என்பதையும் நீங்கள் உங்கள் மனதில் இருத்திக்கொள்ளுங்கள். இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும், திசைத்திருப்பும் எண்ணங்கள் ஏற்படத்தான் செய்யும். ஆனால், நீண்ட நேரத்துக்கு அவை நீடிக்காது.

அதேபோல் ஒரு நாளைக்கு 6 மணி நேரம் எழுத முடியும் என கற்பனை செய்துகொள்ளாதீர்கள். அது உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்வது. ஒரு நாளைக்கு அதிகபட்சம் 3 மணி நேரம்தான் முழு ஆற்றலுடன் எழுத முடியும். கவனம் குவித்த 3 மணி நேர எழுத்தானது கவனமற்ற 10 மணி நேர எழுத்தைவிடச் சிறந்தது. தினமும் எழுத விரும்பினால். எழுதத் தொடங்குவதற்கு நீண்ட நேரம் காத்திருக்காதீர்கள். அதேசமயம், வெறி கொண்டு உங்களை வருத்திக்கொள்ளாதீர்கள். குறிப்பிட்ட இடைவெளியில் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். முழுமையை நோக்கி அமர்ந்து பலர் எதையும் எழுதாமல் இருந்துவிடுவார்கள். முழுமை முக்கியமல்ல. ஒன்றை எழுதி முடிப்பதுதான் முக்கியம். நீங்கள் எழுதினால்தான் அதில் ஏதேனும் மாற்றி அமைக்க முடியும்.

### வார்த்தை - வாக்கியம் - பத்தி

கட்டுரை எழுதுவதற்குச் சில அடிப்படையான விஷயங்கள் உள்ளன. முதலாவது வார்த்தைத் தேர்வு. அடுத்தது, தெளிவான வாக்கிய அமைப்பு. மூன்றாவது பத்தி ஒழுங்கு. ஒரு வாக்கியத்தில் ஒவ்வொரு வார்த்தையும் துல்லியமாகப் பொருந்தியிருக்கவேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் தர்க்கரீதியாகவும் முறையாகவும் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். பத்தியைப் பொறுத்தவரை

**எந்த ஒரு விதியும் இறுதியானது அல்ல. ஒரு தொழில்நுட்பத்தில் கைதேர்ந்தவராக ஆகிவிட்டால் நீங்கள் பழைய விதிகளை உடைத்துப் புதிய சாத்தியங்களைக் காட்டலாம். தொடக்க நிலையில் உள்ள நபர் எனில், விதிகளைப் பின்பற்றுவதே நல்லது.**

யில் 100 வார்த்தைகளுக்கும் மேல் ஒரு பத்தியை நீட்டிக்க வேண்டாம்.

ஒரு பத்தியில் ஏதேனும் ஒரு சிந்தனை முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். 100 வார்த்தைகள் அளவில் ஒரு சிந்தனையை உங்களால் எழுத முடியாவிட்டால், அந்தச் சிந்தனை உங்களுள் இன்னும் முழுமை பெறவில்லை என்று அர்த்தம். அதுவே, ஒரு பத்தி 300 வார்த்தைகளுக்கு மேல் நீளும்பட்சத்தில் அதில் ஒன்றுக்கும் மேற்பட்ட சிந்தனைகள் இருப்பதாக அர்த்தம். அவற்றை இனம்கண்டு தனித்தனியாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு பத்திகளும் தர்க்க ரீதியான வரிசைப் பாட்டில் அமைக்கப்படவேண்டும். கட்டுரை எழுதுதலில் இதுதான் முக்கியம்.

கட்டுரையின் வார்த்தை எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் 1,000 வார்த்தைகளைத் தாண்டி எழுத வேண்டாம். பொதுவாக, 1,000 வார்த்தைகளுக்கும் மேல் கட்டுரை எழுதும்போது கட்டுரையின் சாராம்சம் திரிந்துவிடுவது உண்டு. அதனால், 1,000 வார்த்தைகள் அளவிலே கட்டுரை இருப்பது நல்லது. ஒரு பத்திக்கு நூறு வார்த்தைகள் எனில் 1,000 வார்த்தைகள் கட்டுரையில் 10 பத்திகள் இருக்கும். இதுவே நல்லதொரு செறிவான அமைப்பு.

எந்த ஒரு விதியும் இறுதியானது அல்ல. ஒரு தொழில்நுட்பத்தில் கைதேர்ந்தவராக ஆகிவிட்டால் நீங்கள் பழைய விதிகளை உடைத்துப் புதிய சாத்தியங்களைக் காட்டலாம். தொடக்க நிலையில் உள்ள நபர் எனில், விதிகளைப் பின்பற்றுவதே நல்லது. வாக்கியங்களும் பத்திகளும் முறையாகவும் செறிவாகவும் அமைக்கப்பட்டிருப்பதால் மட்டும் ஒரு கட்டுரை நல்ல கட்டுரை ஆகிவிடாது. அதில் தனித்துவம் இருக்கவேண்டும். அது உங்கள் திறன் சார்ந்தது. அனைத்துக்கும் மேலாகக் கட்டுரையில் அழகியல் மிகவும் முக்கியம். உங்களுடைய மொழி நடையாகட்டும், வார்த்தைத் தேர்வாகட்டும் மிகவும் அழகாக இருக்கவேண்டும். ஒருபோதும், உங்கள் கட்டுரை அலுப்பு ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது.

### தலைப்புக் கேள்வி

உங்களை ஈர்ப்பவற்றை, உங்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துபவற்றை, உங்களுக்கு முக்கியமாக இருப்பவற்றை நீங்கள் கட்டுரை எழுதுவதற்குத் தேர்வுசெய்யுங்கள். நீங்கள் எழுத விரும்புவதை, அதாவது கட்டுரையின் மையமாக நீங்கள் எதைப் பேசப்போகிறீர்களோ அதைக் கேள்வி வடிவில் மாற்றிக்கொள்ளுங்கள். கீழே சில உதாரணங்கள்.

ஹெமிங்வேயின் ‘தி சன் ஆல்ஸோ ரைஸஸ்’ (The Sun also Rises) முக்கியமான புத்தகமா?

மனதைப் பற்றிய கார்ல் யுங் மற்றும் சிக்மெண்ட் பிராயிட்டின் கருதுகோள்கள் எப்படி முரண்படுகின்றன?

காலத்தைப் பற்றிய கருத்தாக்கத்தில் நியூட்டனும் ஐன்ஸ்டைனும் எப்படி வேறுபடுகின்றனர்?

வாசிப்புப் பட்டியல் மற்றும் குறிப்பு எடுத்தல்

நீங்கள் தேர்வுசெய்திருக்கும் தலைப்பு சம்பந்தமாக குறைந்தது 5 முதல் 10 கட்டுரைகள் அல்லது புத்தகங்களைப் படிக்கவேண்டும். அவற்றை 1,2,3… என்று பட்டியலிடுங்கள். ஒவ்வொரு கட்டுரையிலிருந்தும் நீங்கள் முக்கியமெனக் கருதும் அல்லது நீங்கள் மாறுபடும் விஷயங்களைக் குறிப்பு எழுதுங்கள். அச்சில் படிப்பதாக இருந்தால் படிக்கும் பக்கங்களின் மீது பென்சில் வைத்து அடிக்கோடிடுவது, கணினியில் படிப்பதாக இருந்தால் மஞ்சள் நிறம்கொண்டு தனித்துக் காட்டுவது போன்றவற்றின் பெயர் குறிப்பெடுப்பது அல்ல.

நீங்கள் படித்தவற்றின் சாராம்சத்தைத் தொகுத்து எழுதுவதுதான் குறிப்பு எடுப்பது. கட்டுரையாளர் என்ன எழுதியிருக்கிறாரோ அதே தொனியில் குறிப்பு எழுதக்கூடாது. மாறாக, நீங்கள் அந்தக் கட்டுரையை என்னவாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தொகுத்து எழுதுங்கள். அது உங்களைச் செறிவூட்டும். உங்கள் சிந்திக்கும் திறனையும் மொழி வளத்தையும் மேம்படுத்தும்.

### உள்ளடக்கக் கேள்விகள்

உள்ளடக்கக் கேள்விகளை உருவாக்குவதுதான் கட்டுரை எழுதுவதில் மிகவும் முக்கியமான இடம். அதுதான் கட்டுரையின் உள்ளடக்கமாக இருக்கப் போகிறது. 1,000 வார்த்தைகள் கட்டுரைக்கு 10 உள்ளடக்கக் கேள்விகள் தேவை. அதிகபட்சம் 15 உள்ளடக்கக் கேள்விகள் இருக்கலாம். அதற்குமேல் வேண்டாம். உள்ளடக்கக் கேள்விகளுக்கான உதாரணம்:

ஆபிரகாம் லிங்கன் என்பவர் யார்? இதுதான் நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் தலைப்பு என்றால், அதற்கான உள்ளடக்கக் கேள்விகள் கீழ் வருமாறு இருக்கலாம்.

ஏன் ஆபிரகாம் லிங்கன் நினைவுகூரப்பட வேண்டியவராகிறார்?

அவருடைய குழந்தைப் பருவத்தில் நடந்த முக்கியமான நிகழ்வு என்ன?

அவருடைய வாலிபப் பருவம் பற்றி?

அவருடைய இளவயது வாழ்க்கையைப் பற்றி?

அவர் எதிர்கொண்ட சவால்கள் என்ன?

அவருடைய காலத்தில் முதன்மையான பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினை என்ன?

அவருடைய எதிரிகள் யார்?

அந்த எதிரிகளை அவரை எப்படிக் கையாண்டார்?

அவருடைய முக்கியமான சாதனைகள் என்ன?

அவர் எப்படி இறந்தார்?

நீங்கள் மூவாயிரம் வார்த்தைகள் கொண்ட நெடுங்கட்டுரை எழுத விரும்பினால் அதற்கான உள்ளடக்கக் கேள்விகள் கீழ்வருமாறு இருக்கலாம்.

முதலாளித்துவம் என்பது என்ன? இது நீங்கள் தேர்ந்தெடுத்த தலைப்பாக இருந்தால் அதற்கான உள்ளடக்கக் கேள்விகள்:

1. முதலாளித்துவம் எப்படி வரையறுக்கப்படுகிறது? முதலாளித்துவம்பற்றி வெவ்வேறு எழுத்தாளர்கள், கோட்பாட்டாளர்கள் கூறிய வரையறை.
   எழுத்தாளர் 1
   எழுத்தாளர் 2
   எழுத்தாளர் 3
2. எங்கு, எப்போது முதலாளித்துவம் தோன்றியது?
   நாடு 1
   நாடு 2
3. முதலாளித்துவம் அது தோன்றிய முதல் 50 ஆண்டுகளில் எப்படி வளர்ந்தது?
   இரண்டாவது 50 ஆண்டுகளில் அதன் வளர்ச்சி எப்படி இருந்தது?
4. முதலாளித்துவத்துக்கு முன்னோடி என்ன?
5. முதலாளித்துவத்தின் நன்மைகள் என்ன?
   சொத்து உருவாக்கம்
   தொழில்நுட்பப் பாய்ச்சல்
   தனிநபர் சுதந்திரம்
6. முதலாளித்துவத்தின் தீமைகள் என்ன?
   சமத்துவமற்ற பகிர்வு
   மாசுபாடு மற்றும் ஏனைய பாதிப்பு
7. முதலாளித்துவத்துக்கு மாற்று என்ன?
   பாசிசம்
   கம்யூனிஸம்
8. மாற்றுகளின் விளைவுகள் எப்படியானதாக இருக்கும்?
9. எதிர்கால சாத்தியம் என்ன?
10. முடிவு

பத்து உள்ளடக்கக் கேள்விகளுக்கான பதில்களை எழுதிவிட்டீர்கள் என்றால் உங்கள் கட்டுரையின் முதல் வரைவு முடிவுக்கு வந்துவிட்டது என்று அர்த்தம். 1,000 வார்த்தைகள் கொண்டதாக உங்கள் கட்டுரை இருக்கவேண்டும் என்றால், உங்கள் முதல் வரைவில் நீங்கள் 1,250 வார்த்தைகள் எழுதவேண்டும். அதாவது எப்போதும் முதல் வரைவு என்பது இறுதி வடிவத்தில் நீங்கள் திட்டமிட்டிருக்கும் வார்த்தைகளின் எண்ணிக்கையைவிட 25% கூடுதலாக இருக்கவேண்டும்.

எப்போதும் முதல் வரைவு என்பது குப்பைக் கூளம் போல்தான் இருக்கும். அது குறித்துக் கவலைப்படாதீர்கள். செம்மைப்படுத்தலில் (எடிட்டிங்) அதை சரிசெய்துகொள்ளலாம். பொதுவாக, கட்டுரை எழுதுவது என்பது இரண்டு கட்டங்களால் ஆனது. முதலாவது உருவாக்கம். இரண்டாவது செம்மைப்படுத்தல். இந்த இரண்டையும் ஒரேநேரத்தில் மேற்கொள்ளக்கூடாது. முதலில் எழுத வேண்டிய அனைத்தையும் எழுதிவிடுங்கள். அதன் பிறகு அதை செம்மைப்படுத்துங்கள்.

### செம்மைப்படுத்தல்

ஒவ்வொரு பத்தியாக செம்மைப்படுத்தல் வேண்டும். முதலில் ஒரு பத்தியின் ஒவ்வொரு வாக்கியத்தையும் தனித்தனி வரியாக ஆக்கிக்கொள்ளுங்கள். இப்போது அந்த வாக்கியத்தை மாற்றி எழுதுங்கள். அதாவது முந்தைய வாக்கியத்தைவிட செறிவு மிக்கதாக. ஏனென்றால், முதல் வரைவில் நீங்கள் ஒரு வாக்கியத்தைச் சீரானதாக, துல்லியமானதாக எழுதாமல் இருந்திருக்கலாம். அதனால் இப்போது அதை மாற்றி எழுதுங்கள். தேவையற்ற வார்த்தைகளைப் பாரபட்சமில்லாமல் நீக்குங்கள். ஒவ்வொரு வாக்கியத்தையும் வாய்விட்டு வாசித்துப் பாருங்கள். அது உங்களுக்கு எப்படி ஒலிக்கிறது எனக் கவனியுங்கள். இவ்வாறாக ஒவ்வொரு பத்தியையும் செம்மைப்படுத்துங்கள். வாக்கியத்தை முன்னும் பின்னும் மாற்றியமைத்தால் சரியாக இருக்கும் எனத் தோன்றினால் அதையும் செய்யுங்கள்.

இப்போது உங்கள் கையில் செம்மைப்படுத்தி உருவாக்கப்பட்ட 10 பத்திகள் இருக்கும். இப்போது ஒவ்வொரு பத்தியாகச் சரி பாருங்கள். பத்திகள் சரியான வரிசையில் அமைக்கப்பட்டிருக்கின்றனவா, அவை ஒவ்வொன்றும் தம்மளவில் சிந்தனையைக் கடத்துகின்றனவா, அவை உள்ளடக்கக் கேள்வியுடன் பொருந்திப்போகின்றனவா என்பதைத் தீவிர கவனம் எடுத்துப் பாருங்கள். பொருத்தமற்று இருக்கும்பட்சத்தில் பத்திகளை மாற்றியமைத்து ஒத்திசைவை உருவாக்குங்கள். பத்திகளை வரிசைப்படுத்துவதில் தர்க்க ஒழுங்கு மிகவும் முக்கியமானது.

# பொருளாதார நெருக்கடிக்கு என்ன காரணம்? யார் காரணம்?

**ஆர்.ராமகுமார்**

கடுமையான நெருக்கடியில் சிக்கியிருக்கிறது இலங்கைப் பொருளாதாரம். இப்போதைய நெருக்கடிக்குக் காரணங்கள் என்ன, இத்தகு நிலையை நோக்கி அதைத் தள்ளியவர்கள் யார்? இதையெல்லாம் அடையாளம் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

இந்த நெருக்கடிக்கான மூல காரணத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் இலங்கை காலனியாக இருந்த காலகட்டத்திலிருந்தும், உள்நாட்டுப் போருக்குப் பிறகும்கூட நாட்டின் வளர்ச்சி முயற்சிகளில் நடந்த தவறுகள் வரையிலும் எழுதலாம் என்றாலும், நம்முடைய தேவைகளுக்காக, கடந்த பத்தாண்டுகளில் இலங்கை அரசு எடுத்த முடிவுகள் - நடந்த சம்பவங்கள் பற்றி மட்டும் அதிகக் கவனம் செலுத்துவோம்.

21ஆம் நூற்றாண்டில்கூட இலங்கையின் பொருளாதார எதிர்காலம் தேயிலை, ரப்பர், ஏலம் - மிளகு உள்ளிட்ட வாசனைத் திரவியங்கள், ஆடைகள் ஆகியவற்றின் ஏற்றுமதியைச் சுற்றியே தொடர்ந்து பிணைந்திருக்கிறது. தேயிலை - ரப்பர் போன்ற பிரதான பொருள்களின் ஏற்றுமதி, சுற்றுலா மூலம் கிடைத்த வருமானம், வெளிநாடுவாழ் இலங்கையர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பிவைத்த வருமானம் ஆகியவற்றின் மூலமே அது தனக்குத் தேவைப்பட்ட அன்னியச் செலாவணியைப் பெற்றுவந்தது. அந்த அன்னியச் செலாவணியைக்கொண்டுதான் உணவு தானியம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளை இறக்குமதி செய்துகொண்டது.



இருபத்தாறு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த உள்நாட்டுப் போர் 2009இல் முடிவுக்கு வந்ததும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி புத்துயிர் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. மக்கள் அதுவரை அடக்கி வைத்திருந்த நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவர் என்பதால் பொருளாதாரம் வளரும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. அதேபோல், உள்நாட்டுப் போர் முடிந்தவுடன் 2009 முதல் 2012 வரையில் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு (ஜிடிபி) ஆண்டுக்கு 8%-9% ஆக உயரவும்செய்தது.

2013க்குப் பிறகு உலக அளவில், பண்டங்களுக்கான சந்தை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் இலங்கையின் பொருளாதாரமும் வீழ்ந்தது, ஏற்றுமதி மந்தகதியை அடைந்தது, இறக்குமதி அதிகரித்தது.

2013க்குப் பிறகு ஜிடிபியானது முன்பிருந்ததில் பாதியாகக் குறைந்துவிட்டது. மகிந்த ராஜபட்ச தலைமையிலான அரசு பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடம் (ஐஎம்எஃப்) 2009இல், 260 கோடி அமெரிக்க டாலர்கள் கடன் வாங்கியபோது ஒப்புக்கொண்ட நிபந்தனைகள் காரணமாக, இந்த வீழ்ச்சிக்கு எதிராக மாற்றுப் பொருளாதார நடவடிக்கைகளை எடுக்க முடியாதபடிக்கு அரசின் கைகள் கட்டப்பட்டிருந்தன.

உள்நாட்டுப் போர் நடந்தபோது இலங்கை அரசின் நிதிநிலை அறிக்கைகளில் வரவைவிட செலவு அதிகமாகவே இருந்ததால் பற்றாக்குறை பட்ஜெட்டுகளாகவே அவை தொடர்ந்தன. 2008இல் உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் முதலீடு செய்திருந்தவர்கள் தங்களுடைய முதலீடுகளை வேகமாகவும் கணிசமாகவும் திரும்ப எடுத்துச் சென்றனர். இதனால் இலங்கை வசமிருந்த அன்னியச் செலாவணி கையிருப்பு சடுதியில் கரைந்துவிட்டது.

இந்தச் சூழலில்தான், அரசின் நிதிநிலைப் பற்றாக்குறையானது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 5%-க்கும் குறைவாக 2011-க்குள் கட்டுப்படுத்தப்படும் என்கிற உறுதிமொழியின் பேரில் 2009இல் பன்னாட்டுச் செலாவணி நிதியம் கடன் கொடுத்தது.

பொருளாதார வளர்ச்சி அதிகரிக்காமலும் ஏற்றுமதி உயராமலும், அன்னியச் செலாவணி கையிருப்பு தொடர்ந்து கரைந்துவந்த வேளையில்தான் ஐக்கிய தேசியக் கட்சி (யுஎன்பி) தலைமையிலான கூட்டணி அரசு 150 கோடி அமெரிக்க டாலர்கள் கடன் கேட்டு பன்னாட்டுச் செலாவணி நிதியத்தை 2016இல் அணுகியது. இந்தக் கடனை 2016 முதல் 2019 வரையில் தருமாறு கோரியது. 2020-க்குள் அரசின் வருவாய்க்கும் செலவுக்குமான பற்றாக்குறை அளவு ஜிடிபியில் 3.5% அளவாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பன்னாட்டுச் செலாவணி நிதியம் நிபந்தனை விதித்தது. "நாட்டின் வரி விகிதங்களைக் குறைத்து சீர்திருத்த வேண்டும், வரி நிர்வாகம் எளிமைப்படுத்தப்பட வேண்டும், அரசின் செலவுகளைக் கட்டுப்படுத்தி படிப்படியாகக் குறைக்க வேண்டும், அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் வணிக நிறுவனங்களைப் போல லாபமீட்டும் வகையில் செயல்பட வேண்டும், அன்னியச் செலாவணி மாற்று விகிதங்களில் நீக்குப்போக்காக நடந்துகொள்ள வேண்டும், தொழில் உற்பத்தியிலும் வியாபாரத்திலும் போட்டிச் செயல்பாட்டு உணர்வை அரசு வளர்த்துக்கொள்ள வேண்டும், வெளிநாட்டு முதலீடுகள் உள்ளே வர கட்டுப்பாடுகளை வெகுவாக தளர்த்த வேண்டும்" என்று அது நிபந்தனைகளை விதித்தது.

செலாவணி நிதியம் விதித்த நிபந்தனைகளால் இலங்கையின் பொருளாதார நிலை மேலும் மோசமானது. 2015 இல் 5%-ஆக இருந்த ஜிடிபி 2019இல் 2.9%-ஆகக் குறைந்தது. 2015இல் 31.2%-ஆக இருந்த முதலீட்டு விகிதம் 2019இல் 26.8%-ஆக சரிந்தது. 2015இல் 28.8% ஆக இருந்த சேமிப்பு விகிதம் 2019இல் 24.6%-ஆகக் குறைந்தது. 2016இல் அரசின் வருவாய் ஜிடிபியில் 14.1%-ஆக இருந்தது 2019இல் 12.6%-ஆகக் குறைந்தது. அரசின் மொத்தக் கடன் அளவு 2015 இல் ஜிடிபியில் 78.5%-ஆக இருந்தது, 2019இல் 86.8% ஆக அதிகரித்தது.

**பொருளாதாரத்துக்குப் புதிய அதிர்ச்சிகள்**

இலங்கைப் பொருளாதாரத்துக்கு 2019இல் மேலும் இரண்டு புதிய அதிர்ச்சிகள் ஏற்பட்டன.

முதலாவது, 2019 ஏப்ரலில் ஈஸ்டர் பண்டிகையின்போது கொழும்பு நகரிலும் பிற இடங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்களில் நிகழ்ந்த குண்டுவெடிப்புகளால் 253 பேர் உயிரிழந்தனர். இச்செய்தி ஏற்படுத்திய அச்சத்தால் வெளிநாட்டுப் பயணிகள் இலங்கைக்கு சுற்றுலா வருவது வெகுவாக வீழ்ச்சி அடைந்தது. அன்னியச் செலாவணி கையிருப்பு கரைந்துகொண்டிருந்த வேளையில், புதிதாக மேலும் சேருவது நின்றுவிட்டது. அதனால் பொருளாதாரம் புத்துயிர் பெறும் வாய்ப்புகளும் அருகிவிட்டன.

இரண்டாவது, 2019 நவம்பரில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு தேர்தலில் தோல்வியுற்று ஆட்சியை இழந்தது. கோதபய ராஜபட்ச தலைமையிலான இலங்கை பொதுஜன பெரமுன (எஸ்எல்பிபி) தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தது. "வரி விகிதங்களைக் குறைப்போம், விவசாயிகளுக்குச் சலுகைகளை அளிப்போம்" என எஸ்எல்பிபி தேர்தலில் வாக்குறுதி அளித்து வெற்றி பெற்றிருந்தது. இந்த வாக்குறுதிகள் இலங்கைக்குக் கடன் கொடுத்த பன்னாட்டுச் செலாவணி நிதியம் விதித்த நிபந்தனைகளுக்கு நேர் எதிரானவை. நிதியம் அளித்த புதிய நிதியுதவித் திட்டங்களுக்கு வலுவான மாற்றுக் கொள்கைத் திட்டம் ஏதும் புதிய அரசிடம் இருக்கவில்லை. அவர்கள் அளித்த வாக்குறுதிகள் அவற்றுக்கு முரணாகவே இருந்தன.

ஆட்சிக்கு வந்தவுடன் அதிபர் கோத்தபய ராஜபட்ச வரி விகிதங்களை வெகுவாகக் குறைத்தார். 2019 டிசம்பரில் மதிப்பு கூட்டப்பட்ட விரி விகிதங்கள் (வாட்) 15%-லிருந்து 8%-ஆகக் குறைக்கப்பட்டது. 'வாட்' பதிவுக்கான வருடாந்திர குறைந்தபட்ச விற்றுமுதல் வரம்பு 1.2 கோடி இலங்கை ரூபாய் என்ற அளவிலிருந்து 30 கோடி இலங்கை ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டது.

தேசிய வளர்ச்சிக்கான வரி, வருவாய் பெறும்போதே வரி செலுத்தும் திட்ட நடைமுறை, பொருளாதார

**கட்டுரை...**

இப்போது உங்கள் கையில் இருப்பது கட்டுரையின் இரண்டாவது வரைவு. இரண்டாவது வரைவிலேயே உங்கள் கட்டுரை மற்றவர்களின் கட்டுரைகளைவிட மேம்பட்டதாக மாறிவிடும். ஆனால், உங்கள் கட்டுரை இன்னும் முடிந்துவிடவில்லை. இப்போது உங்கள் கட்டுரையை 'பி' நிலையிலிருந்து 'ஏ' நிலைக்கு, அதாவது 'நல்ல' என்ற நிலையிலிருந்து 'சிறந்த' என்ற நிலைக்கு எடுத்துச்செல்ல வேண்டும். அதற்கு பின்வரும் வழிமுறைகள் உதவும்.

கீழ்வரும் விதிகள் உங்களுக்குத் தேவையற்றதாக எரிச்சலூட்டக்கூடியதாகத் தோன்றலாம். ஆனால், இந்த விதிகள்தான் உங்கள் கட்டுரையைத் தனித்துக் காட்டக்கூடியது.

உங்கள் கையில் இருக்கும் இரண்டாவது வரைவை மீண்டும் ஒருமுறை முழுமையாக வாசியுங்கள். நீங்கள் வாசித்ததிலிருந்து புதிதாக மீண்டும் 10 உள்ளடக்கக் கேள்விகளை எழுதுங்கள். அவற்றை எழுதும்போது உங்கள் கட்டுரைக்குச்சென்று பார்க் காதீர்கள். உங்கள் நினைவிலிருந்து எழுதுங்கள். அப்படி எழுதும்போது மிக அத்தியாவசியமானவையும் முக்கியமானவையும் மட்டுமே தங்கும். தேவையற்றவை நீங்கிவிடும். இப்போது உங்கள் உள்ளடக்கக் கேள்விகளுக்கு ஏற்ப, நீங்கள் கட்டு ரையில் எழுதிய பத்திகளைப் பொருத்துங்கள். அப்படிப் பொருத்தும்போது உங்கள் முந்தைய வரைவில் எழுதிய பல விஷயங்கள் உங்களுக்குத் தேவையற்றவையாகத் தோன்றக்கூடும். பாரபட்சம் பார்க்காமல் அவற்றைக் கழித்துவிடுங்கள்.

இப்போது உங்கள் கையில் இருப்பது மூன்றாவது வரைவு. சில நாட்கள் காத்திருந்து வாசித்துப்பாருங்கள். இன்னும் மேம்படுத்தலாம் எனத் தோன்றினால், மீண்டும் செம்மைப்படுத்துங்கள். அதற்கு இடமே இல்லை என்ற நிலை வரும்போது உங்கள் கட்டுரை முடிந்துவிட்டதாக அர்த்தம்.

சிறந்த கட்டுரை எழுதுவதற்கு என்னுடைய வாழ்த்துகள்

## பொருளாதார ....

சேவைகளுக்கான வரி ஆகியவையும் ஒட்டுமொத்தமாக ரத்துசெய்யப்பட்டன. ‘வாட்’ வரி செலுத்துவதற்காக அரசிடம் பதிவு செய்திருந்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 2019 முதல் 2020-க்குள் 33.5% சரிந்துவிட்டது. இதனால் நாட்டின் ஜிடிபியில் 2% அளவுக்கு வரி வருவாயை அரசு இழந்தது. 2019இல் ஜிஎஸ்டி - வாட் வரிகள் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் 2020இல் பாதியாகிவிட்டது.

2020இல் பரவிய கோவிட்-19 பெருந்தொற்று, அதனால் ஏற்பட்ட பொதுமுடக்கம் காரணமாக பொருளாதார நிலைமை படுமோசமான நிலைக்கு நாட்டைத் தள்ளிவிட்டது. தேயிலை, ரப்பர், ஏலம் - மிளகு போன்ற வாசனைத் திரவியங்கள், ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி மிகவும் பாதிக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் வருவதும் அவர்கள் மூலம் கிடைக்கும் வருமானமும் மேலும் குறைந்தது. பெருந்தொற்றுக் காலத்தில் அரசு செய்ய வேண்டிய செலவு அதிகரித்தது. அரசின் வருவாய்க்கும் செலவுக்கும் இடையிலான பற்றாக்குறை மட்டும் 2020, 2021ஆம் ஆண்டுகளில் 10% என்ற அளவையும் மிஞ்சியது. பொதுக் கடனுக்கும் நாட்டின் ஜிடிபிக்கும் இடையிலான விகிதம் 2019இல் 94%-ஆக இருந்தது 2020இல் 119% ஆக உயர்ந்தது.

இலங்கை ஆண்டுதோறும் உர மானியமாக 26 கோடி அமெரிக்க டாலர்களை (ஜிடிபியில் 0.3%) செலவிட்டு வந்தது. பெரும்பாலான உரம் இறக்குமதி மூலம்தான் பெறப்பட்டது. இறக்குமதியால் செலவாகும் அன்னியச் செலாவணிகளை மிச்சப்படுத்த கோத்தபய அரசு புதுமையான - அதேசமயம் மிகவும் வினோதமான முடிவை எடுத்தது. 2021 மே முதல் வெளிநாடுகளிலிருந்து உரம் இறக்குமதிசெய்யப்பட மாட்டாது என்று அறிவித்தது. ஒரே நாளில் இலங்கை முழுவதும் இயற்கை வேளாண்மைக்கு மாறியாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது. விவசாயிகள் போராட்டம் நடத்திய பிறகு 2021 நவம்பரில் இந்தக் கொள்கை முடிவு கைவிடப்பட்டது. ஆனால், அதற்குள் இலங்கையின் விவசாய உற்பத்தி கணிசமாகக் குறைந்து பேராபத்து ஏற்பட்டுவிட்டது.

ரசாயன உரங்கள் பயன்பாட்டை ஒரேயடியாகக் கைவிட்டுவிட்டு இயற்கை விவசாய முறைக்கு மாறினால் சாகுபடி கணிசமாகக் குறைந்து அத்தியவாசிய உணவுப் பொருள்களுக்கே கடும் தட்டுப்பாடும் விலைவாசி உயர்வும் ஏற்படும் என்று வேளாண் விஞ்ஞானிகள் உள்பட அனைவரும் கோத்தபயவை ஒரே குரலில் எச்சரித்தனர். நெல் சாகுபடியில் 25%, தேயிலைச் சாகுபடியில் 35%, தென்னைச் சாகுபடியில் 30% வீழ்ச்சி அடையும் என்று கூட்டாக அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தனர்.

### உரத் தடையால் தோல்வி

விஞ்ஞானிகளின் எச்சரித்தபடியே நடந்தது. 'வேளாண் உற்பத்தியி ரசாயன உரங்களைத் தடை செய்ததால் எதிர்பார்த்ததைவிட மோசமான பாதகங்களே விளைந்தன' என்று பன்னாட்டுச் செலாவணி நிதியம் தனது மதிப்பீட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நடவடிக்கையாலும் பொருளாதார மீட்சி மேலும் பின்னடைவையே சந்தித்தது. வேளாண் உற்பத்தி குறைந்ததால் இறக்குமதியை அதிகப்படுத்துவது அவசியமாகிவிட்டது.

அன்னியச் செலாவணி பற்றாக்குறையாக இருக்கும்போது இறக்குமதி செய்வதும் இயலாததாகிவிட்டது. இதனால் பணவீக்க விகிதம் 2022 பிப்ரவரியில் 17.5% என்ற உயர் அளவை எட்டியிருக்கிறது. தேயிலை, ரப்பர் சாகுபடியில் ஏற்பட்ட உற்பத்தித்திறன் குறைவாலும் ஏற்றுமதி வருவாய் குறைந்துவிட்டது. அன்னியச் செலாவணி கையிருப்பைக் காப்பாற்ற வேண்டும் என்கிற நோக்கில் எடுக்கப்பட்ட ரசாயன உரப் பயன்பாட்டுத் தடை நடவடிக்கை, இறக்குமதிக்காக அதிக செலாவணியைச் செலவிட வேண்டிய நிலைக்கு நாட்டை மேலும் தள்ளிவிட்டது.

இலங்கையின் நடப்புப் பொருளாதார நெருக்கடிக்குப் பல காரணங்கள். நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பில வரலாற்றுரீதியாகவே காணப்படும் சமமற்ற நிலை, கடனுக்காக பன்னாட்டுச் செலாவணி நிதியம் விதித்த நிபந்தனைகள், தவறான கொள்கைகளைத் தேர்ந்தெடுத்து எதேச்சாதிகாரமாகச் செயல்படுத்திய ஆட்சியாளரின் மோசமான பொருளாதார முடிவுகள், இயற்கை உரம் எனும் போலியான அறிவியல் முறையை அதிகாரப் பூர்வமாகத் தழுவிய நிலை ஆகியவை நெருக்கடி முற்றக் காரணங்களாகிவிட்டன. எதிர்காலமும் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகிறது.

பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடமே அரசு கடன் கேட்டு மீண்டும் செல்லும், அதுவும் புதிய நிபந்தனைகளை விதிக்கும். உலக அளவில் இப்போது விலைவாசி உயர்வு, அவசியப் பண்டங்களுக்கு பற்றாக்குறை நிலவும் நேரத்தில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக பன்னாட்டுச் செலாவணி நிதியம் விதிக்கப் போகும் கொள்கைகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை மட்டும் கட்டுப்படுத்தப் போவதில்லை, நாட்டு மக்களின் துயரங்களையும் பல மடங்கு அதிகரிக்கப்போகிறது!

# கொரோனா பெருந்தொற்று முடிவுக்கு வந்துவிட்டதா?

**கு.சிவராமன்**

நாட்டில் டீசல் இல்லை, மின்சாரம் இல்லை, சமையல் எரிவாயு இல்லை, பால் மா இல்லை, எந்தப் பொருளும் வாங்கக்கூடிய விலையில் இல்லை. மக்கள் வீதிகளில், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசை கட்டி நிற்கிறார்கள். அரச தலைவரின் வீட்டுக்கு வெளியே இரவில் கொந்தளித்துப் போராட்டம் நடத்துகிறார்கள். இந்தப் பரபரப்புகளுக்கு நடுவே கொவிட்-19 பெருந்தொற்றுப் பற்றிய கவலை யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

சாலைகளில் திரிபவர்களும் சந்தைகளில் ஊடாடுபவர்களும் வரிசைகளில் நிற்பவர்களும் கொவிட்-19 சுகாதார விதிமுறைகளைப் புறந்தள்ளியே நடந்துகொள்கிறார்கள். பலரின் முகங்களில் கவச மறைப்புக்கள் இல்லை. சமூக இடைவெளியா அப்படியென்றால் என்ன? இப்படிக் கேட்கும் நிலைமைதான் இருக்கிறது. பழையபடி கைகளை அடிக்கடி கழுவுவது குறித்தோ சனிடைசர் போட்டுக்கொள்வது குறித்தோ யாருக்கும் அக்கறையில்லை. கொண்டாட்டங்கள், ஒன்றுகூடல்கள், பொது நிகழ்வுகள் எல்லாம் தாராளம்.

அப்படியென்றால் கொரோனா அச்சுறுத்தல் முற்றாக ஒழிந்துவிட்டதா?

பங்குனி (மார்ச்) 24இல் வெளியான பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னலில் 4ஆம் அலைக்கான ஆய்வறிக்கை சில செய்திகளைச் சொல்லியுள்ளது. அந்தக் கட்டுரையில் பேசியிருப்பது ‘டெல்டாக்ரான்’ எனும் கொரோனாவின் புதிய வேற்றுரு பற்றி.

அந்தப் புதிய வேற்றுருவில், ஸ்பைக் புரதம் 36 வகை மாற்றங்களைக் கொண்டுள்ளதாம். இந்த 36ல், 27 புரதக் கூறுகள் டெல்டா போல (AY.4 ), 4 புரதக் கூறுகள் ஓமிக்ரான் (BA.1) போல இருக்கின்றனவாம். மிச்சமுள்ள 5 கூறுகள் இரண்டின் தன்மைகளையும் கொண்டுள்ளனவாம். கார்த்திகை (நவம்பர்) 2021 முதல் மாசி (பிப்ரவரி) 2022 வரை எடுத்துள்ள மாதிரிகள் அடிப்படையில் இந்த அறிக்கையை உலக சுகாதார அமைப்பின் கொவிட் ஆய்வுக் குழுத் தலைவர் மரியா வான் கேர்கோவ் வெளியிட்டுள்ளார். இந்தப் புதிய வேற்றுரு, தீவிர நோய் நிலை அச்சத்தை இதுவரை கொடுக்கவில்லை என்றாலும் தொடர்ந்து சில காலமேனும் இது போல் வேற்றுருக்கள் வந்துகொண்டுதான் இருக்கும் என அவர் கூறியுள்ளார்.

ஒரே நேரத்தில் மிக அதிக அளவில் தொற்றுப் பாதிப்பு உள்ள வேளைகளில், ஒரே உடலில் இருவகையான வேற்றுருக்களின் தாக்கம் நேரக்கூடிய நிலையில், புதிய வேற்றுரு உருவாகும் சாத்தியம் பற்றியும் அவர் கூறியுள்ளார். வளர்ந்த நாடுகளில் 75-90% வரை குறைந்தபட்சம் முதல் தடுப்பூசி போடப்பட்டிருந்தாலும் இன்னும் ஆப்பிரிக்க நாடுகளில் 15% தடுப்பூசிதான் போடப்பட்டுள்ளது. உலகெங்கும் 70 சதவீதத்தினருக்கும் மேல் தடுப்பூசி போட்டு முடிக்கையில், தடுப்பூசியின் மூலம் அல்லது தொற்று பெற்றேனும் திரள் நோய்க் காப்பை (HERD IMMUNITY) 60-70% எட்டும்போது மட்டுமே நாம் ஆசுவாசம் கொள்ளமுடியும்.

கொரோனா பல கற்பிதங்களை உடைத்திருக்கிறது. பல வலிகளைக் கொடுத்திருக்கிறது. பல விவாதங்களை முடுக்கிவிட்டுள்ளது. சற்று ஆழமாக கொரோனாவின் தடயங்கள் மீது பயணிக்கும்போது, நாம் ஆறறிவில்லா சேப்பியன்களாய் காலங்காலமாய்ச் செய்த பிழைகளுடன், செயற்கை நுண்ணறிவு வரை படைத்த அறிவாளிகளாக(?) இப்போதும் தொடர்ந்து செய்துவரும் பிழைகள் மட்டுமே இந்த தீநுண்மி (வைரஸ்) போருக்குக் காரணம் என்பது வெள்ளிடை மலை.

15,000 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தோனேசியத் தீவுகளிடை நீர்ச்சந்திகள் வழியாக நீந்தி, ஆஸ்திரேலியாவை அடைந்தபோது, அங்கு கோலோச்சிக்கொண்டிருந்த டைப்ரோடுடான் எனும் பேருயிரிக் கூட்டத்தைக் கூண்டோடு அழித்த கூட்டம்தான் மனிதர்களான நாம்.

சைபீரியாவின் கொடும்பனிக்கு இடையே கொத்துக்கொத்தாக வாழ்ந்துவந்த உலகின் மாபெரும் உடலமைப்பைக் கொண்டிருந்த மாமூத் யானைகள் மடிந்து அற்றுப்போனதும் நம் காலடி அங்கு பட்டபோதுதான். இன்னும் அலாஸ்காவின் தேன்கரடி, மடகாஸ்கரின் யானைப் பறவை போன்றவை அழிந்ததும் மனித வரவால்தான் என்பதை யுவால் நோவா ஹராரி உள்ளிட்ட மனிதகுல ஆய்வாளர்கள் பலர் தரவுகளுடன் நிறுவுகின்றனர்.



இன்னும் எத்தனை உயிரிகளை நான் அழித்திருக்கிறோம் என்பது முழுதாகத் தெரியாது. ஆனால், இப்போது ஈழத்திலும் உக்ரைனிலும் சொந்த இனத்தையே கொல்லும் கொடூர இரைகொல்லிகளான மனித இனம், நிச்சயம் அன்று சுயலாபத்துக்காகப் பிற உயிரிகளைக் கொன்றழித்திருக்கும் என்பதை நம்பாமல் இருக்க முடியவில்லை.

கொரோனாவின் வேற்றுருக்களைப் பற்றி யோசிக்கும்போது, அன்றும் சரி, இன்றும் சரி... சேப்பியன்களான நாம் தொடர்ந்து செய்த அட்டூழியங்களை ஆராயாமல் இருக்க முடியவில்லை. அன்று நெருப்பு கொடுத்த சக்தி, இடையில் வேளாண்மை தந்த பேராசை எனக் கூராயுதங்களுக்கான படிநிலைகள் நமக்குப் படிப்படியாக வந்துசேர இப்போதும் வளர்ச்சி என்ற பெயரில் செய்யும் வன்முறைகள்தான் விலங்குவழி தொற்றும் தீநுண்மி (வைரஸ்) இனங்களை உசுப்பிவிடுகின்றன. போலியோவைப் போல, பெரியம்மை ஏற்படுத்தும் தீனுண்மியைப்போலத் தடுப்பூசிகளால் மட்டும் உலகை விட்டுக் கொரோனா தீநுண்மியை ஒழித்துக்கட்டிவிடமுடியாது.

விலங்குவழித் தொற்று மனிதரிடமிருந்து விரட்டப்பட்ட பின், வேறு உயிரினங்களில் ஒளிந்துகொள்ளும். மறுபடி நடத்தப்படும் சூழலியல் சிதைவில் மறுபடி வூஹானிலோ யாழ்ப்பாணத்திலோ வேறு வடிவில் பிறக்கலாம். உடனே வரிந்துகட்டிக்கொண்டு, “அதனாலதான் அன்றைக்கே தடுப்பூசி வேண்டாம்” எனத் தட்டையாகத் தர்க்கம் செய்ய வந்துவிட வேண்டாம். காய்தல் உவத்தலின்றி, எஸ்.ருக்மிணியின் ‘ஹோல் நம்பர்ஸ் அண்டு ஹாஃப் ட்ரூத்ஸ்’ உள்ளிட்ட கள உண்மைகளுடன் பகிரப்படும் அத்தனை கொவிட் நூல்களையும், ஆய்வுகளையும் வாசியுங்கள். கொவிட் இறப்புக்களைப் பெரியளவில் குறைத்ததில் தடுப்பூசிகளின்

# நகைச்சுவையுடன் பாலியல் அறிவும் ஊட்டும் 'மன்மதலீலை'




## இயக்குநர் வெங்கட் பிரபு பேட்டி

'மாநாடு' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து வெங்கட் பிரபு இயக்கத்தில் வெளியாகவிருக்கும் படம் 'மன்மத லீலை'. அண்மையில் அதன் டீசர்கூட வெளியாகி இருந்தது. தலைப்பு சர்ச்சை, சென்சாரில் 'ஏ' சான்றிதழ் எனப் பரபரப்பாக செய்திகளில் அடிபட்டுவரும் இப்படம் பற்றி வெங்கட் பிரபுவுடன் உரையாடியதிலிருந்து...

**முன்னணிக் கதாநாயகர்களை வைத்துப் படம் இயக்கி வந்த நீங்கள், திடீரென வளர்ந்து வரும் நாயகன், நாயகிகளைக் கொண்டு ஒரு படம் எடுத்தது ஏன்?**

நாயக விம்பம், நிதி போன்றவை என்றைக்குமே எனக்குத் தடையாக இருந்ததில்லை. கொரோனா இரண்டாம் அலையின்போது, த்ரில்லர், ஹாரர் படங்களுடன் சீரியஸான படங்களும் அதிகமாக வந்து கொண்டிருந்தன. ஏற்கெனவே கொரோனாவால் நிறைய இழப்புகளைச் சந்தித்து அனைவரும் மனம் நொந்துபோய்க்கொண்டிருந்த நேரத்தில், மனநிலையை மாற்றக்கூடிய, மனதுக்கு உற்சாகம் தரக்கூடிய கதை ஒன்றை படமாக்கலாம் என்று நினைத்து எடுத்ததுதான் 'மன்மத லீலை'.


'மாநாடு' படத்துக்கு அதிக அளவில் துணை நடிகர்களை வைத்து படமாக்க முடியாத சூழ்நிலை இருந்தபோது, கிடைத்த இடைவெளியில் இப் படத்தை எடுக்கத் தொடங்கினோம். இப்படியொரு ஜாலியான படம் பண்ணலாம் என்று எனது உதவி இயக்குநர் மணியிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது, என்னிடம் ஒரு கதை இருக்கிறது என்று சொல்லி முழு திரைக்கதையையும் எழுதித் தந்தார். முதல் முறையாக நான் வேறொருவரின் கதையை இயக்கியிருக்கிறேன். என்னுடைய தம்பி பிரேம்ஜி இசையமைத்திருக்கிறார். அப்பா கங்கை அமரன் பாடல்களை எழுதியிருக்கிறார். முதலில் '20/20' என்றுதான் தலைப்பு வைத்தோம். பிறகு நாயகனாக நடித்துள்ள அசோக் செல்வன்தான் இந்தத் தலைப்பைப் பரிந்துரைத்தார். இதைவிடப் பொருத்தமான தலைப்பு கிடைக்காது என்பதால் உடனே சூட்டிவிட்டோம்.

**பாலியல் கதைகளைக் கொண்ட படங்களின் தேவை நமக்கு இருக்கிறதா?**

நிச்சயமாக இருக்கிறது. பாலியல் படங்கள் நல்ல பாடங்களைக் கற்றுக்கொடுக்கும். இந்தப் படமும் அதைத்தான் செய்கிறது. இது மலிவான, இரண்டாம் தரமான வகையைச் சேர்ந்த படம் அல்ல. விரசமோ, முகச்சுளிப்போ இருக்காது. ஹாலிவுட்டிலும் பாலிவுட்டிலும் பாடம் கற்றுக்கொடுக்கும் 'அடல்ட் காமெடி', 'அடல்ட் ரொமான்ஸ்' வகைப் படங்கள் தொடர்ந்து வருகின்றன. தமிழில் சுத்தமாக இல்லை என்றே சொல்லிவிடலாம். பாக்யராஜ் சார் அந்த ஜானரில் இலைமறை காயாக முயன்று வெற்றி பெற்றிருக்கிறார். அவரது பாணியை அடியொற்றி, இன்றைய இளைஞர்களுக்கு படம் எடுத்தால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இந்தப் படத்தை எடுத்திருக்கிறேன். 'அமெரிக்கன் பை' மாதிரி படங்களை இங்கே ஓபனாக எடுக்க முடியாது. நகைச்சுவையுடன் செக்ஸ் எஜுகேஷன் கொடுத்தால் நாம் ரசிப்போம். அதைத் தான் முயன்றிருக்கிறோம். நண்பர்கள், காதலர்கள், தம்பதி கள் என பெரியவர்கள் வித்தியாசம் இல்லாமல் விழுந்து விழுந்து சிரித்தப டியே இதை ரசிக்கலாம்.

**என்ன கதை?**

2010, 2020 என பத்து ஆண்டுகள் இடைவெளியில் இரண்டு கால கட்டங்களில் நடக்கும் கதை. இரண்டும் ஒரு புள்ளியில் இணையும் போது இன்னும் சுவாரஸ்யம் கூடிவிடும். ஒரு ஆண், இரண்டு டைம் லைன்களில் மூன்று பெண்களிடம் மாட்டிக்கொள்கிறான். அந்த மூவரில் ஒருவர்



அவனுடைய மனைவி. அந்தச் சிக்கலி லிருந்து அவன் தப்பிக் கிறானா இல்லையா என்பதுதான் கதை. 'மாட்டிக் கொள்ளாதவரை எல்லா ஆண்களும் ராமர்களே – இப்படிக்கு மாட்டிகொண்டவர்' என்று படத் தலைப்புக்கு கீழே ஒரு டேக் லைன் கொடுத்துள்ளோம். அதுதான் படத்தில் நாயகனின் நிலை.

**எதற்காக 'ஏ' சான்றிதழ்?**

படத்தில் 'லிப் லாக்' முத்தக் காட்சி இருக்கிறது. அதற்காகக் கொடுத்துவிட்டார்கள். முத்தக் காட்சியைப் படமாக்கும்போது ஒரு மறக்க முடியாத சம்பவம். அன்று அசோக் செல்வனும் சம்யுக்தா ஹெக்டேயும் மழைக்காட்சி ஒன்றில் நடிக்கவேண்டும். அதை எடுத்துவிடலாம் என்று அசோக் செல்வனிடம் சொன்னேன். அவர். 'அண்ணா.. எனக்கு உள்ளுக்குள் காய்ச்சல் அடிப்பதுபோல் இருக்கிறது.. மழைக் காட்சியை இன்னொரு நாள் வைத்துக்கொள்ளலாமா?' என்றார். சரி என்று கூறி, அன்று 'லிப் லாக்' முத்தக் காட்சியை எடுத்து முடித்தோம். அந்தக் காட்சி படமாக்கப்பட்ட மூன்றாம் நாள் அசோக் செல்வனுக்கு கொவிட் தொற்று உறுதியானது. கரோனாவுடன் தான் நடித்திருக்கிறார். ஆச்சரியப்படுத்தும் விதத்தில் கதா நாயகிகளுக்கோ மற்றவர்களுக்கோ கொவிட் தொற்றவில்லை.

**நடிகர்களின் பங்களிப்பு எப்படி அமைந்தது?**

இது போன்ற படங்கள் வளரும் நட்சத்திரங்களின் நடிப்புத் திறமைக்கு சவால்தான். கல்லூரி முடிக்கும் கட்டத்தில் இருக்கும் நாயகன், பத்து ஆண்டுகள் கழித்துத் திருமணமான நாயகன் என இரண்டு தோற்றங்களில் நடிக்கத் தயாராக வேண்டும் என்று அசோக் செல்வனிடம் சொன்னேன். அதற்காகத் தன்னை மாற்றிக்கொண்டார். இந்தப் படத்துக்குப் பிறகு திரைவாழ்வில் அவருடைய நிலை உயரும். அசோக் செல்வனின் மனைவியாக ஸ்மிருதி வெங்கட்டும் அவருடைய தோழிகளாக சம்யுக்தா ஹெக்டே, ப்ரியா ஆகியோரும் சிறப்பாக நடித்தி ருக்கிறார்கள்.

**உங்கள் அப்பா கங்கை அமரனும் பெரியப்பா இளையராஜாவும் இணைந்துவிட்டார்கள். இசையமைப்பிலும் இணைந்து பணியாற்றுவார்களா?**

இந்த வருடமே பெரியப்பாவின் இசையில் அப்பா பாடல்கள் எழுதுவார் என்று எதிர்பார்க்கலாம்.

**அடுத்து?**

தெலுங்கில் நாகசைதன்யா நடிக்கும் படத்தை இயக்கவிருக்கிறேன். 'மாநாடு' படத்தை இந்தியில் இயக்கும் வேலைகளும் நடந்துவருகின்றன.

---

**கொரோனா ...**

பங்கு அளப்பரியது என்பதை அறிந்துகொள்ளலாம்.

இப்போதைய கேள்வி, இனி விலங்குவழி தீநுண்மிகளின் தாக்கம் மோசமாக இல்லாதிருக்க, அன்றைய சேப்பியன்கள் அழித்தொழித்த உயிரிகளின் புதைபடிவங்கள்போல நாமும் மாறிவிடாமல் இருக்க ஒரே வழி 'ஒற்றை நலம்' எனும் சிந்தனை மட்டுமே. இனி நலம் என்பது, என் கணையம் மட்டும் ஒழுங்காய்ச் சுரந்து நலமாயிருப்பதல்ல. என் மூச்சுப் பயிற்சியினால் என் ஆழ் மனம் அமைதியுடன் இருப்பதல்ல. நான் நின்றுகொண்டிருக்கும் நிலத்தின் அடியில் நெளிந்து ஊரும் மண்புழு நலமாயிருக்கவேண்டும்.

பக்கத்துத் தோட்டத்தில் நிற்கும் பூவரசு மரத்துப் பூவில் சுரக்கும் தேன் கலப்படமாகாமல் நலமாய் இருக்கவேண்டும். அதை உறிஞ்சும் தேனீயோ தேன்சிட்டோ நலமாக இருக்க வேண்டும். வானில் பறக்கும் இருவாச்சியோ குளத்தின் ஓரம் நிற்கும் நாரையோ வயிற்றுவலியுடன் அவதிப்படக்கூடாது. அதன் வாயில் இருக்கும் மீனில் வோதியல் (இரசாயன) கழிவு எஞ்சியிருக்கக்கூடாது. மீன், நாரை, மண்புழு, தேன்சிட்டு எல்லாம் நலமாக இருந்தால் மட்டும்தான் நாம் அனைவரும் நலமாயிருக்க முடியும். இந்த அத்தனையின் நலத்தில்தான் கொரோனாவின் முடிவும் இருக்கிறது.

**கட்டுரையாளர்**
**ஒரு ஆயுள்வேத மருத்துவர்**

# படையினரின் ஆட்லறிகளைக் கைப்பற்றிய புலிகள் படையினருக்குத் திருப்பி அடித்தார்கள்

கமலநாதன்

திசாநாயக்க என்ற இயற்பெயரைக் கொண்ட நபர் படைத்தரப்பின் சிறப்புப் படையணியில் 8 பேர் கொண்ட வேவுப் படையணியில் கடமையாற்றியவர். இவரது செயற்பாடுகளால் இவரை 'தலயா' என்று சிறப்புப் பெயர்கொண்டு படைச் சிப்பாய்கள் அழைத்தார்கள். புலிகளின் பகுதிக்குள் ஊடுருவி, வேவு பார்த்து அந்தப் பகுதிகளில் திடீர்த் தாக்குதல்களை நடத்தி அந்த இடத்துக்கு மேலதிக படையினரை அழைத்து நிலைகொள்ள வைத்துவிட்டு அடுத்த இலக்கை நோக்கி நகர்வதே இவரது வேலையாக இருந்தது. திசாநாயக்க வெனச யூரியூப் தளத்தில் தனது அனுபவங்களை இவ்வாறு பதிவு செய்தார்.

1998இல் படைப்பிரிவில் சேர்ந்தேன். சிறப்புப் படையணியில் அல்பா குரூப்பில் இணைந்தேன். ஒட்டுசுட்டான் படை முகாமும், சம்பத்நுவர காவல் நிலையமும் புலிகளால் கைப்பற்றப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் 223ஆம் படைப்பிரிவுடன் வெலி ஓயாவில் களமிறக்கப்பட்டேன். எம்மை உலங்கு வானூர்தி மூலம் அங்கு களமிறக்கியபோது வானூர்தியைத் தரையில் இறக்கித் துருப்புகளை இறக்கும் நிலை இருக்கவில்லை. உலங்கு வானூர்தியை ஓரளவு உயரத்தில் பதித்து எம்மைக் குதிக்க வைத்தார்கள். அதுமிக வேகமான செயற்பாடு. இல்லாவிடில் புலிகள் அந்த இடத்துக்கு எறிகணைத் தாக்குதல்களை நடத்துவார்கள் என்ற பயம் இருந்தது. பின்னர் தாளையடி, எழுதுமட்டுவாழ், கிளாலி லைனில் கடமையாற்றினேன்.

அதன் பின்னர் ரிறாவ் குரூப்புக்கு மாற்றப்பட்டேன். இது ஆழ ஊடுருவும் சிறப்புப் படையணி. முதலில் தொப்பிகல பகுதிக்கு அனுப்பப்பட்டேன்.




பின்னர் 2008இல் மன்னார் மல்வத்து ஓயா படை முகாமுடன் இணைக்கப்பட்டேன். அங்கிருந்து மன்னார் கட்டுக்கரைக் குளம் பகுதியில் புலிகளால் அமைக்கப்பட்டிருந்த பெரிய காவலரணை வேவு பார்த்தேன். அங்கு புலிகள் முக்கோண வடிவிலான காவலரண் ஒன்றை அமைத்திருந்தார்கள். அதை மாதிரியாக வைத்துப் பயிற்சி எடுத்தோம். அந்தக் காவலரண் பகுதிக்குள் திடீரெனப் புகுந்து ஆர்.பி.ஜி. அடித்து அவர்களுக்கு அதிக இழப்புகளை ஏற்படுத்திவிட்டு உடனேயே திரும்பினோம்.

### மடுப் பகுதியில் வேவு

நான் வேவு பார்த்த பகுதிகளில் மடுப் பகுதி வேவு மிகவும் கஸ்ரமானது. இந்தக் காட்டுப்பகுதிக்குள் புகுந்து சென்றால் அதன் தடயங்களை அழித்துச் செல்வதில் அதிக சிரமம் இருந்தது. புதர்களை விலக்கிவிட்டு முன்னேறிச் சென்றால் அவை அப்படியே இருக்கும் என்பதால் அணியில் கடைசியாக வருபவர் அவற்றை முன்பிருந்ததுபோல சரிப்படுத்த வேண்டியிருந்தது. மடு வீதி கடுமையாக உடைந்து கிடந்தது. நாம் வரைபடத்தை வைத்து முன்னேறிச்செல்லும்போது வரைபடத்தில் இல்லாத புதிய வீதிகளைப் புலிகள் அமைத்திருந்தார்கள். அதனால் முன்னேறுவதில் குழப்பங்கள் இருந்தன. எமது அணியிலிருந்த ஜயலத், பிரியந்த ஆகிய இருவரும் மிக நுட்பமாக வேவு பார்க்கக் கூடியவர்கள். புலிகளின் சிறிய நடமாட்டத்தைக்கூடக் கண்டுபிடித்து விடுவார்கள்.

மடு வீதியில் பிக்கப் வாகனம் ஒன்றில் புலிகள் வந்து இறங்கியபோது திடீரெனத் தாக்கினோம். அந்தத் தாக்குதலில் பெண் புலிகள் மூவரும் ஆண் புலிகள் இருவரும் இறந்தார்கள். அவர்களது உடல்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றினோம்.

ஆள்காட்டி வெளிப்பகுதிக்கு வேவு பார்க்கச் சென்றபோது புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கவில்லை. ஆனால் அவர்கள் நடந்துசெல்லும்போதும் சைக்கிளில் செல்லும்போதும் இடையிடையே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு செல்வதை அவதானித்தோம்

ஆள்காட்டி வெளிப்பகுதிக்கு வேவு பார்க்கச் சென்றபோது புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கவில்லை. ஆனால் அவர்கள் நடந்துசெல்லும்போதும் சைக்கிளில் செல்லும்போதும் இடையிடையே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு செல்வதை அவதானித்தோம். அவர்களின் நோக்கம் எல்லா இடங்களிலும் அதிகமான புலிகள் இருப்பதாகக் காட்டுவதாகும். அதை அவதானித்த பின் மிக இலகுவாக ஆண்டான் குளம் பெரிய துயிலுமில்லப் பகுதியை இலகுவாகச் சென்றடைந்தோம். எமது பிரிவு வேவு பார்த்து ஊடறுத்துத் தாக்கிய பின்னர் அந்த இடத்துக்குப் புதிய படையணியை அழைத்து அந்த இடத்தைப் பலப்படுத்திவிட்டு அடுத்த பகுதிக்குச் செல்வோம்.

அதன் பின்னர் வெள்ளாங்குளம் வரை சென்றோம். அங்கு புலிகள் பெரிய தடுப்பணை ஒன்றை அமைத்திருந்தார்கள். அங்கு நெருங்க முடியாத சூழல் இருந்தது. எமது மேலதிகாரிகளுக்குத் தொடர்பெடுத்து நிலமையை விளக்கினோம். அவர்கள் கூறினார்கள், "உங்களின் மாற்றுத் திட்டத்தைக் கூறுங்கள்" என்று. இந்தப் பகுதியில் நான் தலைமை தாங்கிச் சென்றபோது எமது அணியில் ஒருவர் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார். எனக்குக் கோபமும் துக்கமும் அதிகமாக இருந்தது. அங்கு நடந்த கடுமையான தாக்குதல் ஒன்றின் பின்னர் புலிகள் வெளியேறிச் சென்றார்கள். இந்தச் செய்தியை டெல்ரா குரூப்பைச் சேர்ந்த ரேஷான்கே நிலான் சாணக்கவிடம் கூறியபோது அவர், "அங்குள்ள எந்தப் பொருளையும் எடுக்கவேண்டாம் தொட்டால் வெடிக்கும் வகையில் ஏதாவது செய்திருப்பார்கள்" என்று. அவ்வாறு அவதானமாக முன்னேறியபோதும் ஒருவர் மேசை ஒன்றை இழுத்தபோது வெடித்து இறந்தார்.

### ஜெயபுரம் சந்தி

ஜெயபுரம் சந்திப்பகுதியில் வேவு பார்த்தபோது ஒரு பேருந்துத் தரிப்பிடத்தைப் பலப்படுத்திப் புலிகளின் நிர்வாக நடவடிக்கைகள் நடப்பதை அவதானித்தோம். பின்னர் நாம் கொடுத்த தகவலின்படி அந்த இடத்துக்குப் படையினர் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். அதன் பின்னர் நாச்சிக்குடாப் பகுதியில் அமைந்திருந்த புலிகளின் லைன் ஒன்றுக்குள் புகுவதற்கு வேவு பார்த்தோம். எமது வேவின் அடிப்படையில் புலிகளின் ஆளணி குறைந்த பலவீனமான பகுதி எது என்பதைக் கண்டறிந்து அந்த இடத்தினூடாகப் புகுவது வழக்கம். ஏ-32 பாதையை (மன்னார் - யாழ் வீதி) வேவு பார்த்து அங்கு ஒரு கிளை மோரையும் பொருத்தினோம். அந்த இடத்தில் 7 நாள்கள் வேவுப் பணியில் ஈடுபட்டோம். இரவில் மட்டுமே புலிகளின் நடமாட்டம் இருந்தது. விழுந்து கிடந்த பெரிய பாலை மரம் ஒன்றுக்குள் பதுங்கி வேவு பார்த்தோம். காலை 5.30 மணியாகியும் புலிகளின் நடமாட்டம் இருந்தது. விடிந்தால் அவர்கள் எங்களைக் கண்டு விடுவார்கள். அங்கிருந்து நாங்கள் தப்ப வாய்ப்பில்லை என்ற நிலை. நல்லவேளை விடிந்தபோது அவர்களின் நடமாட்டம் இல்லாதுபோனது. அதன் பின்னர் ஜெபுரம் ஊருக்குள் புகுந்தோம்.

### பரந்தன் சந்தி

பரந்தன் சந்தியைப் பிடித்தால் புலிகளை ஒரு பக்கமாக ஒதுக்கிவிட முடியும் என்பது படையினரின் திட்டமாக இருந்தது. எமது அணியிலிருந்த அலிப்பெரோரா என்பவர் சினைப்பர் தாக்குதலில் இறந்தார். பரந்தன் பகுதியில் பெண் போராளிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. ஆர்.பி.ஜி 7, சினைப்பர் அடித்தோம். ஒரு கட்டத்தில் ஏக்கநாயக்க என்பவர் தனது துப்பாக்கியில் ரவைகள் முடிந்த நிலையில் புலிகளின் பங்கருக்குள் பாய்ந்து துவக்கால் அடித்து ஒரு புலி உறுப்பினரைக் கொன்றார். 2009 மாசி மாதம் 3ஆம் திகதி பரந்தன் சந்தியைப் பிடித்தோம். பின்னர் சுண்டிக்குளம் கடற்கரையோரமாக நடந்தோம். அங்கு புதிய பங்கர் லைன் ஒன்றை அமைப்பதற்கு உதவி னோம். அப்போது எமது அணியைச் சேர்ந்த சிறிசேன புலிகளின் சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரது உடலை எடுப்பதற்கு முயற் சிகள் செய்தும் முடியவில்லை. புலிகளே அதை எடுத்துச் சென்றார்கள்.

பரந்தன் பகுதியில் அதிகமான வாகனங்கள் கைவிடப்பட்டிருந்தன. புலிகள் படைச் சீருடை அணிந்துசென்று படையினரின் எறிகணைத் தளம் ஒன்றைக் கைப்பற்றி அங்கிருந்து பரந்தன் பகுதிக்கு எறிகணை அடித்தார்கள். அன்று மாலையில் தொடங்கி சண்டை மறுநாள் இரவு வரை நீடித்தது. இதில் அத்துலுக்குமார, தொம்பா ஆகிய இருவரும் கொல்லப்பட்டார்கள். புலிகள் சில இடங்களில் கென்டைனர் பெட்டிகளை வைத்து மறைத்திருந்தார்கள். வெளியான பகுதிகளாக அவை இருந்ததால் அவ்வாறு திட்டம் தீட்டியிருந்தார்கள். எமது பகுதிக்கு அதிக மக்கள் வந்தார்கள். நாம் நின்ற பகுதிக்குப் பின்னால் அனுப்பினோம். அப்போது வந்த கர்ப்பவதி ஒருவர் தற்கொலைக் குண்டுதாரி என்று எமக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர் குண்டை வெடிக்க வைத்ததால் படையினருக்கும் மக்களுக்கும் அதிக இழப்பு ஏற்பட்டது.எனது வேவுப்பணி மூலம் புலிகள் பலவீனமாக வுள்ள பகுதிகளை அறிந்து அங்கெல்லாம் பின்ன ரங்கில் நின்ற படையினரை அழைத்துப் பலப்படுத்தியதால் புலிகளின் பக்கமிருந்த பெரிய நிலத்தைப் பெரும் இழப்புகள் இன்றி எம்மால் மீட்க முடிந்தது. ■



சாரண்யா

# தங்கத்தை விட விலையுயர்ந்த திமிங்கிலத்தின் வாந்தி...?

தங்கத்தின் விலை உள்நாட்டில் எகிறிக்கொண்டிருக்கிறது. ஆனால் அதைவிடவும் விலையுயர்ந்த கழிவுப் பொருள் ஒன்றைப் பற்றியே நாம் இந்தப் பத்தியில் பார்க்கவிருக்கிறோம்.

கடலில் வாழ்கின்றதும் உயிரினங்களில் மிகப்பெரியதுமான திமிங் கிலத்தைப் பார்த்தாலே பயங்கரமாக இருக்கும். சுறா போன்ற பெரிய மீன்களைக்கூட வேட்டையாடவல்ல திமிங்கலங்கள் மூச்சுவிடுவதற்காகக் கடலின் மேற்புறத்துக்கு வந்து சீழ்க்கை எனப்படும் ஒலியை எழுப்பி யவாறு வாயுவை வெளியேற்றிச் செல்வதை அழகாக நோக்கினும் திமிங்கலத்தின் மூலம் பெரியளவான அச்சுறுத்தல்கள் இருக்கவே செய் கின்றன. ஆனாலும் பல பகுதிகளில் திமிங்கலங்களை வேட்டையாடும் மனிதர்கள் அதிகரித்திருக்கிறார்கள்.

பல பகுதிகளில் நூற்றுக்கணக்கில் திமிங்கலங்கள் கொல்லப்பட்டு வருகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் திமிங்கல இனமே இல்லாது போகும் அபாயமுண்டு என்று எண்ணிய அரசுகள் பலவும் திமிங்கல வேட்டையைச் சட்டவிரோதச் செயல் என்று வரையறுத்துள்ளன. இதனால் திமிங்கலங்களை வேட்டையாடுவோர் கைதுசெய்யப் படுகிறார்கள். அதை மீறி வேட்டையாடுவோரும் உண்டு. அதற்குக் காரணம் திமிங்கலம் வெளியேற்றும் அதன் வாந்திக்கு இருக்கின்ற கேள்விதான்.

> **திமிங்கிலம் தனது உடலிலிருந்து வெளியேற்றிய அம்பரிஸ் எனப்படும் வாந்தி கரையை அடைய பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் ஆகும். இதனால் அது நல்ல மணத்துடன் கிடைக்கவும் வாய்ப்புள்ளது**

### அரிய திரவம் வாந்தி

திமிங்கலம் உண்கின்ற ஊசி வடிவிலான பொருள்களில் பல செரிமாணமாகாத நிலையில் அதன் உள்ளுறுப்பில் சுரக்கும் ஒருவகைத் திரவம் அதை வெளியேற்றுகிறது. அந்தத் திரவமான வாந்தி கழிவு என்றாலும் கடலில் மிதக்கும் தன்மையுடைய அது கடல் உப்புக் காரணமாகவும் கடலின் மேற்புறக் காற்று மற்றும் வெப்பம் காரணமாகவும் மெழுகுபோலத் திரட்சியாகவும் திரவ எண்ணெய் போலும் ஆகிவிடுகிறது. இதை ஆங்கிலத்தில் அம்பர்கிரிஸ் என்கின்றனர். அதாவது திமிங் கிலமானது பீலிக் கணவாய் போன்ற உயிரினங்களை வேட்டையாடி உண்ணும்போது அந்த பீலிக் கணவாயின் ஓட்டை திமிங்கலங்களின் செரிமான அமைப்பால் செரிக்கவைக்க முடியாது. அதனால் இந்த ஓடுகள் திமிங்கிலத்தின் குடலில் சிக்கிக்கொள்ளும். இந்த ஓட்டினால் திமிங்கிலத்தின் உள் உறுப்புகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க இந்த ஓட்டை சுற்றி திமிங்கலத்தின் செரிமான அமைப்பிலிருந்து ஒரு சிறப்பு வகை திரவம் உற்பத்தியாகி மூடிக் கொள்கிறது. அதுவே அம்பர் கிரீஸ். இதற்குத்தான் அதிக மவுசு...!

### ஏன் மவுசு...?

தமிங்கலத்தின் வாய் வழியாக வெளியேறும் இந்தத் திடக்கழிவுப் பொருளானது வெள்ளை, சாம்பல் கறுப்பு நிறங்கள் கலந்து இருக்கும். இதை நறுமணப் பொருள்கள் மருந்துகள், பாலியல் மருந்துகள் தயாரிப்பு எனப் பலவற்றுக்கும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் கிடைப்பதோ அரிதாக இருக்கிறது. இதனால்தான் இதற்கு அதிக மவுசு இருக்கிறது. இந்தத் திமிங்கில வாந்தி எண்ணெய் நிறைந்தது. இது நீள் வட்ட அல்லது வட்ட வடிவத்தில் காணப்படும். இது கடல் நீரில் தொடர்ந்து மிதந்து பயணம் செய்வதால் அலைகளால் உருட்டப்பட்டு அத்தகைய வடிவம் ஏற்படுகிறது. இந்த வாந்தியின் மணம் முதலில் கெட்ட நாற்றம் கொண்டதாக இருக்கும். ஆனால் காலம் செல்லச் செல்ல, உலர்ந்த பிறகு அது நறுமணமாக மாறும். வாசனை திரவியத்தின் வாசனை காற்றில் விரைவாக கரைவதைத் தடுக்க அம்பெர்கிரிஸ் ஒரு நிலைப்படுத்தியாக பயன்படுத்தப்படுகிறது.

திமிங்கிலம் தனது உடலிலிருந்து வெளியேற்றிய அம்பரிஸ் எனப்படும் வாந்தி கரையை அடைய பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் ஆகும். இதனால் அது நல்ல மணத்துடன் கிடைக்கவும் வாய்ப்புள்ளது. திமிங்கல வாந்தி எனும் அம்பர்கிரிஸ் எத்தனை பழையதோ, எத்தனை பெரியதோ அதற்கு அதிக விலை வழங்கப்படும். நாய்கள் அம்பெர்கிரிசின் வாசனையால் ஈர்க்கப்படுவதால், கடலோரப் பகுதிகளில் அம்பெர்கிரிஸை வர்த்தகம் செய்யும் நபர்கள் சிறப்புப் பயிற்சி பெற்ற நாய்களை வைத்திருக்கிறார்களாம்....!

### வாந்தியின் பயன்பாடுகள்

சீனாவில் பாலியல் திரவ மருந்து தயாரிக்க அம்பெர்கிரிஸ் பயன்படுத் தப்படுகிறது. அரபு நாடுகளில் இது உயர் தரமான வாசனைத் திரவியங் களை தயாரிக்க பயன்படுகிறது. உலகெங்கிலும் பல நூற்றாண்டுகளாக அம்பெர்கிரிஸ் ஒரு வாசனை திரவியமாகவும், மருந்தாகவும் பயன்படுத் தப்படுகிறது. சர்வதேச பயணிகளான மார்கோ போலோ போன்றோரின் பயணக் குறிப்புகளிலும் அம்பெர்கிரிஸ் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயுர்வேதத்தைத் தவிர, யுனானி மருத்துவத்திலும் அது பயன்படுத்தப்படு கிறது. இது மூளை, உடல், நரம்பு மற்றும் பாலுறவு பிரச்சனைகளுக்கு பல்வேறு மூலிகைகளுடன் பயன்படுத்தப்படுகிறது.



குழம்பி வடிவில் உள்ள இந்த மருந்து பாலியல் பலவீனத்திற்கு, பாலியல் செயல்திறனை மேம்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. திமிங்கல வாந்தியிலிருந்து தயாரிக்கப்படும் ஹப்பே நிஷாத் எனும் மருந்து விந்தணுக்கள் எண்ணிக்கையை பெருக்கவும் மற்றும் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. அம்பெர்கிரிஸ் அரிதாகவே கிடைக்கிறது. அரபு நாடுகளில் திமிங்கல வாந்தி எனும் அம்பர் கிரீசுக்கு பெரும் தேவை உள்ளது. எனவே, அதன் விலை மிக அதிகம். தங்கத்தின் விலையைவிட அதன் விலை அதிகமாக இருப்பதால் இது 'கடல் தங்கம்' அல்லது 'மிதக்கும் தங்கம்' என்றும் அழைக்கப்படுகிறது.

பன்னாட்டுச் சந்தையில் இதன் விலை கிலோ ஒன்றுக்கு 1.5 கோடி ரூபாய் வரை மதிப்பிடப்படுகிறது என்றால் பாருங்களேன்...!





# முட்டைத் தோசை

முட்டை அப்பம் பலருக்கும் பரீட்சயமான உணவு. ஆனால் முட்டைத் தோசை...? அப்படியல்ல. உணவகங்களில் பிரசித்தி பெற்றதும் மாலையில் குறித்த நேரத்தில் தயாராகும் வழமையைக் கொண்டதுமான முட்டை மற்றும் பால் அப்பங்களைப்போல முட்டைத் தோசை வியாபார ரீதியாக பிரபலமாகவில்லை. தோசை என்பது மரக்கறி உணவு வகைகளுக்குள் அடக்கம் என்கிற கருத்துருவாக்கமும் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், பலரும் விரும்பிச் சுவைக்கும் உணவான இந்த முட்டைத் தோசையை எவ்வாறு சமைத்தெடுப்பது என்று இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்**

உழுத்தப் பருப்பு 250 கிராம், பச்சை அரிசி அரைக் கிலோ, வெந்தயம் - 1 தே . கரண்டி, மஞ்சள் தூள் - 2 சிட்டிகை, உப்பு, மிளகு தூள் ஆகியன ஏற்ற அளவில், முட்டை - 8 தொடக்கம்10, நல்லெண்ணெய் அல்லது நெய் - கால் போத்தல், அப்பச் சோட சிறிது, வெங்காயம் - 2, கறிவேப்பிலை, பெருஞ்சீரகம், கடுகு ஆகியன சிறிதளவு, தேங்காய் எண்ணெய் தேவைக்கு ஏற்ப.

**எப்படிச் சமைப்பது**



உளுத்தம் பருப்பையும் அரிசியையும் மூன்று மணி நேரம் நீரில் ஊறவைக்கவேண்டும். தோல் நீக்கிக் கழுவி எடுத்து நீர் சேர்த்து பசுந்தையாக அரைக்கவேண்டும். அரிசியை இடித்துவிட்டு அதை அரிக்கும்போது வரும் குறுணலைத் தனியாக்கி அரித்து மாவைத் தனியாக எடுத்துக்கொள்ளவேண்டும். இரண்டு டம்ளர் அளவு தண்ணீரைக் கொதிக்க வைத்து அதில் அரிசிக் குருணலை இட்டு நன்கு துழாவி சேர்த்துக் கொண்ட பின்பு உடனே அடுப்பிலிருந்து இறக்கிக் கலவையை ஆறவைக்கவேண்டும். பின்பு அரைத்து வைத்துள்ள உளுந்தினுள் இந்தக் குறுணல் கஞ்சியை ஊற்றிச் சேர்த்து மாவையும் சேர்த்துக் கலக்கவேண்டும். நீர்த்தன்மை காணாவிடின் தேவையான அளவு தண்ணீரைவிட்டுக் கூழ்ப்பதமாகக் கரைத்து 10தொடக்கம் 12 மணி நேரம் வரை புளிக்கவைக்கவேண்டும். பின்னர் தாய்ச்சி ஒன்றில் எண்ணெய் விட்டுக் கடுகு, வெங்காயம் , கறிவேப்பிலை , பெருஞ்சீரகம் என்பன இட்டு தாளித்து இறக்கிக் கலந்து வைத்துள்ள தோசை மாக் கரைசலில் ஊற்றி 1 சிட்டிகை அப்பசோடாவும் அளவான உப்பும் இட்டுக் கலக்கவேண்டும். பிறிதொரு பாத்திரத்தில் முட்டைகளை உடைத்து விட்டு அதனுடன் உப்பு , மிளகு தூள் என்பன சேர்த்து அடித்துக் கொள்க .

இறுதியாகச் தோசைக் கல்லில் சிறிதளவு நெய் பூசித் தோசைமாக் கரைசலை மெல்லிய தோசைகளாக வார்த்து அதன் மீது சிறிது நெய்யை ஊற்றி சிறிது நேரம் வேகவிட்ட பின்பு , அதன் மேல் அடித்த முட்டையில் 2 மேசைக் கரண்டியளவில் பரவலாக ஊற்றித் தோசையை மடித்து இருபுறமும் மாறி மாறித் திருப்பிப் போட்டு வேகவிட்டு எடுத்தால் சுவையான முட்டைத் தோசை தயார்.

# மின்வெட்டுப் பரிதாபங்கள்...!

**சிந்தாமணி**

பொருளாதார ரீதியாக நாட்டுக்கு நடுக்கத்துடன் கூடிய கடும் காய்ச்சல் பிடித்திருக்கின்றது. பொருள் பண்டங்களின் விலைகள் எகிறிக்கொண்டிருக்கின்றன. சில பொருள்களை மருந்துக்கும் பெறமுடியாத நிலை



ஏற்பட்டிருக்கிறது. விலையேற்றம், பொருள் தட்டுப்பாடு, பற்றாக்குறை என்கிற நிலமையில் பொருள்களில் கலப்படங்கள், தரக்குறைப்புகள் என்றும் பல தகிடுதத்தங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

போட்டோப் பிரதி எடுக்கச் சென்ற இடத்தில் போட்டோப் பிரதி இயந்திரத்துக்குள் போய்ச் சிக்கிக்கொண்ட தாளை வெளியே எடுக்கின்ற முயற்சியில் தோல்வியடைந்து அந்தத் தாளைச் சிறிது சிறிதாகக் கிழித்து எடுத்துக்கொண்டிருந்த கடைக்காரர் முணுமுணுத்தார். "பேப்பர் தட்டுப்பாடு எண்டு சொல்லிப் பேப்பர் தாறாங்களில்லை. தருகிற அளவையும் குறைச்சு விலையை ஏத்திப்போட்டாங்கள். விலையை ஏத்தினாலும் பரவாயில்லை தரத்தையும் குறைச்சுப்போட்டாங்கள். ஹன்றட் கிராம் பேப்பரப் போட்டால் செவிண்டி கிராம் மாதிரிக் கிடக்கு. அது மிசினுக்க சிக்காமல் என்ன செய்யும்...? இண்டு முழுக்க எனக்கு இதுதான் வேலையாய்க் கிடக்கு" என்று சினந்தார்.

**மிதிவண்டிக்கு ஏற்பட்ட மவுசு**

மோட்டார் வாகனங்களின் இறக்குமதித் தடை நீடித்துவரும் நிலையில் அவற்றுக்கான தேவைகள் நிரம்பி வழிகின்றன. பாவிக்கப்பட்ட நிலையிலான வாகனங்களுக்கும் அதிக கேள்வி நிலவுகிறது. விலையும் உச்சமாக இருக்கிறது. இந்த நிலையில் எரிபொருள்களுக்கும் விலை அதிகரிக்கப்பட்டுவிட்டது. இத்தகு நிலமைகளால் பலரும் மிதிவண்டிகளை நாடத் தொடங்கவும் அவற்றினது இறக்குமதியிலும் தடங்கல்கள் இருப்பதாலும் மிதிவண்டிகளின் விலையும் என்றுமில்லாதவாறு எகிறியிருக்கிறது.

ஆண்களுக்குரிய மிதி வண்டிகள் அறவே சந்தையில் இல்லாத நிலையில் பெண்களுக்குரிய மிதிவண்டிகளின் விலை 40 ஆயிரத்தைத் தொடும் நிலையில் இருக்கிறது. மோட்டார் வண்டியில்லாதவர்களும், எரிபொருள் விலையேற்றத்தால் மோட்டார் வாகனப் பாவனையைக் குறைக்க எத்தனித்தோரும் மிதிவண்டிகளின் பக்கம் சாயத் தொடங்க அவற்றுக்கு ஏற்பட்;ட மவுசால் தான் இந்த விலையேற்றம் என்றும் சொல்கிறார்கள்.

**மின்சாரத்தில் தங்கிவிட்ட மனிதர்கள்**

மோட்டார் வாகனத்தட்டுப்பாடு, எரிபொருள் விலையேற்றம் என்பவற்றால் அவற்றில் தங்கியிருந்து சொகுசு கண்டுவிட்ட - தமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்ட மனிதர்கள் இப்போது மிதிவண்டிகளை நாடத் தொடங்கியிருக்கியிருப்பதைப்போல மின் சாதனங்களில் தங்கிவிட்ட மனிதர்கள் கண்ணீர் வடிப்பதையும் காண முடிகிறது.

அவர்களில் சிலர் தமது அடுத்த கட்ட நகர்வைத் தீர்மானிக்க முடியாமல் தடுமாறிப்போய் நிற்கின்றனர். கிராமம் - நகரம் எனப் பாரபட்சமின்றி இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. கிராமப்புறத் தச்சுத் தொழிலாளி ஒருவர் தற்போதைய மின்வெட்டால் தனது தொழில் முற்றிலுமாக முடங்கிவிட்டது என்றார். ஏன் என்று தேடிப்பார்த்தபோதுதான் தெரிந்தது. இதுவரை காலமும் அவரது தொழில் மின்னில் இயங்குகின்ற இயந்திர சாதனங்களால்தான் தொடர்ந்திருக்கிறது என்கிற உண்மை. அவற்றுக்குப் பழக்கப்பட்ட அவர் அவரிடம் முன்புபோல கைகளால் இயக்குகின்ற தச்சுவேலை உபகரணங்கள் ஒன்றுகூட இல்லை.

கிராமத்து மனிதரான அவர் மாத்திரமல்ல யாழ்ப்பாண நகரில் தையலகம் வைத்திருப்பவர்களில் பலரின் நிலையும் இதுதான். முன்னைய காலங்களில் கால்களால் மிதித்துத் தைத்த தையல் இயந்திரங்களை விடுத்து மின்மோட்டர்கள் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களுக்கு அடிமையாகிய பின்னர் இப்போது மின்வெட்டால் வேலையிழந்து பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பலர்.

இவை தவிர எரிபொருள் நிரப்பு நிலையங்களின் செயலிழப்பு, அலுவலகங்களில் கைவிரல் அடையாள இயந்திரச் செயலிழப்பு, தொலைத்தொடர்புக் கோபுரங்களின் சமிக்ஞையிழப்பு, தொலைக்காட்சி அலைவரிசைகளின் இயக்கமின்மை எனப் பல பரிதாபங்களை ஏற்படுத்தியிருக்கிறது தற்கால மின்வெட்டு.

இந்தப் பரிதாபங்கள் நீடிக்குமா? இல்லையா என்பதற்குக் காலம்தான் பதில். இந்த நிலமைக்கெல்லாம் காரணம் தற்போதைய அரசுதான் என்று சொல்லிக்கொண்டு நாட்டின் தலைவரையும் அவரது குடும்ப ஆட்சியையும் சமூக வலைத்தளங்களில் மக்கள் திட்டித்தீர்க்கிறார்கள். இந்த மக்களின் நினைப்பு இந்தத் தலைவர்களை வேறெந்தத் தேச மக்களோ, வேற்றுக்கிரகவாசிகளோதான் வாக்களித்து ஆட்சியில் வைத்திருக்கிறார்கள் என்பதுபோன்று இருப்பதுதான் பெரும் சிரிப்பு.



# கன்னத்தில் அறைந்த வில் ஸ்மித்...?

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல் நகரில் நடந்த 94 ஆவது ஆஸ்கர் விருது விழாவைத் தொகுத்து வழங்கிய பிரபல நகைச்சுவை நடிகர் கிறிஸ் ராக்கின் கன்னத்தைப் பதம் பார்த்த வில் ஸ்மித் பற்றியே ஹொலிவூட் வட்டாரங்கள் அதிகம் பேசிக்கொண்டிருக்கின்றன.

அந்த நிகழ்வில் வில் ஸ்மித்தின் மனைவி ஜாடா ஸ்மித்தைப் பார்த்து, "ஜிஐஜேன் (ஜிஐஜேன் படத்தின் கதாநாயகி மொட்டை அடித்திருப்பார்) படத்துக்கு தயாராகி கொண்டிருக்கிறீர்களா?" என்று நகைச்சுவைத் தொனியில் கேட்டார். அப்போது ஸ்மித் சிரித்துக்கொண்டிருந்தார். ஆனால் ஜடாவின் முகம் அந்த நகைச்சுவையை அவர் ரசிக்கவில்லை என்பதை வெளிப்படையாகவே காட்டியது. அவரது தலையசைப்பு அந்த நகைச்சுவையை அவர் நிராகரிக்கிறார் என்பதைப் போலவும் காட்டியது. ஜடாவின் முகமாற்றத்திற்குப் பின்னர் மேடை ஏறிச் சென்ற வில் ஸ்மித் திடீரென கிறிஸ் ராக்கின் கன்னத்தில் அறைந்தார்.

இந்தக் காட்சி நிகழ்ச்சிக்காகச் சித்திரிக்கப்பட்டது என நினைத்து ஆஸ்கர் விருது விழா அரங்கில் இருந்த அனைவரும் சிரித்தனர். கிறிஸ் ராக்கேகூட வில் ஸ்மித் தன்னைப் பாராட்டத்தான் மேடை ஏறி வருகின்றார் என்று நினைத்தார். ஆனால் மேடையிலிருந்து கீழறிங்கிய வில் ஸ்மித்தோ, கிறிஸ் ராக்கை நோக்கி "உன் மோசமான வாயை என் மனைவியிடமிருந்து விலக்கியே வை" என்று கோபமாகக் கத்தினார். ஒரு தடவையல்ல இரண்டு தடவைகள் அவர் இதனை அறுத்துறுத்துக் கூறினார். இதனைத் தொடர்ந்துதான் வில் ஸ்மித் ஆத்திரமடைந்தே கிறிஸ் ராக்கை அறைந்திருக்கிறார் என்ற உண்மை அனைவருக்கும் தெரியவந்தது. ஸ்மித்தின் இந்த எதிர்வினையை கிறிஸ் ராக் ஆரோக்கியமாகவே கையாண்டார்.

**"உன் மோசமான வாயை என் மனைவியிடமிருந்து விலக்கியே வை" என்று கோபமாகக் கத்தினார். ஒரு தடவையல்ல இரண்டு தடவைகள் அவர் இதனை அறுத்துறுத்துக் கூறினார்**

இதனால் ஆஸ்கர் விருது விழாவைவிட, வில் ஸ்மித் மேடையில் நடந்துகொண்ட விதமே தற்போது பேசும் பொருளாயுள்ளது. பெரும்பாலனவர்கள் இந்த விவகாரத்தில் வில் ஸ்மித்திற்கு ஆதரவே அளித்திருக்கிறார்கள். அதற்கு முக்கியக் காரணம், மேற்குலகில் காலம் காலமாக திரைத் துறையில் கடந்து போகக் கூடியதாக இருந்த பாடி ஷேமிங் எனப்படும் உருவக் கேலிகளுக்கு ஸ்மித் ஆற்றிய எதிர்வினை பலராலும் பாராட்டப்பட்டிருக்கிறது.

இதில் மிக முக்கிய விடயம் என்னவென்றால் இந்தச் சம்பவத்திற்குப் பின்னர்தான் இந்த ஆண்டுக்கான மிகச் சிறந்த நடிகராக ஆஸ்கர் விருதுக்கு வில் ஸ்மித் தேர்ந்தெடுக்கப்பட்டார். விருதைப் பெற்ற பின்னர் தனது செயலுக்காக அவர் மன்னிப்புக் கேட்டார். ஆஸ்கர் விருதுக் குழுவிடமும் கிறிஸ் ராக்கிடமும் தான் மன்னிப்புக் கோருகிறார் என்று அவர் தெரிவித்தார்.

ஒரு பெரும் நட்சத்திரம் மேடை, புகழ், அவப்பெயர் என்று எதனையும் பொருட்படுத்தாது தனது மனைவி உருவக் கேலிக்கு இரையாவதைப் பொறுக்க முடியாமல் அவர் பக்கம் நின்றிருக்கிறார். அவரது அன்பின் பக்கம் நின்றிருக்கிறார். வில் ஸ்மித் மனைவி போல அலோபீசியா நோயினால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கானவர்களுக்கு ஸ்மித் ஆற்றிய எதிர்வினை பொது வெளியில் எந்த தயக்கமும் இல்லாமல் தாங்களாகத் தெரிய பெரிய நம்பிக்கையை அளித்திருக்கும்.



தமிழ்த் திரைப்படங்கள் பலவும் உருவக் கேலிகளையும், நிறக் கேலிகளையும்தான் மலிந்து கொட்டுகின்ற நிலையில் ஒரு ஹொலிவூட் நட்சத்திரம் அதை எதிர்த்திருக்கிறது. அந்த விழா முடிந்த பின், கிறிஸ் ராக்கிடமும், ஆஸ்கர் நிர்வாகத்திடமும் மன்னிப்பு கேட்ட வில் ஸ்மித், "அன்பு உங்களை பைத்தியக்காரத்தனமான செயல்களைச் செய்யவைக்கும்" என்றார். பின்னர் "இது இப்போது பிரச்சினையல்ல. அனைத்தும் முடிந்துவிட்டது. இருவரும் சமாதானம் ஆகிவிட்டார்கள். நான் அதை உறுதிப்படுத்துகிறேன். இவை எல்லாம் ஒருவகை அன்பால்தான் நிகழ்ந்துள்ளது. இப்போது வில் ஸ்மித்தும் கிறிஸ் ராக்கும் சகோதரர்கள் ஆகிவிட்டனர்" என்றார் பிரபல பாடகரான சீன் கோம்ப்ஸ். ■

# தாவரங்களும் வாசனையை அறியும்

பூவின் நறுமணம், சாக்கடையின் துர்நாற்றம், உணவின் வாசம் போன்று பல்வேறு வாசனை வகைகளை நம்மால் அறியமுடிகிறது. அதே மாதிரி ஒரு தாவரத்தால் வேறு தாவரத்தின் வாசனையை அறிய முடியுமா?

தாவரங்களுக்கு மூக்கு போன்ற உறுப்பு இல்லை. எனினும் கஸ்கட்டா (CUSCUTA - தூத்துமக் கொத்தான்) கொடிக்கு வாசனை அறியும் உணர்வு உள்ளது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கடுகு போன்ற விதையிலிருந்து வளரும் கஸ்கட்டா இளம் தளிர், பற்றிப்படர வசதியாக அருகில் உள்ள தாவரங்களைத் தேடுகிறது. ஏதேனும் தாவரம் அகப்பட்டால், அதன் தண்டில் ஸ்பிரிங் மாதிரி சுற்றிக் கொள்ளும். அந்தத் தாவரத்தின் நீரையும் ஊட்டச்சத்தையும் உறிஞ்சிக்கொள்ளும்.

கஸ்கட்டா விதை முளைத்த பத்து நாட்களில் அந்தத் தளிர் படர வேண்டிய தாவரத்தை எட்ட முடியவில்லை என்றால் மடிந்துவிடும். தாவரத்தைப் பற்றிப்படர்ந்துவிட்டால் அதன் வேர் அழிந்துவிடும். ஹஸ்டோரியா எனும் உறிஞ்சும் உறுப்பு உருவாகி, படர்ந்த தாவரத்தின் நீரையும் ஊட்டச் சத்தையும் உறிஞ்சி, ஒட்டுண்ணியாக கஸ்கட்டா வளரும்.



அருகில் தக்காளிச் செடி இருந்தால் அதன் வாசனையால் ஈர்க்கப்பட்டு, அதன் மீது பற்றிக்கொள்ளும். வாசனையை உணர்ந்துதான் தக்காளிச் செடியை அடைகிறது என்கிற முடிவுக்கு எப்படி வருவது? பென் பல்கலைக்கழக உயிரியலாளர் கான்சுலோ டி மோரேஸ், தொடர் ஆய்வுகளைச் செய்து இதை நிரூபித்திருக்கிறார்.

முதல் சோதனையில் காலியான தொட்டி, பிளாஸ்டிக் செடி நட்ட தொட்டி, நடுவே கஸ்கட்டாவை வளர்த்து சோதனை செய்தார்கள். எதை நோக்கியும் கஸ்கட்டா செல்லவில்லை. இரண்டு தொட்டிகளையும் புறக்கணித்தது.

தக்காளிச் செடியை அருகில் வைத்தபோது அதனை நோக்கி கஸ்கட்டா சென்றது. போதிய ஒளியில் தக்காளிச் செடியை வைத்தாலும் இருட்டில் வைத்தாலும் அதனை நோக்கி கஸ்கட்டா சென்றது. தக்காளிச் செடி பார்வைக்குப் படாமல் நடுவே திரையால் மூடினாலும் தக்காளிச் செடியை நோக்கிச் சென்றது. அதாவது தக்காளிச் செடியைப் பார்வை உணர்வு மூலம் அறிந்து செல்லவில்லை என இந்த ஆய்வுகள் நிறுவின.

அடுத்து கஸ்கட்டா கொடியையும் தக்காளிச் செடியையும் இரண்டு பெட்டிகளில் அடைத்து, இரண்டின் நடுவே குழாய் போன்ற அமைப்பை இணைத்தனர். குழாய் மூலம் தக்காளிச் செடியின் வாசனை பரவும். இந்த வாசனையை நோக்கி கஸ்கட்டா சென்றது.

தொடுவுணர்வு, காட்சி உணர்வு இரண்டும் இந்த இறுதிச் சோதனையில் விலக்கப்பட்டுள்ளன. எனவே மோப்ப உணர்வு கொண்டு கஸ்கட்டா கொடி செல்கிறது என்ற முடிவுக்கு வந்தனர்.

கோதுமைச் செடியா, தக்காளிச் செடியா என கஸ்கட்டா கொடிக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புக் கொடுத்தால், அது தக்காளிச் செடியைத்தான் விரும்பும். ஒரு பக்கம் கோதுமை, மறுபக்கம் தக்காளிச் செடியை வைத்து சோதனை செய்தனர். கஸ்கட்டா தக்காளியை நோக்கிச் சென்றது.

கஸ்கட்டாவைக் கவரும் தன்மை கொண்ட மூன்று வகை நறுமண வேதிப் பொருள்களின் கலவை தக்காளிச் செடியிலிருந்து வெளிப்படுகிறது. ஆனால், கோதுமையில் கவர்ந்து இழுக்கக்கூடிய ஒரே ஒரு வாசனை மட்டுமே உள்ளது. அதாவது வாசனையின் தன்மையை நுட்பமாகத் தாவரங்கள் பிரித்து அறிகின்றன.

தாவரங்கள் வெளியிடும் நறுமண வேதிப் பொருள்களின் கலவையைப் பிரித்து உணர்ந்து, அதற்கு ஏற்ற வகையில் செயல்படுகின்றன. இதுவும் ஒருவகை முகர்தல்தான் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

**கட்டுரையாளர், அறிவியலாளர்**

# பெண்ணெழுத்தைச் சூழும் தடைகள் என்னென்ன?

**திவ்யனா**

தமிழ்ச் சிறுகதை நூறு வயதைக் கடந்துவிட்டது. மக்கள் இதழ்கள், தீவிர இலக்கியம் என்று மொத்தமாகப் பார்த்தால் இன்று ஆண்களை விடவும் பெண்கள் எண்ணிக்கை அளவில் அதிகமாக எழுதுகிறார்கள். நாம் இங்கு தீவிர இலக்கியச் சிறுகதைகளை மட்டும் எடுத்துக்கொள்வோம். பெண்களின் பங்கு இதில் காத்திரமாகவே இருக்கிறது. கவிதைகளை எழுதாமல் நேரடியாகக் கதைகள் எழுதும் பெண்களும் இருக்கிறார்கள். மொழிபெயர்ப்பின் மீது ஈடுபாடு கொண்டு சிறுகதைகளை எழுதும் பெண் எழுத்தாளர்களும் உண்டு.


இவர்கள் பெரும்பாலும் அகவாழ்க்கை தொடர்பாகத்தான் எழுதுகிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக வாசிக்கையில் தனித்த பார்வையற்று, ஒரே மாதிரியான சமூக அவதானிப்பு கொண்ட படைப்புகளாக இருக்கின்றனவா என்பதை நிச்சயம் ஆய்வு செய்யத்தான் வேண்டும்.

பெண்கள் மிகத் தாமதமாகத்தான் கல்வி கற்கத் தொடங்கினார்கள். எழுதக் கற்றுக்கொண்ட பின்பு பெண்கள் யாருடைய உந்துதலும் இல்லாமல் எழுதியிருக்கிறார்கள் என்பது முக்கியம். 50 வருடங்களுக்கு முன்பு ஒரு பெண் தன் பெயரையும் அடையாளத்தையும் மறைத்து எழுத வேண்டியிருந்தது. தன் கணவருக்கும், புகுந்த வீட்டுக்கும் தெரியாமல் எழுத வேண்டிய சூழல்தான் இருந்தது.

இதற்கிடையே கதை எழுதுவதென்பது ஒரு வித அச்சத்தைக் குடும்பத்தினரிடம் ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில் எழுதுதல் என்பது ஒரு வகையில் தன்னை வெளிக்காட்டிக்கொள்ளுதல். அதுவே பெண்கள் எழுதுவதற்கான தடையை ஏற்படுத்தியிருந்தது. இதிலிருந்து வெளிவர முயற்சிகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றனவே தவிர, இன்னும் முழுமையடையவில்லை என்பதே யதார்த்தம்.

தனித்த பார்வை என்பது தன்னைப் பாதித்த ஒன்றை ஒவ்வொரு எழுத்தாளரும் எப்படிக் கைக்கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. அநேகமாக, அத்தனை பெண் எழுத்தாளர்களும் குடும்ப அமைப்பில் பெண்களின் அடையாளம் தொலைந்துபோவது குறித்துத் தொடர்ந்து எழுதிவருகிறார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது குடும்ப அமைப்பு பற்றி மட்டுமே எழுதுகிறார்கள் என்கிற தோற்றம் ஏற்படும். எது ஒருவரைப் பாதிக்கிறதோ எது சார்ந்த அனுபவம் இருக்கிறதோ, எது அவர்களை எழுதத் தூண்டுகிறதோ அதைத்தான் எழுத முடியும். உதாரணத்துக்கு, கடலோடிகளைப் பற்றி எழுத வேண்டும் என்று ஒரு பெண் ஆசைப்படுகிறார் என்று வைத்துக்கொள்வோம், அதை வீட்டின் சமையலறையில் அமர்ந்துகொண்டு எழுதிவிட முடியாது.

எர்னெஸ்ட் ஹெமிங்வே போன்ற எழுத்தாளர்கள் மீனவர்களுடன் வாழ்ந்து அவர்களைப் பற்றி எழுதியது போன்ற அனுபவம் வேண்டும். இது பெண்களுக்கு வாய்க்கும் என்று நினைத்துப் பார்க்க முடியுமா? ஆக, தன்னுடைய வட்டத்தில் தனக்கு பாதிப்பை ஏற்படுத்துவதைத்தான் பெண்கள் இங்கு எழுதுகிறார்கள். இது தனித்த பார்வையைத் தரவில்லை என்றால், பிரச்சினை எழுதுபவர்களிடம் இல்லை.



பணிக்காக வெவ்வேறு தளங்களில் பயணப்படும் பெண்களின் கதைகளில் வெவ்வேறு தளங்களை நாம் வாசிக்க முடியும். இதற்கு காரணம் அவர்களின் அனுபவம் பரந்து விரிகிறது, அது எழுத்தில் தெரிகிறது. வரலாறு பற்றியும், தொல்குடிகள் குறித்தும், காவல்துறையால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் பற்றியும், குழந்தைத் தொழிலாளர்கள் சார்ந்தும் பெண்கள் எழுதுகிறார்கள். இது எப்படித் தனித்த பார்வையற்றதாக இருக்கும்?

பெண்கள் முன்புபோல் இல்லை, எல்லாத் தடைகளையும் தாண்டுகிறார்கள் என்பது மேலோட்டமான கருத்து. 'குருபீடம்' என்றொரு கதை எழுதினேன். சிறு வயதில் பாலியல் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு பெண்ணின் கதை. சிலர் என்னிடம் நேரடியாகவே இது உங்களுக்கு நிகழ்ந்ததா என்று எந்தத் தயக்கமும் இல்லாமல் கேட்டிருக்கிறார்கள். சக பெண் எழுத்தாளர் ஒருவர், கணவனுக்கும் மனைவிக்குமான ஒரு பிரச்சினை குறித்துக் கதை எழுதியிருக்கிறார். அவரிடம், 'உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் ஏதேனும் பிரச்சினையா?' என்று நண்பர்களே விசாரித்ததாகச் சொன்னார். இது மாபெரும் சிக்கல்.

ஒரு பெண் 'தன்னிலை' தொனியில் ஒரு கதையை எழுதுவதற்கே பெரும் தயக்கம் கொள்ள வேண்டியிருக்கிறது. எழுத நினைப்பதையெல்லாம் பெண்கள் எழுத முடிவதில்லை என்பதே யதார்த்தம். கவிதைகளில் பெண்கள் பாலியல் சார்ந்து எழுதியதற்குத் தொடக்கத்தில் வந்த எதிர்ப்புகளை நாம் அறிவோம். அதில் அவர்கள் உறுதியாக இருந்தே பலரின் வாயை அடக்க வேண்டியிருந்தது.

இவையெல்லாம் 'ஐயகோ! நாங்கள் இத்தனை நெருக்கடிகளுக்குள் எழுதுகிறோம்!' என்கிற சுயவிளக்கமோ கழிவிரக்கமோ அல்ல. யதார்த்தம். தன்னைக் கடந்து ஒரு பெண் எதையும் எழுதும்போது பாராட்டுகள் கிடைக்கலாம், ஆனால் அதற்குப் பின் வாழ்க்கை கேள்விக்குறியாகும் வாய்ப்புகள் உண்டு. ஆனாலும், எழுதுகிறார்கள் என்பதே முக்கியம்.

# கிளாப்

## விடாமல் துரத்தினால்தான் வெற்றி




தேசியத் தடகளப் போட்டியில் வென்றே ஆக வேண்டும் என்கிற லட்சியத்துடன் ஆடுகளம் தெறிக்க ஓடிக்கொண்டிருந்த மாநில சம்பியன் கதிர் (ஆதி). விபத்தொன்றில் ஒரு காலையும் தன்னை செதுக்கி வார்த்த தந்தையையும் இழந்து விடுகிறார். இதனால் வாழ்வில் பிடிப்பில்லாமல் உழன்றுகொண்டிருந்தவர், வேறு சில காரணங்களால் முடங்கிக் கிடக்கும் பாக்யலட்சுமி (க்ரிஷா குருப்) எனும் வீராங்கனையைக் கண்டு கொள்கிறார். அவர் மூலம் தனது கனவை கதிரால் வென்றெடுக்க முடிந்ததா என்பது சோனி லிவ் தளத்தில் வெளியாகியிருக்கும் 'கிளாப்' படத்தின் கதை.

விளையாட்டுத் துறையில் மலிந்திருக்கும் அரசியல், நிறுவனம், சாதி, மதம் எனப் பல தடைகளை முதன்மைக் கதாபாத்திரங்கள் எதிர்கொள்வதாகவே 'ஸ்போர்ட்ஸ் டிராமா' வகைப் படங்கள் இருக்கும். இதிலும் அவை கொஞ்சம் இருந்தாலும் உளவியல் ரீதியான சிக்கல், கடந்த காலத்தில் தனிப்பட்ட பகையால் மூண்ட வன்மம், எதிர்காலத்தின் மீது நிழலாகக் கவிழ்ந்து தடையை ஏற்படுத்துவது, அதிலிருந்து மீண்டெழுவது ஆகியவை பார்வையாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் படமாக்கப்பட்டுள்ளது.

லட்சியமும் அதை வென்றெடுப்பதற்கான திறமையும் இருக்கலாம். ஆனால் மாநில, தேசிய அளவிலான போட்டிகளில் தேர்வுபெற வீரர்களும் வீராங்கனைகளும் நடத்தும் போராட்டம் எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது என்பதை உணர்ச்சிகரமான நாடகமாக்கியிருக்கிறார் இயக்குநர். அதற்குத் தன்னம்பிக்கை தெறிக்கும் வசனங்கள் முதுகெலும்புபோல் உதவியிருக்கின்றன. அதேபோல், கதிருக்கும் அவருடைய காதலியும் மனைவியுமான மித்ராவுக்கும் இடையில் ஊடாடும் உறவுச் சிக்கலை இன்னொரு உளவியல் இழையாகக் கோத்திருப்பதும் எடுபடுகிறது.

ஒரு ஸ்போர்ட்ஸ் படத்துக்கான நடிகர்கள் தேர்வு, அவர்கள் தரும் நம்பகமான நடிப்பு, ஆடுகளத்தையும் வீரர்களையும் பின்தொடரும் ஒளிப்பதிவு, போலித்தனமற்ற உரையாடல், உணர்வைக் கிளர்த்தும் இசை (இளையராஜா) என தொழில்நுட்ப அம்சங்கள் அழகாகக் கூடிவந்திருப்பதில் இயக்குநர் பிருத்வி ஆதித்யாவின் ஒருங்கிணைப்பு முழுமையாக வெற்றி பெற்றிருக்கிறது. திரைக் கதை விறுவிறுப்பாக நகர்ந்தபோதும், படத்தின் குறையாகப் பளிச்சென்று தெரிவது ஊகிக்கக்கூடிய பாதையிலேயே கதையோட்டம் நகர்வது.

'யூ டேர்ன்' படத்துக்குப் பிறகு, வலிமையான கதாபாத்திரத்தை ஏற்று நடித்துள்ள ஆதிக்கு இது பெயர் சொல்லும் படங்களில் ஒன்றாகிவிடுகிறது. கிராமத்துப் பின்னணியிலிருந்து வந்து, விளையாட்டு அரசியலை எதிர்கொள்ளமுடியாமல் முடங்கி, பின் கதிரின் பயிற்சியைப் பற்றிக்கொண்டு எழும் பாக்யலட்சுமியாக க்ரிஷா குருப் நடிப்பில் அபாரம்! அகான்க்ஷா சிங், நாசர், ராம்தாஸ் உள்ளிட்ட மற்ற முக்கிய துணை நடிகர்களின் நடிப்பும் யதார்த்தம். ஒட்டுமொத்தமாக உற்சாகமும் தன்னம்பிக்கையும் தரும் விளையாட்டுப் படமாக வசீகரிக்கிறது 'கிளாப்'.

---



## தம்பிடித்தபடி ராஜநடை

சிலரால் சாதாரணமாக மூச்சை தம் பிடித்துக்கொள்ளமுடியாது. ஆனால், குரோஷியாவைச் சேர்ந்த இளைஞர் விட்டோமிர் தண்ணீருக்கடியில்கூட மூச்சை தம் பிடித்து வைத்துக்கொள்வதில் வல்லவர். அண்மையில் தண்ணீருக்கடியில் மூச்சை விடாமல் 107 மீட்டர் தொலைவு நடந்து காட்டியிருக்கிறார் விட்டோமிர். தண்ணீருக்கடியில் இருக்கும்போது மிதந்து மேலே வந்து விடக்கூடாது என்பதற்காக இரண்டு கிலோ எடையுள்ள பொருளையும் சுமந்தே விட்டோமிர் நடந்திருக்கிறார். 3 நிமிடங்கள், 6 விநாடிகள் வரை மூச்சை தம் பிடித்துக்கொண்டு நடந்த விட்டோமிரின் இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்திலும் இடம்பிடித் திருக்கிறது. விட்டோமிரின் இந்த சாதனையும் அவருடைய வித்தியாசமான பயிற்சிகளின் வீடியோக்களும் சமூக ஊடகங்களில் வெளியாகி வைரல் ஆகியிருக்கின்றன.

## ஆஷ்லே அதிரடி

டென்னிஸில் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்ட்டி 25 வயதில் ஓய்வை அறிவித்திருந்தாலும், அவருடைய விளையாட்டுப் பயணம் சற்றே வித்தியாசமானது. 2011ஆம் ஆண்டில் விம்பிள்டன் ஜூனியர் பட்டத்தை வென்ற ஆஷ்லே, 18 வயதை எட்டியபோது டென்னிஸிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்து அதிர்ச்சியூட்டினார். பின்னர் கிரிக்கெட் விளையாடச் சென்றுவிட்டார். பின்னர் கிரிக்கெட்டுக்கு முழுக்குப் போட்டுவிட்டு மீண்டும் டென்னிஸ் விளையாட 2017இல் வந்தார். டென்னிஸுக்கு வந்த பிறகு 2019 பிரெஞ்ச் ஓபன், 2021 விம்பிள்டன், 2022 ஆஸ்திரேலிய ஓபன் என பட்டங்களைத் தட்டிச் சென்று முதல்நிலை வீராங்கனையாக உருவெடுத்தார். தற்போது மீண்டும் டென்னிஸில் இருந்து விலக ஆஷ்லே முடிவு செய்துள்ளார். அடுத்து என்ன செய்வாரோ தெரியவில்லை!



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781